தேடினன்சிவனைத்தெளிந்தொக்கணமால்

வசனம்.

அப்போது தெளிவடைத்த விஷ்ணுவானவர் அக்கினியின் விடத்திலிருந்து எழுந்தருளிய பரமசிவனைப்பாடினார் வந்தனஞ்செய்தார் பரமசிவனும் டாவக்கூத்தாடினார் அவ்விஷ்ணுவும் ஒருவர் யாவருமும் மனவிடக்கூடாத இச்சையை தெரிவித்து கூடினேன் இதனுல் செய்தபாக்கியத்தாலென்றார் சிவன் விஷ்ணுவுக்கு வேண்டுவரங்கொடுத்தாரென்றறிக.

சிவன்-தரு-இ-ம்-ஆதிதாளம்-கல்யாணி

பல்லவி.

திருமுடிக்கண்டாயபக திருமுகமே
திருமுடிகண்டபோ

அநுபல்லவி.

திருமுடிகாணக்கண்டைய தேவர்முனிவர்போல
மனதுள்வேதத்தில்போற்றி மாதவத்தீர்கள்ளரு திரு

சரணங்கள்.

அண்டமெட்டியேபெய்தும் அகண்டமெரிகின்ற
வெண்டிசையிலிருந்து பெய்ப்படியெரிகின்ற திருமு

பாதாளத்திலினுள்ள பணிகளெல்லாம்போற்று
மேதலத்திலுதி விண்ணவரைவந்தேச திருமு

தாண்டிகமாகவேதமுறைக்கும் நாமுந்தேடி
சட்டிக்கைக்குவந்தாய் சதுர்முகபிரமாவே திருமு

சிவன்-விருத்தம்.

மெய்தனையுணராமல் மேதினிதனிலேயேபோ
அய்யமில்லாமல்நீதான் அரன்முடிகண்டேனென்று
பொய்தனையுரைத்தாயிந்த பூமனைசாக்ஷிபோ
கைதனைசாபமிட்டேன் கழுதைபுட்டையாய்போவாய்

வசனம்.

கேளும் அகதையிவ்வு தாழம்பூவே என்பிரமன் தன்பாலிருந்து எனக்கு பொய்சொன்னதாலே உனக்கு நீ இனிமேலாகது கழு தைபுட்டையாய்போக சாபமிட்டேன் போபோ தாழம்பூவே



சிவன்பிரமாவுக்கு-சாபநிவர்த்திக்கு-சாபமிட்டது

த்விபதை.

இசைமுகன்றனக்கு சீர்ந்ரேயானேன்
பிசைக்காக பொய்யை நீ பேசினதாலே
கருதுருசேரியில் கழுவனிநீயும்
விராடனே இவம்பானதோட்டுக்கி
ஜென்மித்து பெண்ணாக சேருடியவருடன்
அன்புடன்வளர்த்த ராதியென நமைக்க
சாபமிட்டேன் சேருமென்றார்
கோபமாய்பிரமனை கூவியேப்போ
பொறுமையாக நீ பொய்சொன்னதாலே
பேருதிருமனிக்கினி பிள்ளையாய்பிறந்து
பதினாருவயதினில் பரத்திற்சேர்ந்து
விதிப்படி ஆதியே விவாகமுஞ்செய்து
பெண்பாலர்நால்வர் ஆண்பாலர்மூவர்
கன்னியர்களேழு பாலரைபெற்று
தவமதுசெய்து சாலவதியும்
பலமதையொழித்து பிரமலோகத்தில்
சிரேஷ்டபிரமாவென்று சிருஷ்டித்தவனையும்
இரட்சிக்கவுவரோ முராணுடனே
கட்டிசெய்யாமல் கருடவாகனுடனே
பட்சமாயிருந்து பிரமலோகத்தில்
எப்போதும்போலே புவிதனிலிருந்து
தப்பில்லாதண்டிம் சாலவிதமாக
செடிவெனசாபமும் நிருசாரணித்து
அடவுடனேவிதை பதனமும்போ

பிரமதேவன்-விருத்தம்.

சாபமேசமுகற்கு சங்கரனளித்தபின்பு
பாபமோமுன்னும் செய்த பழியதுசேர்ந்ததென்று
தாபமாய்பிரமதேவன் சாலவிதத்தைப்பார்த்து
சோபுமுதிசைகி செல்லுவான்சொல்லுவாரே

வசனம்.

இப்பிரகாரமாக பரமசிவன் பிரமனுக்கு சாபங்கொடுத்த பிறகு சாலவதியைபார்த்து சேபமை சொல்கிறவிதம் எப்படி யென்றால்

பிரமதேவன்-தரு-இ-ம்-அடதாளம்-கல்யாணி.

பல்லவி.

மோசம்போனேனையோ-சம்பசிவன்
சாபம்வந்ததையோ

அநுபல்லவி.

ஈசனார்கைவைரசவுடன்போய்
பேசிமெய்பேசாமல்மாசடையும்படி. மோச

சரணங்கள்.

சாம்பசதாசிவன்சடைமுடிக்கண்டேனென்று
விம்புபேசிபாச்சிமெல்லியுடனே சேர மோச
யீசன்சடைமுடியிலிருந்தபூவும்
வெனக்காகசாட்சிசொல்ல வேதகிதவிக்கவும் மோச
சகமாதிவசெத்தலை சிரீவடித்திருக்காமல்
அகமாகபேசியேஅரிவொனமுமென்னுமல் மோச

பொது-விருத்தம்.

சிவசெங்காபுரத்தில்மேவி தேசிகர்குலத்திற்றோர்
தவமதுசெய்யவெண்ணி தனையுமில்லாததாலே
கவனமாயீசன்தன்னை கரித்திலேகைத்துக்கொண்டு
புவியினில்பேர்படைத்த பேருழிமுனியும்வந்தார்

வ-ம். அதேசதெப்படியென்றால் சிவசெங்காபுரத்தில் பிராமண குலத்திலுதித்த பேருழிமுனி வருகிற விதங்காண்க.

சிவசெங்காபுரம்-பேருழிமுனிவருகிற

தரு-இ-ம்-அடதாளம்-தேருபதி

பல்லவி.

பிரபமாபேர்பெத்த பிராமணருதித்த
பேருழிமுனியும்வந்தார் மறைகுலத்து பேருழிமுனியும்வந்தா[ர்]

அநுபல்லவி.

திரிபுரத்தையெரித்த சிவனையேபணிந்து
ஜெயமாலைக்கவிலேக்கிதிருநீரொட்டியணிந்து பிர



சரணங்கள்.

மாதவத்தோர்கள் மகிழ்ந்ததுதினம்வேத்தி
வணங்கும்சிவனுட மலரடிகளைபோற்றி பிர
அடிமுடிக்காண அகண்டவெளிதாண்டி
ஆதிமலயன்கரை அரனையிகவும்வேண்டி பிர
சிவசெங்காபுரந்தனில் செழித்துமேவாழ்கின்ற
சீர்பேருழிமுனி செகத்தினிலேயன்று பிர

பேருழிமுனிசொல்-விருத்தம்.

எத்தனுக்கரிதிருக்கு வேலைசெய்சிவகேளாய்
சத்திரவதனம்போன்ற தையலர்க்கரசியான
கத்தமாமலர்சேர்காமதேவிபோகடியிங்கை
வைத்திடச்செய்யவப்பா வார்த்தையொன்றுரைக்கவேணும்

வசனம்.

கேளுமப்பா வேத சலோசினம் நம்முடைய ஆசிரமம்போய் எனது பத்தினியாகிய காமதேவியை கண்ணைதுத்துக்கொண்டு வரச் சொல்லியென்று அழைத்துவாருமப்பா.

சேவகன்-கவி.

அப்படிதானே அருளின்படியே
இப்பவேபோடி வெருவல்பெருந்தாயே
கோப்பனசென்று கொண்டுமேவருவேன்
தப்பிலாமெய்கள் சாமியேபோற்றி.

சேவகன்-கவி.

காமதேவியேஅம்மா
கடிகொளியிப்போதானே
சாமியாரழைத்துக்கொண்டு
சன்னிதியில்வரவேசொன்னார்

காமதேவி-கவி.

சாமியுமழைக்க
தடங்கல்சொல்வேனோ
நாமுமேபோவோம்
நடந்துநீவருவாய்.

காமதேவி-வருகிற-தரு-இ-ம்-ஆதிதாளம்-பந்துவராளி

பல்லவி.

காமன்றநிதநிசெய் மாமதிவதனமெல்
காமதேவியுமேவந்தாள் பேருழிமுனிக்குமுத்தமனைவியும்-வந்தாள்

அநுபல்லவி.

பூமன்மாலவின்றோர்களும் பூவிமெலரும்போற்றும்
புனிதமாதவத்தோரும் பொலன்கழலினைபோற்றும்
புனல்மதியருகுசெஞ்சடைதனில் நவமணியே
மணிவிளையாடிடபதம் மனதினில் இலங்கவேய — காமன்

சரணங்கள்.

காலிலேசிலம்புதண்டைகமருவ-திருபுரமும்
கண்டவிழினக்கரவெருவ
ஊவலத்தினில்பிருக்க ஏழ்தமயிமுண்டிங்கு துங்க
ஆவல்விரியமானமுகம் சந்திரனைத்துலங்க
ததுர்தக்கெணுதக் ததிமிதகிடதக தத்தளாங்குத
ததிங்கிணதோமென — காமன்

கொத்துசரப்பளிகள்மின்ன மார்பினிற்
சேர்வைபணியாரம்மன்ன
சித்திரசரிகைசேலை திகழிடையிற்சொலிக்க
இதைபொட்டெனுதலிசர் இட்டுநற்பிரபலிக்க
திக்கிக்கிமிதத் ததிமிதகிடதக திக்தளாங்குதக
ததிங்கிணதோமென — காமன்

காமதேவிசொல்-விருத்தம்.

சதுர்மறையோதி நிகர்சுமுத்தவரிட்டமல்
விதியரித்துலகிலெல்லாமும் வேதனேசரணமைய
பதிதனிலிருந்தவென்னை பட்சமதாகயிப்போ
அதிசரிதமாயழைத்த அவசியமுனைசெய்வீரே

வசனம்.

சாணாக்கரணம் என்பிராணவல்லபா ஆசிரமத்திலிருந்த என்னை
அழைப்பித்த காரியஞ்சொல்லவேணும் என்பிராணநாதா.



பேருழிமுனி-விருத்தம்.

தத்தனேர்மொழியாளென்றன் தையலேசொல்லக்கேளாய்
புத்திரனில்லையென்றே நாம்புலம்பியதாகையாலே
கர்த்தனும்ராமலிங்கக்கடவுளைத்துதித்தேசாரும்
மெத்தவேதவங்கள்செய்வோம் விருடன்வருகுவாயே

வசனம்.

கேளும்பெண்ணே காமதேவி நமக்கு பிள்ளையில்லையென்று வி
சாரப்பட்டு இருக்கிறோமே இப்போது ராமலிங்கத்தைநோக்கி தவ
ஞ்செய்து புத்திரபாக்கியம் பெருவதே உத்தமமென்று நினைக்கி
றேன் பெண்ணே

காமதேவி-விருத்தம்.

எத்திசைபுகழுவதாக வென்னிடபிராணநாதா
கர்த்தனும்ராமலிங்க கடவுளைநினைந்தநாளும்
பத்திரமாய்த்தவங்கள்செய்து பாலனைப்பெருதல்நன்றே
தத்துவக்கியானத்தோடு தவமதுசெய்வோமாருய்

வ-ம். கேளும் என்பிராணநாதா தங்கள் இஷ்டப்பிரகாரம்
தடுதமையமாய் இராமலிங்கத்தைநோக்கித்தவஞ்செய்துபுத்திரபாக்
கியம்பெருவதே உத்தமம் என்பிராணநாதா.

பேருழிமுனி-விருத்தம்.

வையகம்புகழநன்றாய் மனைதுறிந்திலொன்றாய்
செய்தவத்தோர்மதிக்க திருவுருவுடையவெண்ணி
மெய்யினில்நீறணி மேன்மையாய்ருத்திராட்சப்பூண்டு
தையலன்னவளைக்கூடி தவஞ்செய்யவருகின்றோரே

வசனம்.

அதோதெப்படி என்றால் பேருழிமுனியும் காமதேவியும் தமது
பூஷணங்களை யாவையும் நீத்து சிவவேடத்தில் விருப்பமுற்றுவிபூதி
உத்திராட்சமாலிகாபரணராய் மரவுரி உடுத்திக்கொண்டு தனது பத்தி
னியும் தானுமாய் தவஞ்செய்ய வருகிற விதங்காண்க

பேருழிமுனியும்-காமதேவியும்-தவஞ்செய்ய-வருகிற

தரு-இ-ம்-ஆடதாளம்-மகாவேலி

பல்லவி.

சிவயோகியைப்போலே தவவேடம்பூண்டவர்
சிறந்தவஞ்செய்யவாரார் பேருழிமுனிசேருய்தவஞ்செய்யவாரார்

அநுபல்லவி.

பவபாசமகத்து சிவபாதமேதுதித்து
பாவையுடனேகூடி பரமசிவனைநாடி. சிவபோ

சரணங்கள்.

செப்பரக்காத்திரனில் செபமாலைசிரத்தினில்
திகழும்ருத்திராட்சமணிந்து
வையமெல்லாம் மதிக்கவயங்கும்மேனி முழுதும்
மன்னுமீபூதிதனை
மையாவலிக்கவெம் பரமனேவுனதருள்
பாலிப்பாயென்றுகூறி பாவையுடனேதேசி சிவ

புத்திரவாஞ்சையாலே பொன்னுபரணம்விட்டு
புரிந்தோலுடையில்போற்றி-நல்ல
வெத்திபெறவேவாழும் வீடுவாசல்விட்டு
மெய்யெவருங்கீர்த்தி
பத்தியுதாகவேபரமர்தனைநினைத்து
பண்ணபாவம்போக வென்னமீடேருதாக சிவ

ஆதிமாலயன்காண அரியவைதிசெல்வனை
அன்பாய்த்தலங்கள்பணிந்து-சிரசில்
பாதிமதியணிந்தபரமன்றனைநினைத்து
பாலிப்பாரென்றுமெண்ணி வேதனைதீர்த்திடும்
விமலன்றனைப்பூசித்து பேதினிகளில்சார்ந்து
மெய்யன்மேலன்புகூர்ந்து சிவ

பெருமூ-விருத்தம்.

இவ்விடம்நல்லதென் றிருவருமன்புகூர்ந்து
ஒவ்வியதமைழகளாலே உளர்விலைசேர்ப்படுத்தி
திவ்வியஜலந்தெளித்து சதுர்முகரக்னியுண்டாக்கி
கவ்விபெருமலிங்க கடவுளைத்துதிசெய்கின்றாரே

வசனம்.

அகோ கேளுங்கள் சபையோர்களே இந்தப்பிரகாரமாய் ஆனே கதிகளைதாண்டி சோலைவனங்கடந்து பஞ்சகுரோசனைத்துக்குள்ளிருக்கும் திவ்வியமான புட்பவனத்தின்மத்தியில் ஓரிடத்தில் கீதமொழியீவ பிரமசக்கினிவளர்த்தி தவஞ்செய்கிற விதங்காண்க



பெருமூ-தேவாரம்.

காத்தனில்மழுமானேந்தும் கர்த்தனேபோற்றிபோற்றி
கிரத்தனில்கொன்றைசூடும் திங்களுங்கொண்டாய்ப்போற்றி
புரமெரித்தவனேபோற்றி புண்ணியமுனியேவனத்
அருந்தவஞ்செய்யுமென்றும் அரஅரசிவனேபோற்றி

வ-ம். அரஅர காமகண்ட திருமேத்திரமுடையசர அடியேன் பத்துக்கிரங்கி யாட்கொள்ளவேனுஞ் சுவாமி

பெருமூனி-காமதேவி-தரு-இ-ம்-அடதாளம்-ஆனந்தபைரவி

கண்ணிகள்.

தஞ்சமுன்மலர்ப்பாதஞ்சரணம்-இப்போ
தர்க்கரக்கருணைபுகல்தருவாய்
செஞ்சடைகங்காதரா-சுந்தர
சந்தமக்தீர்த்தருளுஞ்செகதீசா
விடையீதிலேறிகேவருவாய்-மெய்க்கள்
வினைதீர்த்தருளுந்தவமாமுகருணாக
அடிமைகளாட்கொண்டபாம்-மெய்யடை
யாட்கொண்டருளிபுகல்சகாய
கங்காதரப்பெருமானேபோற்றி-வீட்டின்
கருணைவைத்தருளுமெல்லாக்கீர்த்தி
தவமதுக்கிசங்கிரங்கோரம்-வைத்து
தலையினைவரிப்பதுழுக்தன்னுபரசக்
சரணமென்றடைக்கேனினதருள்-வீத்து
தருணத்தில்வந்தெனையுமேலீடேர்க்கும்
கருணைகரிபப்பெருமானே-மெய்மை
கடந்தோயுந்திருவடி விளையருளே

பெருமூனி காமதேவி-அகவல்.

திக்கருக்கெங்கையருந்திறந்தவனெடியோர
காக்கிநயந்தருளும் திருக்கிடைப்பெருமனே
ஆதியாசுர்தமயமுடிசொருடையா
சோதியாய்கடருஞ்சுடர்மணிக்கோவிய
சிரத்திருப்பவசேலெக்காமுவணக்கி
வாமதுபெருக்கத்தாப்பனைத்திக்.

நஞ்சுண்டகண்டனுதனேயோபோற்றி
திருத்தமென்றனைடர்தோம்தனையுதமிவன்டி
ருபபுரமெரித்தருக்கண்ணுபோற்றி
தர்ப்பரனுவக்கதன்னையுமெரித்த
பஞ்சாட்சரதாண்பதிவிருந்தவனே
கருசன்சிரசைச்சபாலமாய்க்கொண்ட
கையல்வாணிச்சிதனக்குமாளிகை
வைகையடக்கபண்ணதனேசமர்த்து
அடிதனைப்பட்டிடுடிபமாத்தனுடு
வடிவதைக்காட்டிமாழும்வித்தகனே
கரிப்பீபாக்கியைகாதனேபோற்றி
கரியுரிபோற்றிசெங்கர்த்தனேபோற்றி
கருணைகடலேவனக்கயில்மனமாழுதே
அரவாபரணம்பினைபாக
சங்கருபோற்றிசர்வேசாபோற்றி
பக்கைவர்மாதும்பாமலேவசுத்தனே
அடிமுடிக்காணுதகண்டபூரணனே
கடைபூர்தனிலேசாட்சியுகலைத்த
மார்க்கண்டருக்காகமறலியையுதைத்த
தாருகாவனத்தினில்தவமுநிசெய்தனே
பத்தினிமார்க்கயாக்கபெயசெய்துனை
பத்தினிதன்னைவஸ்பாகத்தினிலையருந்து
தர்க்கமுடாக்கியதர்ப்பரபோற்றி
திக்குவேலில்லதிருவடிபோற்றி
சிவசிவசம்பேரிலுமாசபோற்றி
வைமருந்தருளும்பரமனேபோற்றி
கர்மமேமமுன்செய்காரணகுதிவே
ஜென்மதிவினையாவ்விசல்லைநடிவை
பாலியுமாதேவன்பரமனேயெனக்கு
ஆவலையென்னைமாறுதத்து
விடைமீதிரேறியேயென்னுடையயாருடன்
வடிவாகவெண்கள்மனைக்குவாய்பக
மைமர்தனுமிப்போபயனைமறுமட
தந்திடவேணுர்தர்ப்பரபோற்றி



பெருந்திருமுனி காமதேனுக்கருணைவளி.

செங்கைத்திலபானகுதர்திரமெட் சங்கருதாரணிநளிலேக்கீத
சரப்பசிவசாதருக்கிமெய்ன் தயைக்கனிருவங்தோம்
தவவ அபெரிமையை றுக்தீதிருவையச்சர்பீல்கிடப-விப்பேர
அருவினைவைக்கதுமனியுக்காவதீரீயரிதினிலவருவார்ப்
இனியசகிநுமமெய்ருமாசத்தருவாய் இசங்கை.
வறமதகருகவக்கிடேவிசொவு வனத்திலிதப்பகுநதிசெய்தோர்க்
கொடுடன்விட்டீதிலேவிசெ சோதிபோகவுமே [காசு
வையகம்புகழுமைமதுமதிழைநக்கிடுமைப்தகக ஒருமயக்கனைசருந்
மாசிலாமணிபோதிவருவாய் வரத்தருவாய்
தருவிர்வசிமென்றிருவருமொருமைபாசத்தைமுத்திநிக்காமைக்தில்
தாண்டவபெருமாண்டவ பெண்மைபாண்டுசெடண்டமுருவெங்தே
தவமதுபுரிந்தோமக்கவளமுற்றிருந்தோம் தங்கேவிசொருமைபுக்கனை
கர்தன்சிக்கைதமகிழ்ந்திடவுக்கன தவமதுபுரிந்தருள்செய்யும் திருவை
திருவையாவைத்தருள்பாசடியார் தவருமைக்கேட்டிபமுடியாக [வையும்
விர்த்திசொன்சம்பூர்த்தியுள்ளாசம் செடிபெருங்கைகாயிலைவிட்டு
ருபீமனையக்குவிர்வெழுத்துவிவருவிர்செசமுமைருவே
இம்பாருசல்லுக்கெயார்தவுமே கொருசிருவசமிட்டேவ
நூருமெக்தனைக்தந்திடவே திருவையாவையும்

பெருந்திருமுனி-காமதேனு-தேவாரம்.

மாசிலாமணியேபோற்றி மாதவர்க்கருளேபோற்றி
பாசிபோற்படருமாய பவக்கடலொழியேபோற்றி
வேதிலாயுருவேபோற்றி மெய்நிறுமத்தானேபோற்றி
ஆதிகாருமணிக்கா அய்யனேபோற்றிபோற்றி

பெருந்திருமுனி-காமதேனு-கரு-இ-ப-மட்டியம்.

சத்திக்கதிபதி சிவசம்போசங்கரு
அத்திமுகனைப்பெத்தவல்லுருவேபுத்திரனுதனிசெய்
பத்தர்க்கிரங்கியருளிவைபருபாட்பெருனே
சித்தநினையுமெரித்தசிவனே சொன்னமதவிசெய்
திங்களிசடைசடையிருவதீக்கப்பெருனே
மங்கையிடப்பாகமவைத்தருமைத்தமதவிசெய்
செங்கையேமணியனே கைவநாகவேனே
சங்கையில்லதெங்கருக்கொருகனைமதவிசெய்

மாரன்தனைவெரித்தகல்லமைரமுடித்த
தாரணிதனிச்லவெங்களுக்கொருகிலையுதவிசெய்
மேருவில்லாய்வளர்த்தசாமியின்றோக்காமவித்த
கோரினப்படியெங்களுக்கொருமைதநுதவிசெய்
ஆலமுதுண்டமிசரவுவேயுமையொமுநடைமிதன்
ஞாலஞ்செய்யசாமனெங்குமுகெக்ருக்கேருமுதவிசெய்
சீலன்தனியுனைத்தாய்சுருகைப்பொருவ
கோலமாகவக்தெவக்கொருருமுகைதவுதவிசெய்

காமதேவி-விருத்தம்.

காத்தனையேக்கிரண்டு கண்மணியுமுடிக்கொண்டு
அரஅரிவனேயென்று அருந்தவஞ்செய்யும்போது
பெரியவர்பண்டாரம்போல் பேசாமல்வக்தெண்கையில்
இருமுக்கொன்னறக்கந்து யென்னவடுபோளுர்சாமி

வசனம்.

கேளும்ஸன்பிராணகாதா அடிவாசன் இரண்டுகையேக்கிஅரா
சிவனே ஒருபுத்திர சந்தானம் வேணுமென்று இரண்டுகண்ணையு
மூடிக்கொண்டு தபோதியானமாய்தவஞ்செய்யும்போது ஆரோவொரு
பெரியபண்டாரம்போல்வந்து என்கையில் இருமுக்காயை போட்
டுவிட்டுப்போனர் கண்திறந்துபார்த்தால் ஒருவரையுங்காணேம் என்
பிராணநாதா

பேருமிமுனி-வசனம்.

கேளுக்பெண்ணே காமதேவி உன்மெய்பத்திக்கு ஆப்படியாகி
ருக்க எனக்கு ஏராளமாய் நடந்ததை சொல்லுகிறேன் கேளும்
பெண்ணே

பேருமிமுனி-விருத்தம்.

இடத்துடன்றுவயிப்போ தபோதியானமாகியிக்க
இடக்கனில்தபமேசெய்ய சிவனாள்வந்துகையில்
ருத்திராக்கமுக்கையொன்று பெயனத்தில்கண்டேன்காணும்
சகெனைவிழித்துப்பார்த்தால் காமாடியைக்காணேன்பெண்ணே

வசனம்.

வாராய்பெண்ணே காமதேவி நான் தபோதியானமாய் தபஞ்செ
ய்ய காமியோர்வந்து என்கையில் ருத்திராக்கத்தைக் கொடுத்தாப்



போல் சொப்பனத்தில்கண்டேன் ஆனபடியால் நம்மிருவருக்கும் சிவாம்
சொரூபத்தின் ஆள்ளுமுகமா மூர்த்தார் இருவரிக்க காவியைப்
போல் காதுநதுபெண்ணே

பேருமிமுனி-விருத்தம்.

மதிசேர்வதனத்தாளே வனத்தினிவிருவருமே
சதாதுக்கதவமேசெய்ய காமமியுங்காமனித்தார்
சதிருடன்வாழ்த்துபுத்திரசத்தானம் பெருவதற்கு
பதிதனக்கேகுவோமாம் பாவைபேவருவாயே

வசனம்.

வாரும்பெண்ணே காமதேவி நாமிருவரு பெரமையாய் சிவ
னைநோக்கி தவஞ்செய்ததால் உடனே சொப்பனத்தில் ருமைக்க காமா
மியார்வந்து புத்திரசந்தானம் கொடுத்து உங்களுக்கு இந்த புத்திர
னே போதுமென்று போய்விட்டார் ஆகையால் நாமிருவரும் ஆசி
மம்போவோம் வாரும்பெண்ணே

பேருமிமுனி-தரு-இராகம்-நீலாம்புரி-தாளம்

பல்லவி.

மனைக்கேபோகுவோம் வாரும்-நம்
மனதுக்களிகூடவேயாறுமே வனத்திலிருந்தோம்தன்
மகிழ்வோமே மனைக்கே

அநுபல்லவி.

தனித்தவிருவரும் வனத்திலேயிதே
தவமேசெய்ததினால்சிட பலமேபோதுங்கொடுக்கு
நம்மிடமனைக்கேபோகுவோம்வாரும்

சரணங்கள்.

மதிவிரகனைத்தனைமூத்து-வாரா
மக்குல்மாத்தக்குக்குலமுலகெங்குந்திசைபோங்குக்கடேசும்
புனைவுமிகுக்கெருடி.
சொதிக்குங்கநிறவுதநிக்குருன்னபே-குதுக்க
பதமணியணிப்பிபுதலைக்குஞ்சிலகெங்காபுரியா மனைக்
கேதனமதிவகையாகை மிக்கசேதமக்கையர்க்
கெழுதுக்கொருவரு நிக்கெரக்கெக்குபகத்திருவுகு
பொர்ப்பதுமையினமூலே சோதில்லாமலவரும்

சோதியின்விடைகுறைதேடினிவனக்கினி
மேதுபேதுளைவாகலேவசமிருந்துவரும் மயினக்

காரும்மலைவளர்க்கண்டி கருசக்கடத்துக்
கரிருக்குபெருவழியடித்துபேர்கின்றது
கோவழிதனிக்குனிசசிமிவேபிமோ
மைருக்குமதிச்சிரமசவிக்கவுமெக்கருஞ்
சிரகுப்கர்திருமிகுக்குயிலேவராமிருவரும் மயினக்

பொது-விருத்தம்.

இக்கவிதம்மனைவியுடன் பெருமணனதான்
இசைபருடனேவாழ்ந்திருக்க பரமனரும்
தகிரஞ்சேர்பொய்சொன்ன பிரமதேவன்
சகிட்ட பெருமுமுனி தவத்துக்கேகி
கொக்குடனவர்வயிற்றில் பிறவாயென்ன
கொருவனும்போயன்றேறுனாதாக
அந்தமுடன்காமதேவி வயத்தில்வந்து
அழகியகர்க்கருவை வந்தடைந்தான்றே

வசனம்.

இவ்விதமாக பெருமுமுனி மனைவியுடனே சந்தோஷமாய் வாழ்ந்துக்கொண்டிருக்கும் காலையில பரமசிவனானவர் முன்புபொய்சொன்ன பிரமதேவன் பெருமுமுனிக்கு பிள்ளையாய்ப்பிறக்க சொன்னவுடனே காமதேவிவயிற்றில் கருவுருவாகவந் தடைந்து மருவுருவா இற விதங்காணக.

பொது-விருத்தம்.

பச்சைமேனியாய்மாது செர்ப்பமாகி
படிப்படியாய்படிவயரு கனைதிரண்டு
கச்சைபணிமுலைமுகக்கள் கருத்துமேனி
கனகிறங்கொண்டமெப்பார் புளிப்பின்மேலே
இச்சையுத்தமிடைபெருத்து பிருக்கக்கண்டு
பேக்கிமைமுமார்குலதெய்வ மதனைக்கும்பிட்டு
வுச்சிதமாய்சீமந்தம் யேழாமாதம்
ஓளிபொவேசெய்தனர்க் கருப்பமன்றே



வசனம்.

காமதேவி கெர்ப்பவதியான பின்பு படிப்படியாய் அடிவயறுனைகந்து முலைமுகக்கருத்து மேனிபச்சை பொன்னிறமாகி புளிப்பின்பேரில் இச்சைவைத்து பிருக்கக்கண்ட பெண்களெல்லாம் குலதெய்வங்களுக்கு பூசைபோட்டு யேழாமாதம் சீமந்தஞ்செய்தார்களென்றாகாணக.

காமதேவி-விருத்தம்.

வயிற்றுனைதனக்குபத்து மாதமுந்நிறைந்தபின்பு
நடக்கவுநெசத்தியத்து காதலைப்போற்றிசெய்தாள்
சகித்தனைபிரசவகாலம் தன்வாலதனுனமெத்த
இடுப்புநோவுண்டுமார் நகி பெக்கவும்சோர்குவாளே

வசனம்.

பத்துமாதந் சரியாகநிறைந்தபின்பு காமதேவி நடக்கவுஞ்சக்தியில்லாமல் கடவுள்பாதத்தை மிகவுந்துதித்துக்கொண்டிருக்கும்போது இடுப்புநோவுகண்டு பிரலாபிக்கிற விதங்காணக.

காமதேவி-தரு-இ-ம-அடதாளம்

பல்லவி.

அம்மம்மாநீவாடி மருத்துவச்சியை
அழைத்தோடி நீவாடி.

அநுபல்லவி.

செம்மையாகவேநான் செல்வனைபெத்தவிக்க
செல்லதருகிறேன் சிக்கிரமாபோய்த அம்மம்மாநீவாடி.

சரணங்கள்.

அருக்காதிமாரேயிந்தநோவுதனை ஆர்தான்படுவாரோ
இருந்திருந்து நோவுதிகமாகுதே
என்றுடையிரண்டு விரிந்துபோகுதே அம்மம்

பிள்ளைதான்வேண்டி பெருந்தவமுஞ்செய்தேனடி
வுள்ளபடியிப்போ திம்மைதிரும்புதே
வுரைக்கவேபேசினால் யினைப்புவருகுதே அம்மம்

எப்படிசகிப்பேன் யிக்கவாதனையேதாகசகிப்பேன்
செவ்வாய்காளிதனக் கப்புமுடியுங்கள்
சேர்த்துவைத்திருந்தன யிடிப்புபிடியுங்கள் அம்மம்

தோழி-விருத்தம்.

புரிந்தன்மாதேசற்றே பொருத்திருபஞ்சவேண்டாம்
தரணியில்லேயார்க்கும் சங்கடமாகுமம்மா
ஒருவெருடிதனிலேயத்த வுயர்மருத்துவச்சிதன்னை
திரமுடனேயழைத்துச் சீக்கிரம்வருவேனம்மா

வசனம்.

வாருமம்மாதாயே சற்றே பொருத்திரு பயப்படவேண்டாம் கெர்ப்பவேதனை உலகத்தில் யாருக்கும் சகசமே ஆகையால் தங்களோடி மருத்துவச்சியை அழைத்துவருகிறேனம்மா தாயே

மருத்துவச்சிவருகிற-விருத்தம்.

ஒன்றொடிமார்களோடி வுயர்மருத்துவச்சிதன்னை
கண்டுசேதிகளுஞ்சொல்ல காதலாயெழுந்தேயவளும்
தனதொருகையிலூன்றி தலையிகடுக்கங்கொண்டு
வண்டுசேர்விழியாரோடே மகிழ்வுடனிதோவந்தாளே

வ-ம். அதேதெப்படியென்றால் மருத்துவக்கிழவி" தாதிமாருடன்வருகிற விதங்காண்க.

மருத்துவக்கிழவிவருகிற-தரு-இ-ம்-ஆதி.

கிழவியும்வந்தனளே மருத்துவக்கிழவியும்வந்தனளே
பிழையில்லாபெருமுனி பெண்சாதிக்குமேயுகந்த
வழியில்லாமலேகெர்ப வாதைபெருக்கவந்த கிழவி
மூப்பினிலேநடக்க மிகவுந்தள்ளாடி
தோப்பாமூலை முழந்தாளினிலடிபட கிழவி
கூடவருமாதர்கள் கூப்பிடமுன்னால்நடக்க
கொடியதோர்வெய்யிலாலே கால்களுமேகடுக்க கிழவி
கொட்டியப்பஞ்சினைப்போல் தலைநரைத்திட
கோணத்தலையாள் முதுகும்வளைத்திட கிழவி

கிழவி-விருத்தம்

அம்மணிபயப்படாதே அவனியிலநேகம்பேர்க்கு
செம்மையாய்மருத்துவம்பார்த்தே சிறப்புகளடைந்தேன்கண்டாய்
மைம்மலிகுழலாயுந்தன் வயிற்றினிலாண்குழந்தை
விம்மாவளவில்பெத்தே விளங்கவேபோகுதம்மா



வசனம்.

கேளுமம்மா காமதேனி இந்த கெர்ப்பவேதனையினால் நீபயப்படாதே நானென்ன லேசானவளா அநேக ராஜாக்களுடைய பெண்டாட்டிமார் மண்டோதரி இந்திராணி சந்திரனைப் பெத்தகாலத்திலும ருக்குமணியம்மன்பிறந்தகாலத்திலும் அந்தக்காந்தாரி துரியோதனன் முதலானவர்களைப்பெத்தகாலத்திலும் நான்தான் மருத்துவம்பார்த்தேன அதனுடைதான் அவ்வளவு பாக்கியமானபிள்ளைகள்பிறந்தார்கள் நல்ல பெருமை நிகரும் பெத்தேன் என்னைகேளாமல் இவ்வளவு சூதனமாயந்திரு வெளியாக்குறேனம்மா தாயே.

1170 51

பிள்ளைபெறுதல்-விருத்தம்.

மருத்துவக்கிழவியிந்த வகைசொல்லியதற்குதக்க
மருத்துவம்பார்க்கவந்த மங்கையுமுடனேகண்டு
திருத்தகுபிள்ளையொன்று செல்வியும்மிகவுநன்றாம்
திருத்தமையானபெத்தாள் ஜெகமெலாம்புகழ்ந்தாளே

வசனம்.

அதேதெப்படியென்றால் அந்த மருத்துவச்சிகிழவியானவள் இந்தவிதம் தயிரியஞ்சொல்லி அதுக்குதக்கதாய் மருத்துவஞ்செய்தவுடனே ஆண்டவனருளால் காமதேனி ஆண்பிள்ளையைப்பெற்றாள்.

பொது-விருத்தம்.

பிள்ளைதான்பிறந்தசேதி பெண்டுகளோடிச்சொல்ல
வல்லவபெருமுனி மனதிலானந்தங்கொண்டார்
தெள்ளியசிவகெங்கா புரத்தெருவீதியெங்கும்
அள்ளிவேகன்றும்பெங்கும் அழகுடனாடினாரே

வசனம்.

இந்தவிதமாய் பிள்ளைபெற அந்தசங்கதியோடிப் பெண்கள் பெருமுனிக்குச்சொல்ல அவர் பரமானந்தமடைந்தார் பிறகு சிவகெங்காபுரம் தெருவெங்கும் எங்கே கண்டாலும் பாடினார்கள்.

பொது-விருத்தம்.

கோலமும்தெருவிதெங்கும் குளிர்ச்சியாய்ப்பந்தலிட்டு
சீலமுமையாருமே செய்சடங்கதுவுஞ்செய்து
காலவுத்தமதானம் தன்தையுஞ்செய்துபின்பே
பாலகன்றனக்குபகவமுனி யென்றுபேரிட்டாரே

வசனம்.

பெருமுனிக்கு பிள்ளைபிறந்த அந்நாளுள் பிருமணைக்கொண்டு செய்யவேண்டிய சடங்குகளையெல்லாஞ்செய்து பிள்ளைக்கு பகவமுனியென்று பெயரிட்டார்களென்றனர்.

பெருமுனி-தரு-நொண்டிச்சிந்து.

சாதகங்குணிக்கும்போது தனையன்
தாழ்வானகுலத்திலொருவேசிதனை
பாதகமோ அதியென் பாலனை
பாச்சியைபுணர்ந்திட விதித்திட்டதே
நீதிநெறியுமில்லைபொல்லா
நீச்சறியுடனேசேமமதாய்
காதலுங்கொண்டிப்பாலனும்
கண்டுமேமோகித்துச்சண்டாளச்சிய
சேரும்படியாகசாதகத்தில்
செப்பியபடியினால்வெப்பியேனும்
நூரிலோரமெய்ப்படியிருவரும்
ஒப்பியேயிருப்பதுசெப்புமென்னே
பார்ப்பார்கள்பார்த்தால்பாச்சியை
பதிக்காதகந்தெரிந்திதேவொதுக்கிடுவார்
காப்பாற்றினாயிருந்தாலுமக்தைக்கு
காலம்வந்தபோதுநாலத்திலே
பதினாறுவயத்திலேபாலனும்
பாச்சியைசேர்ந்திடவிதித்திட்டதால்
அதனாலுமக்கிந்தகுழந்தையை
ஆறாச்சவிந்திட்டால்நீருகவே
இருப்போம்யிவ்வூரினிலநிலமுள்
பேதமில்லாமலேசேமமதாய்
தரித்தோம்தனதனை

பெருமுனி-விருத்தம்.

எண்ணமீதேடனாரும் யீசனேதென்கிலன்றோ
வண்ணமாதபமேசெய்து வந்ததோர்பாலனுக்கு
தண்மையாய்சாதகத்தை சாலவேயாய்ந்துகுணிக்கும்போது
பண்ணினபாவமோயிப்பிள்ளை பாச்சியைப்புணர்வதாலே



வசனம்.

கேளும்பெண்ணே காமதேவி நமக்கு அரியதவத்தாலே புத்திரசந்தானமில்லாமல் யில்லையிதுபோலே கடவுளிடமிருந்து யிந்தபிள்ளை பகவமுனி பதினாறுவயதிலே பாச்சியைப்புணருமென்றுசாதகத்திலிருக்கிறபடியால் அந்தபிள்ளை நமக்கு வேண்டாம் பெண்ணே.

காமதேவி-விருத்தம்.

மலடியாயினோர்களாரும் வருந்தியேயனந்நோன்பு நோற்று
பலபலதவமியற்றி பயமறுதருளினாலே
நலமதாய்பெத்தபிள்ளை நமக்குநாதா அன்றுசொன்னால்
வுலகத்தவரெல்லாம்சொல்வார் வுயிருடன்கொல்லப்போமோ

வசனம்.

கேளும் என்பிராணநாதா அனேககாலம் மலடியாயிருந்து தவஞ்செய்துபெத்த பிள்ளையை நமக்கு அதனாலே வேண்டாமென்றால் நாம் அந்தப்பிள்ளையை வுயிருடனே கொல்லப்போவது வுலகத்தார் பழிக்கமாட்டார்களா

பெருமுனி-விருத்தம்.

மறையவர்குலத்துதித்தோம் மக்களுமைந்தனாக்கு
தரணியில்புகழ்பெற்றோம் சாதகங்குணிக்கும்போது
பாச்சியைப்புணர்வதாக பாலனுக்கிருப்பதாலே
கர்த்தனார்செயலென்றெண்ணி காசியாத்திரைபோவோம்பெண்ணே

வசனம்.

கேளும்பெண்ணே காமதேவி நாம் பிருமனாய்ப் பிறந்து நம்முடையபிள்ளை பாச்சியை புணரும்படியாய சாதகமிருந்தால் நம்மைப்போலொத்த பிருமணாள் பேச்சர்களை ஆகையால் பிள்ளை பிறந்த சாதகம் ஆகையால் நான் காசியாத்திரைபோய்வருவேன் பெண்ணே

காமதேவி-விருத்தம்.

பிள்ளையாய்மைக்கிப்போது பிறந்திடவல்லவென்றாலே
தன்வீட்டைக்கடந்தேகனான் சாதகமயக்கியோடு
தன்னுள்ளேபோனாலும்போம் தன்மைக்கிதேக்கிறாய்
பன்னியிலேவேதமைந்து பழவிணைக்காத்திடுமே

வசனம்.

கேளும் என்பிராணநாதா நமக்குப்பிறக்க பிள்ளையைப்படி அவ்விப்போகிறது சாதகம் பலிக்குமோ பலிக்காதோ அதை திருமொன்று நாம் எப்படியென்றுவது அதை நிருத்தி பிள்ளையை பள்ளிக்கூடத்தில்போட்டு சாஸ்திரவேதம் ஆகமசாஸ்திரங்களெல்லாம் கற்பிப்பு பிராணநாதா.

பெருநிமுனி-விருத்தம்.

பெத்ததோர்பாலன்தானும் புலச்சியைபுணர்வதாக
வித்தகன்விதித்ததாலே வேதியர்க்கடுக்காதத
புத்திரன்தனைப்பெறாதே பூமியிலிரைச்சாலும்
தத்தமேசெய்துதாரும் தள்ளிட்டேனுங்கண்டாய்

வசனம்.

கேளும்பெண்ணே காமதேவி நாம் பிராமணனாய்பிறந்துதபமிட்ட வசித்தில் பிள்ளைபிறந்து அந்தபிள்ளை பாச்சியைப்புணர சாதகமிருக்கால் அந்தபிள்ளை நமக்காகாது ஆகையால் அந்தப்பிள்ளையை ஆருக்காகிலும்தத்தஞ்செய்துவிட்டால் உத்தமம்பெண்ணே

காமதேவி-விருத்தம்.

பெத்தமாதாவுந்தானும் பிழைகளுமிருக்குதென்று
புத்ரனைதள்ளிவிட்டால் பூமியிலென்னசொல்வார்
பெத்தவிப்பிழைகள்தானும் பிப்பிள்ளையால்வந்திட்டாலும்
வைத்துநாம்பாதுகாத்து வளர்த்திடவேண்டும்காண்டாய்

வசனம்.

கேளும் என்னிட பிராணநாதா நாம் பெத்தபிள்ளையை ஒருவற்கு தத்தஞ்செய்தால் உலகத்தாரென்னசொல்வார்கள் அந்தப்பிள்ளையினால் நமக்கு யென்னகுறைவுவந்தாலும் வரட்டும் நான் காப்பாற்றிகொள்ளுகிறேன் என்பிராணநாதா

பெருநிமுனி-விருத்தம்.

பிரக்ததோர்பாலன்தானும் புலச்சியைப்புணர்வதாக
இருக்கதால்சாதகத்தில் யாத்திரைபோறேனபாணும்
இருக்கிடத்திலேன்னீதான் பிக்கதோர்பாலன்தன்னை
வரித்துபச்சிள்ளமுடிடு பாதுகாத்திருந்திடாதே



வசனம்.

கேளும்பெண்ணே காமதேவி நமதுபிள்ளை பாச்சியைபுணர்வதாக சாதகமிருப்பதாலே நீ அந்தப்பிள்ளையை வைத்து ஆசிரமத்திலதானே இரும் நான் காசியாத்திரை போகவேணும் பெண்ணே.

பெருநிமுனி-தரு-செஞ்சுருட்டி.

காசியாத்திரைபோறேன்-பெத்தவள்
கண்ணேகாமதேவிபெண்ணரசே
தேசாந்திரம்போய்வரேன்-பெண்கொடி
நிலவுதிக்கிறும் கண்மடவே
ஆசிரமத்திலிருந்து-நீயும்
அன்பாய்குழந்தையின் மேனியுடனே
பாசமுடனிருந்து-அந்த
பாலகனுடன்கூட சிலமாதம்
இருந்துகொண்டதமாக-நான்போய்
யிசைக்காசியில்வாதகையும்
பரிவாய்க்கண்டபணித்து-யிப்போ
பாவையேபோய்வாரேன்-அவனுடன் தத்தினத்தி

வசனம்.

அதோகேளப்படியென்றால் பெருநிமுனியானவர் தன் மனைவியாகிய காமதேவியுடன் நமது பிள்ளையை நீயே பாதுகாத்து காப்பாற்றிக்கொள்ளென்று காசியாத்திரைபோய்விட்டார் பிற்பாடு காமதேவி யாகப்பட்டவள் தன்குமாரனாகிய பகவமுனிக்கு தொட்டிலிட்டு தாலாட்டி சந்தோஷமாக வளர்க்கிறவிதங்காண்க.

தாலாட்டு-தரு.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
பெருநிமுனிக்கினிய புத்திரனாய்வந்துதித்த
பாரோர்புகழுவரும் பகவமுனிக்கண்மணியா
கன்னைபிரமமணியுன் கர்த்தனிடமன்னருளால்
பொங்குமுடன்வந்துதித்த பெருநீபுத்திரனே
புத்திரனிமைபெருக்க பெருநிமுனிதவத்தால்
புத்திரனாய்தான்பிறந்த புண்ணியனேசெல்வனே
சாலதிருநாலு சாஸ்திரமுகத்திராக

மாலையவரிபெருமி மைந்தனேககண்மலர
வன்னல்பெருமிமுனி மாதவத்திருவர்க்கு
பிள்ளைகளித்திருதக்கசெழும்புத்திரனே
ஆசரிரே ஆசரிரோ ஆசரிரோ.

அகவல்:

தாலாட்டிமைந்தனைத்தாபாருமப்போ
வாவியமாதவளர்ப்புதைத்தேனும
சேர்தப்பனேர்திருத்திர்த்தக்சாட்டி
சக்கவப்பதுருசவ்வுகதூபி
பின்னியசடையினிற்பினித்தபொற்குப்பியும்
செவ்வரித்துத்திர்பிரைசேர்வையாயனிந்து
சிலமாய்கல்துாசிதிலர்தமுனுகலிர்
நீலவேல்விழியினில்கெடியமைதிட்டி
மார்பினில்நவமணிமாலையுமாட
பாரெலாம்விலைபெறும்பவுத்திரங்களும்
தண்டைபொற்கொலுசுக்கானிலைசய
மண்டலத்தோர்கள்மகிழ்ந்துக்கொண்டாட
சாலவேமனதினில்சந்தோஷமாக
பாலன்னம்பாயசம்பரிவாகநன்றாய்
வேளைதப்பாமல்நிதமாகவூட்டி
காலொருமேனிபெருமேதாருவண்ணமாய்
வளர்த்துமேய்வருவாஞ்சையாக
இளைத்துமேபோகாமல்யெப்போதுநன்றாய்
உள்ளாசமட்டுவருதியதக
பள்ளிக்குவைத்துபடிக்கவேநன்றாய்
பலகலையுணர்த்துமரிசையுங்கொடுத்து
நலமாகவேதம்நான்மறையோதி
கல்விகள்கற்றுமகனைகண்டுநன்றாய்
செல்வமாட்பார்த்தனன்செல்வனைத்தானே

வசனம்.

அதோதெப்படியென்றால் பெருமிமுனி மனைவியாகிய காமதேவி தன்குமாரனாகிய பகவமுனியை காலொருமேனி பெருமேதாருவண்ணமாய் வளர்த்து பள்ளிக்கிவைத்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம் பனிரெண்டுகலைக்கியானம் கொண்டுபார்த்தாடத்தகுவம் எல்லாக்கற்பிதது வரிபமாய் சபைக்கி வருகிற விதங்காண்க.





பகவமுனிவருகிற-தரு-கலியாணி-மட்டிய தாளம்

தாச்-செனுந்தக-தருதத் தருதத்-தருதரு
திச்-செனுந்தக-திரிதில்லாரு
தருர்த திருர்த்த-திமர்-திமித
தருதத்-தருதத்-தருதரு திமிர்தத் திமிர்தத் திருதிரு
பகவமுனிவந்தா — ரிதோ
பகவமுனிவந்தார்

அநுபல்லவி.

ஜெகமாய்மைகளைவிடுத்து — கையில்
ஜெபமாலைதனைப்பிடித்து (பகவ)

சரணங்கள்.

செகன்னிமுத்துக்குல்லா — தலைக்க-காதில்
திறந்தருணாடை — பிசைன
மின்னியமுத்துமாலும் — விளங்க-மார்பில்
மிருகத்தோல்தனாள் — குலுங்க (பகவ)

துன்ன-கையில்
முத்துமணிகள்
பொன்ன
மோதிரம்பாப
மின்ன-காலில்
கொத்துசரப்பளி
பொன்ன (பகவ
கொலுசுதண்டைட
கல்ல-மிவர்
போழிமுனிக்கு
சொல்ல
பிள்ளையென்றேவருரு
வெல்ல-பிரு
பாரில்வருமவினை
மெல்ல (பகவ)
பகவமுனி

பகவமுனி-விருத்தம்.

பவமறை யொழிக்கதலை பரமேஸ் வானைநோக்கி
தவமது செய்ததாலே சங்கர னருளுண்டாகி
நவமதாய் கெர்ப்பமாகி நாள்நிறைந் திரக்கமுத்து
அவனியி லென்னைப்பெற்ற அன்னையே நின்றன்போற்றி

வசனம்

இராமலிங்கேஸ்வானை நோக்கித்தவம்செய்து என்னைப்பெ
ற்றஅன்னையே சரணஞ்சரணமம்மா.

காமதேவி-விருத்தம்.

அரன் திரு வருளால்வந்த அன்புள்ள சுதனுனக்கு
திறமுள்ள ஆசீர்வாதம் சிறஞ்சீவியாக வாழ்வாய்
கருணையாய் வாழ்ந்திருப்பாய் கடவுள்தன் னருளினாலே
மருமலர் வாசத்தோடு மகுத்துவம் பெற்றுவாழ்வாய்

வசனம்.

வாருமப்பா பகவமுனியே தேவர்கள் முனிவர்கள் ஆசீர்வா
தத்தினாலே நீ என்றுஞ்சிறஞ்சீவியாய்வாழ்ந்திருப்பாய்மகனே.

பகவமுனி-விருத்தம்.

தாயாரே கேளுமெந்தன் தந்தைதனை யெங்கேயம்மா
சேயனென் பிறந்தயின்னாள் திருஷ்டியில் கண்டதில்லை
வாயாது உள்ளபேர்கள் வைதுமே தலைபில்குட்ட
பேயனைப் போல்விட்டு பிரிந்தெங்கே போனாரம்மா.



வசனம்.

கேளுமம்மாதாயே நான்பிறந்து வளர்ந்து பத்துவயதாகுச்
சுது இதுவரைக்கும் என்தகப்பனைக்கண்டதேயில்லை பள்ளிக்கூ
டத்தில்நான் படிக்கும்போது பிள்ளைகளெல்லாம் தகப்பனில்லா
தபிள்ளையென்று தலைமேற்குட்டுகிறார்கள் எனக்கு தகப்பனு
ண்டோயில்லையோ சொல்லுமம்மாதாயே.

காமதேவி-அவதல்.

என்னென்று சொல்லுவேன் என்னிடமகனே
மன்னனும்நானும் மகிழ்ச்சியாய்வாழ்நாள்
தந்தைக்கிவயதறு வதும்மேயாச்சு
எந்தனுக்குவயதி ரிருவதுமாச்சு
மைந்தனுமில்லா மடியாயாயும்
சிந்தைகலங்கி சிவாசிவா வென்றே
உள்ளமுங்கலங்கி உருகியேமெத்த
பிள்ளையில்லாத பெரும்பாவியென்று
காசியில்நாங்கள் கருத்துடனேகி
வீசியேகெங்கையில் விதிபுடனுடி
கர்த்தன்ராமலிங்க கடவுளைநாடி
பத்தியதாக பரமேஸ்பரனையும்
சிவனையுள்ளிருத்தி செங்கரங்குவித்து
அவனியிலெருவரும் அருந்தவம்புரிந்தோம்
எங்களுள்ளன்புக் கிறங்கியேவனத்தில்
சங்கரனுமையவள் சமேதராய்வந்து
முப்புறமெரித்த மூர்த்தியுமெங்கள்
தப்பிதமெல்லாந் தயவாய்விலக்கி
பாலன்வரமும் பரமேஸ்வரனார்
ஞாலத்தோர்புகழ நலமுடன்தந்தார்
வாங்கியேவரத்தை வையகம்புகழ
தாங்கிடகெர்ப்பந் தரித்தேதந்தன்வயத்தில்
திங்களும்பத்து சென்றதின்பிறகு
மங்களமாக மகிழ்ந்துனைப்பெற்றேன்

உன்தன்கைகளால் உகந்திடுமோக்ஷம்
சந்தோஷமோக்ஷ சாம்ராச்சியமடைய

என்னைமுன்கொண்டே யிருக்கவுன்தாதை
தன்னையவர்ச்சாஸ்திர ஜாதகங்கணிக்க

பார்க்கும்போதவரும் பலவிதசாஸ்திரம்
தீர்க்கமாய்சீயுஞ் ஜென்மித்தலக்கினம்

பதினறுவயதினில் பறைச்சியைப்புணர
தியாகசாதகம் தானிருப்பதால்

விதனமாயிருந்து மெல்லியென்றுடனே
அதன்வேறுமென்று இவனைநாம்நோக்கி

பிள்ளையைப்பெற்றும் புலைச்சியைச்சேர
உள்ளமுடையான்சால இதமிருப்பதனல்

பிராமணப்பிள்ளையும் பறைச்சியைச்சேர
காரணமிருப்பதால் கலங்கியேமனது

எழுதினசாதகம் என்கையிற்கொடுத்து
பழியாகபண்ணின பாவந்துலைய

காசியாத்திரைபோறேன் கன்னியேயென்று
விதியேநடந்தனர் வேகமதாக

பாதகமோயிது பண்ணினதவமோ
ஜாதகம்கிழித்த தானும்போரும்

வறுமையிதுவைப்பா வஞ்சனையில்லை
அறுநூறுபடி அமர்த்தினவிதியோ
அன்னிதமிழுவைப்பா அவனியில்மகனே
என்னென்றுசொல்லுவேன் என்னிடமகனே

பகவமுனி-தரு-ஆரபி-ஆதிதாளம்

ஐயோநானென்னசெய்வேன் அந்தணனுப்பிறந்து
பையவேபறைச்சிதனை பரிவாய்ப்புணரலானேன் (ஐயோ)

ஜாதகம்பறைச்சியை தழுவிப்பிணைந்திட
வேதன்மெழுதினுறு மேதினிபழித்திட (ஐயோ)

பிராமணனுப்பிறந்து புலைச்சியைபுணர்ந்திட
காரணம்வந்ததே கலங்கித்தவித்திட (ஐயோ)



பிள்ளையிருக்கப்பன் பேர்கெட்டுப்போகுதென்று
வள்ளல்காசியாத்திரைவழியேநடந்தானது (ஐயோ)

பகவமுனி-விருத்தம்.

தந்தையுந்தாயுமாக தவமேனகங்கள்செய்து
யெந்தனைபெற்றீங்கள் இழிவுகள்வந்ததென்று
சிந்தையுநொந்துதந்தை தேசாந்திரம்போனதாலே
தொந்தமாய்க்காசியாத்திரை துயரமாய்நானும்போறேன்

வசனம்.

கேளுமம்மாதாயே தந்தையுந்தாயுமாய் தவங்கள்செய்துஎன்னைப்பெற்று யெந்தனால்உங்களுக்கு தாழ்வான சொல் வருகுதென்று என்தந்தை காசியாத்திரைபோனதால் நானுங்கூட என்பாவந்துலையகாசியாத்திரைபோய்வருறேனம்மாதாயே.

காமதேவி-தரு-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

பல்லவி.

போய்வாரும் என்மகனே—காசியாத்திரை
போய்வாரும்என்மகனே

அநுபல்லவி.

காயம்சத்தியாக காசிவிஸ்வேஸ்வரை
கண்டுபணிந்துவாராய் (போய்)

சரணங்கள்.

போறவிடந்தனிலே-எந்தன்மகனே
புத்திமோறாதே
காரணவிதியினுல் காசியாத்திரைபோறாய்
கலங்கிமனஞ் சோறாதே (போய்)

அப்பாமகனேயடா யெந்தனுடைய
அருமைக்கண்ணின்மணியே
இப்போதுநானுரைக்கும் மொழிகளைகன்றாய்
இன்பமுடனே கேளும் (போய்)

தெய்வத்தைமறவாதே தருமஞ்செய்
செய்கைதுறவாதே

பொய்யுரைபேசாதே புலவரை
புன்மையாயேசாதே (போய்)
வஞ்சரைச்சேராதே தர்மார்க்க
வார்த்தைகள்கூறாதே
நஞ்சமெனவோர்கள் தாமதனைக்கார்ப்பது
சற்றும்பின்வாங்காதே (போய்)
கன்றிமறவாதே நல்லோர்கள்
நட்பைத்துறவாதே
குன்றியிருந்தாலும் பிறர்பொருள்களை
கொள்ளவிரும்பாதே (போய்)
கோபத்தைநாடாதே எவரிடத்தும்
கொடுஞ்சொல்லாடாதே பெரியோரை
பாபத்தைத்தேடாதே
பணியநீவாட்டாதே (போய்)
காசிக்குப்போய்வாரும் உந்தனுடைய
கர்மமெல்லாந்தீரும்
சர்க்காசிவிசுவ நாதனைப்போற்றியே
இனிவந்தாலுன்கீர்த்தியே (போய்)
இந்தப்படிநடந்தால் உனக்கினை
எவருண்டிப்பாரினிலே
இந்தநாட்டிழுபுடனே வாழ்வாய்
செல்வக்கண்மணியே (போய்)

காமதேனு-வசனம்.

கேளுமப்பா மகனே பகவமுனி காசிசன்னிதிக்கிப்போனால் முன்னாலேயொருதுபடுத்திருக்கும் அது யாருமல்ல நந்தி அப்புறம்போனால் ஆனைமுகத்துடனே ஐங்கரத்துடன் விக்கினேஸ்வரர் இருப்பார் அவரைத்துதிபண்ணிக்கொண்டு அப்புறம்போனாயானால் ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் இடப்பாகத்தில் தெய்வயானையும் வலப்பாகத்தில் வள்ளியம்மனுமாயிருப்பார் அவரைத்துதிபண்ணிக்கொண்டு அப்புறம்போனால் அவிடத்தில் காசிவிசுவேசர் விசாலாக்ஷியம்மனுடன் திலதப்பொட்டிட்டுக்கொசுபாணம்பூ



ண்டியிருப்பார் அவர்பாதத்தில் சாஷ்டாங்கமாகதெண்டஞ்செய்துஉனக்குவந்த அஞ்ஞியானத்தைப்போக்கடித்து வாருமப்பாமகனே பகவமுனியே.

பகவமுனி-விருத்தம்.

அன்னையேதாயேகேளாய் ஆயாசப்படவேவேண்டாம்
சொன்னசொல்வழுவாமல்நான் தொடர்ந்துபோகாசிக்கேக
பன்னகாபரணம்பூண்ட பராபரனருளைநன்றாய்
உன்னிநற்றுதியேசெய்தா லொழிந்திடுங்கர்மந்தானே

வசனம்.

கேளும் என்னைபெற்றதாயே நீயாதொன்றுக்கும் அஞ்சவேண்டாமெனக்குப்பிடித்திருக்கும் கர்மத்தொலையகாசிக்குப்போய்நான் அஞ்ஞியானம் தொலைத்துவாரேன் நீ சுகமாக ஆத்திலே தானேயிரும்.

பகவமுனி-தரு-ஆதிதாளம்

பல்லவி.

காசிதேசம்போய்வாரேன்-என்னம்மணிதான் (கா)

அநுபல்லவி.

காசிதேசப்போயினும் கண்டென்தந்தையுடன்
பேசியழைத்துக்கொண்டு பிரியமுடன்வாரேன் (கா
ஆசைபாசம்விடுத்து அருந்தவத்தோரையடுத்து
நேசமுடன்பூசிக்கும் சரணைக்கண்டேசேவிக்க (கா)
ஆதிசிவன்பாதத்தை அன்பாகவேதேடி
வேதனைதீர்ப்பாரென்று விசுவநாதனைநாடி (கா)
என்வினையென்னவெல்லாம் ஈடேத்துவாரென்று
அன்னமல்கிலனுடைய அடிதொழுதிடவென்று (கா)

பகவமுனி-விருத்தம்.

சதுர்மறைபொருளுமாலும் சாஸ்திரந்தானுரைத்தாலும்
கதிபெறதத்தலங்கள் கலியுகத்தானொன்றும்
அதிகாமயன்பத்தோ ரட்சமுதலாய்க்கே
பதிவிட்டுகாசியாத்திரை பார்க்குடன்வருகின்றேனே.

வசனம்.

அகோதெப்படியென்றால் வேதசாஸ்திரமுதலாகிய கலைக்கியானக்தேர்ந்த சுத்தபவித்திராய் பகவமுனி காசியாத்திரை போகிறவிதங்காண்க.



பகவமுனி-தரு-அடதாளம்

கண்ணிகள்.

சீரானதாயார்கையில் பகவமுனி
கிலவதுபெற்றுக்கொண்டு
போசுழிதந்தையிற்புறப்பட்டு தன்றுதய்
போனவழியைக்கண்டு
காசிதீர்த்தங்கொண்டு வருவோனை
கைபெடுத்துக்கும்பிட்டு
காசிக்குப்போறவழி யிதுதானோவென்று
கடுகெனவேகடந்து
பேசிக்கொண்டுபோற பிராமணருடன்கூடி
பின்னுகவேதுடர்ந்து



கங்கைகடைமுடி தரித்திடும்சங்கரன்
சன்னிதிதெரியக்கண்டு
தாங்குசிவன்கோவில் கோபுரமிதுவென்று
சரியாகட்டித்துக்கொண்டு (சீரா)

பொது-விருத்தம்.

நடக்கிடும்போதிலந்த நவெழிதனிலேகாடு
படர்த்திடுங்கானகத்தில் பாண்டியன்வேட்டையாடி
அடர்த்திடுஞ்சேனையோடு அடவியில்தாவுவிட்டு
கடத்திடும்போதில்காசி பிராமணனையுமேகண்டார்.

வசனம்.

அகோதெப்படியென்றால்பகவமுனியாகப்பட்டவர் காசியாத்திரைபோகும்போது மதுராபுரியாளப்பட்ட பாண்டியமகாராஜன் வேட்டையாடி அரண்மனை வருகிறவிதங்காண்க



பாண்டியமகாராஜன்வேட்டையாடி

ஆரண்மனைக்கு-வருகிற-தரு-ஆதிதாளம்

பல்லவி.

பாரெங்கும்பேர்பெற்ற—பாண்டியமகாராஜன்
பாதைசாரிவாரார் வேட்டையாடி
வேசாரிவிட்டைவாரார் (பா)

அநுபல்லவி.

காரியகர்த்தரான காவலர்சேவுகர்
கரிபரிகாலாளர் காட்டில்வேட்டைகாட (பாரெங்)

சரணங்கள்.

மதுரையாள்மகாராஜன் மாநிலம்புகழ்போஜன்
வனத்தில்வேட்டையாடி வழியேவருகிறார் (பாரெங்)

பாதையில்வருகின்ற பிராமணப்பிள்ளைய
பார்த்தாரேரந்தேசம் பரிவுடன்சொல்லுமென்று (பாரெ)

வனத்தில்வேட்டையாடி மன்னன்பாண்டியராஜன்
மதுரைப்பட்டணம்போக வழிபிடித்தானன்றாக (பாரெ)

பாண்டியன்விருத்தம்.

இந்தகற்பெருத்தகாட்டில் ஏவரிலாதொண்டியாக
எந்தவூரெந்தநாடு எங்கிருந்தெங்கேபோகிர்
சிந்தையும்மகிழ்ந்தென்னோடு சேதியுஞ்சொல்லுமென்ன
அந்தமாய்ராஜனோடு ஆதியோதுரைக்கின்றரே

வசனம்.

ஆர்காணும்பிராமணப்பிள்ளையாயிருக்கிறாய் நீரெந்தவூர் ஒண்டியாயிந்த அத்வானகாட்டில்போகிர்சொல்லீர்காணும்பிராமணா.

பகவமுனி-தரு-அடதாளம்.

கண்ணிகள்.

என்னென்றுசொல்லுவேன் எந்தன்தலைவிதியை
ஐயராஜாவே பிர்மன்



எழுதினதலைவிதிக் கென்னென்றுசொல்லுவேன்
ஐயராஜாவே
சிவகெங்காபுரம்வாழும் தேசிகன்நானையா
ஐயராஜாவே இந்த
ஜெகத்தினில்பேர்பெற்ற தேவப்ராமணனையா
ஐயராஜாவே
பரிபகயாகஞ்செய்யும் பிராமணக்குலமையா
ஐயராஜாவே இந்தப்
பாரிலென்தந்தைபேர் போராழிமுனியையா
ஐயராஜாவே
பாலனுமில்லாமல் பரமனைதுதிசெய்து
ஐயராஜாவே அந்த
செல்முனிவருமே சிவத்தியானஞ்செய்து
ஐயராஜாவே
சோகனென்தந்தை சிவனைதுதிசெய்து
ஐயராஜாவே அந்த
போராழிமுனிக்குநான் பிள்ளையாய்பிறந்தேனே
ஐயராஜாவே
பிறந்தஜாதகம்நான் புலச்சியைசேர்ந்திட
ஐயராஜாவே பிர்மன்
பிரித்தெழுதிட்டானப்போ பிறந்தலக்கினத்தில்
ஐயராஜாவே
பிள்ளைபிறந்தலக்கினபேர்கெட்டுப்போகுதென்று
ஐயராஜாவே அன்றே
புறப்பட்டேனென்தந்தை போனார்காசியாத்திரை
ஐயராஜாவே
அன்னைகாமதேவி அருமையாய்வளர்த்தென்னை
ஐயராஜாவே பின்பு
அரியகல்விசாஸ்திரம்அன்பாய்படிக்கவைத்தாள்
ஐயராஜாவே
சகலகல்வியோதியென்தந்தையெங்கேயென்றேன்
ஐயராஜாவே எந்தன்

ஜாதகங்கணித்தவர் தாழ்வானகுலத்தினில்
ஐயராஜாவே
தனையன்பூலைச்சியுடன் சேர்வதாயிருப்பதனால்
ஐயராஜாவே அவர்
எழுதினஜாதகம் என்கையினிற்கொடுத்தார்
ஐயராஜாவே
எழுதினஜாதகம் எங்கேயிருக்குதென்றேன்
ஐயராஜாவே அப்போ
இத்தாமகனைஎன்றான் கையில்கொடுத்திட்டான்
ஐயராஜாவே
வாங்கிஜாதகத்தை வாசித்துபார்த்ததில்
ஐயராஜாவே இது
வாஸ்தவமாக வயதும்பதினாறில்
ஐயராஜாவே
பறைச்சியைச்சேர்வானென்றுபலிவாயிருப்பதாலே
ஐயராஜாவே அந்த
பாவத்துக்கொருநாளும் பார்தனில்யாத்திரை
ஐயராஜாவே
தேசாந்திரம்போறேன் சேதியிதுவையா
ஐயராஜாவே நான்
காசியாத்திரைபோறேன் கர்மந்தொலையவென்று
ஐயராஜாவே.

பாண்டியராஜன் - விருத்தம்.

இத்தருணமயக்கநெஞ்சமடக்கிவேதியர்பிரியாதால்
விதிப்பயன்விடுமோசொல்லு வீணுக்குநீயேன்போறாய்
கதிதருங்காசிபட்டணங் கங்கைசத்திரமுண்டு
அதனிற்போய்வேள்விசெய்தால் அகன்றிடும்பாவந்தானே.

வசனம்.

வாருமையாபிராமணரே நீரேன்காசிக்குப்போறீர் காசிக்
போனாலுங்கர்மந்தொலையாது நம்முடையபட்டணத்து மேல்
தில் காசிக்குப்போறபட்டணம் அவிடத்தில் கங்கைநீர்மண்



டபம்திருக்குளம் எக்கியசாலையுண்டு கட்டிவைத்திருக்கிறன்
அதனில்வேள்விசெய்தால் புலைச்சியைச் சேரும்படியாயிருக்கிற
உன் ஜாதகதோஷம் விட்டுப்போகும் அந்தயாகஞ்செய்வீர்பிரா
மணரே.

யாகவாழனி - விருத்தம்.

செய்யும்வேள்விக்குவேண்டிய தேர்ப்பையுமிறகுநெய்யும்
ஐயனேசடங்குசெய்ய அடக்கமும் கொடுத்தாலெனக்குத்தன்
கையினால்வேள்விசெய்து கழிப்பேனப்புலைச்சிதன்னை
ஐயனேசேராட்டமல் அகன்றிடச்செய்வேன்மன்று

வசனம்.

கேளும்மகாராஜனே நீங்கள் அந்தகாசிக்குவாராதவராய்யா
ர்போல் என்னெதிரினில்வந்தான்பாவத்தையு யாகஞ்செய்யச்
சொன்னீரே அதுவேபேரிதும் அந்தயாகத்துக்குவேண்டிய சா
மக்கிரிகைகளையெல்லாந் தந்தீர்களானால் என்கையினால் அந்த
யாகஞ்செய்து அந்தபுலைச்சி என்னிடத்தில் சேராமல்படிக்கியா
கஞ்செய்து தீர்க்கிறேன் ராஜனே.

இராஜன் - வசனம்.

அப்படியேதாங்கள்கேட்கும் சாமக்கிரியைகள்எல்லாம் இ
ன்றைக்கேசேர்க்கின்றேன் அப்படியேநடத்துங்கவாமி;

பாண்டியன்விருத்தம்;

ஆரடாசேர்வைக்காரா அதிசீக்கிரமாகயிப்போ
சீருடன்கருவூரென்னும் சேரியில்வீற்றிருக்கும்
வீரம்மிகுந்த அந்த வெட்டியான்தோட்டிதன்னை
சேதாரமறத்தாவந்து விரைந்தழைத்துவருவாயே.

வசனம்.

ஆரடா அடாசேவகா கருவூர்சேரிக்குச்சென்று
வேம்பான்தோட்டியை நானுன் அழைத்துக்கொண்டு வரச்சொன்
னேனென்று அழைத்துவாருமய்யா

சேவகன் - வசனம்

அப்படியேகருவூர்சேரிக்குச்சென்று வேம்பான் தோட்டி
யையழைத்துவருகிறேன் ராஜனே.

சேவகன்-விருத்தம்.

கருவூருசேரிதன்னில் களிப்புடன்வீற்றிருக்கும்
பெருமைசேர்வேம்பான்தோட்டி பெரிதனக்காரகேளாய்
விரைவில்ராஜனும்மை இக்கணமழைத்துக்கொண்டு
துரிதமாய்வரவேசொன்னார் தோட்டியேஓடிவாடா

வசனம்

அடா அடா கருவூர்சேரிக்கு பெரியதனஞ்செய்யும் வேம்பான்தோட்டி பண்ணைக்காரா பாண்டியமகாராஜன் உன்னை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் ஆகையால் தமுக்கு எடுத்துக்கொண்டு சீக்கிரமாக என்னுடன்கூடத்தானே ஓடிவாரும்பா வேம்பான்தோட்டி.

வேம்பான்தோட்டி-வசனம்

அப்படியேஇதோ ஓடிவாறேன் ஆண்டே.





பொறு-விருத்தம்.

பாண்டிராட்டாசனேவற் பணிவிடையாவுஞ்செய்யும்
நீண்டவெண்பல்லும்பேய்வாய் தெரித்தகண்சிமிட்டிடாமல்
தோண்டிகள்ளதிகமுண்டுதோட்டியும்மோங்கொண்டு
வேண்டியராஜன்முன்னேவேம்பான்தோட்டியுமேவாரான்

வசனம்.

அதோதெப்படியென்றால் கருவூர்சேரிக்குபெரியதனஞ்செய்யும் வேம்பான்தோட்டி வருகிறவிதங்காண்க.

வேம்பான்தோட்டி-வருகிற-தரு.

தெந்தினந் தெனதினனா-னாதி
தினனாத்தினனாந் தினதினனா
அந்தியும்பகலுமாண்டே-ஆண்டே
ஆண்டைவீட்டிலேபடுத்திருந்தேன்
சோளமாரிவெள்ள-மெத்த
சொரிந்ததேபாருங்கள்பெரியாண்டே
போனுல்போனவழி-வெள்ளம்
பிரளுதுபாருங்கள்சின்னாண்டே
பெரியேறிவுடைஞ்சிவெள்ளம்
பிரளுதுவாருங்கள்பெரியோரே
வைரகம்பாதே-அதேவரும்
ஓட்டம்பிடியுங்கள்சின்னாண்டே
சித்தேரிவுடைஞ்சி ஆண்டே-சிறக்கம்
சம்பாநெல்லெல்லாம்பாழாச்சு
புத்தன்மடையுடைஞ்சி-ஆண்டே
புதியநெல்லெல்லாம்பாழாச்சிதெ

தோட்டிசொல்-பாணி.

பாண்டியராஜனே பாக்கையாசாமி
ஆண்டையேயென்னை அழைத்ததைச்சொல்லும்

வசனம்.

சாணஞ்சாணையமையாராஜனே என்னை யழைப்பித்த காரிய தெரியச்சொல்லுமையா ஆண்டவனே

இராஜன் விருத்தம்.

ஆரடா தோட்டி வெம்பா அக்யானத்தலையனன்றாய்
பெருள்ள காசிக்கேக பிராமணன் வந்ததாலே
சீர்தாயவரையாக செய்யென்றேனா செய்வேனென்றாய்
சேடா வேள்விக்கேற்ற சமித்துதொப்பைகளுந்தாவென

வசனம்.

ஆடா அடா தோட்டிவெம்பா காசியாத்திரைபோக ஒருபிராம்மணன் வந்துயிட்டதைக் கருணைமகாஜின்ட்டையேபோய்க்கொண்டிருந்தார் நான்வேட்டையாகவரும்போது அவரைக் கண்டுசேவித்து நமதுகருணைமண்டபத்திற்கருணை யக்கிய சாலையில்யாகஞ்செய்வதாய் அழைத்துக்கொண்டுவந்தேன் ஆகையால் அந்தவேள்விக்கு காரைகுரை கள்ளிமுளையானமுன்னைமுஷ்டி அரசு நாயுருவி சமித்து விறகு ஆயிரஞ்சுமைக்கு அதிகமில்லை ஜமாம்கமதுகருவூர்சேரி ஆயிரத்தைந்நூறு அதலேவாசல்இருக்கிறபடியால் தலைக்கட்டுக்கொருசுமைகொண்டுவந்துயாகசாலையில் போடும்படியாய்திட்டஞ்செய்துதண்டோராமூலமாய்த் தெரியப்படுத்தும் அப்படி நடக்காதவனுக்கு ராஜதெண்டனை நடக்குமென்றுசொல்லுந்தோட்டி.

தோட்டி-வசனம்.

அப்படியேசேரிக்குப்போய் தலைக்கட்டுக்கொருசுமை-ஆல் அரசு-எருக்கு-பாலை-கண்டங்கத்திரி-அருகு-விறகு சமித்து முதலானதும் கொண்டுவரச்சொல்கின்றேன் ஆண்டே.

பொது வசனம்.

அதோதெப்படியென்றால் கருவூர்சேரிக்கு பெரியதனக்காரனாகிய பண்ணைக்காரவெம்பான்தோட்டி சேரியில்தண்டோரா மூலமாய் தலைக்கட்டுக்கொரு சுமை யாகசாலையில் கொண்டு போடச் சொல்லிவிட்டு தன்வீட்டுக்கு ஆள் விட்டதினாலே தன்குமாரத்தியாகிய ஆதியம்மாளை வெம்பான்தோட்டி அழைக்கிறவிதங்காண்க.



வெம்பான்தோட்டி-விருத்தம்.

வேதியனாந்தன்றேவி விளம்புவேனுனக்கோர்
சேதியைசொல்வேன்கேளாய் சீக்கிரமாகத்தானே
ஆதியை அனுப்பிகாட்டில் அருகநாயுருவிதர்ப்பை
சமித்தலாம்கொண்டுவாவென்று இனிதுடனனுப்பலாமா

வசனம்.

கேளும் என்பெண்சாதியாகியதேவி நமது அருமை கண்மணியாகிய ஆதியம்மாளை காட்டுக்கனுப்பி காரைகுரை கள்ளிமுளையான் தெர்ப்பைமுன்னைமுசுட்டை எருக்குநாயுருவிதெல்லாம் கொண்டுவரச்சொல்லி அனுப்பலாமா சொல்லும் என்பெண்சாதி.

தேவி-விருத்தம்.

அறியாதகுமாரத்தி ஆதியைக்காட்டிலென்னுக்
தெரியாதவளுமாச்சே தெர்ப்பையறிந்தாரைக்கும்
பரியாதவளுமாச்சே பாசிலைவிறகுமுஷ்டி
சரியாக அனுப்பகாட்டில் சாம்புவா சொல்லுவாயே

வசனம்.

கேளும் சாம்புவா ஆதியானவள் அறியாதவளாச்சே காடுமலைதெரியாதவளுமாச்சே தெர்ப்பை பில்லென்னும் பரியாதகுமாரத்தியை எப்படிகாட்டுக்கு அனுப்புகிறது ஆனாலுமக்குச் சம்மதமானால் அனுப்புவீர் வீரசாம்புவரே

வெம்பான்தோட்டிவிருத்தம்.

தெரிவையர்க்கரசியென்று திருந்தியவாகனாரும்
அரண்மனை தனிலிருக்கும் அம்மாகேளாதியம்மா
விரைவினில்நீயும்போய் வெளியில்வாருமம்மா
பிரியமாய்ச்சேதியொன்று புகலவேவேணுமம்மா

வசனம்.

அழகினில்மிகுந்த என்னருமை மகளாகிய ஆதியம்மா அரண்மனைவெளியிலேவாருமம்மா தாயே,

ஆதியம்மாள்-வசனம்.

அப்படியேவருகின்றேன் என்தந்தையே.

ஆதியம்மாள்-வருகிற

பொது-விருத்தம்.

அரனிட முடியைக்காண அயனுமே அன்னமாகி
பரமனைக்காணுத்தாலே பார்த்ததாய்பிரமன்நாவில்
சரஸ்வதியிருந்துசொல்ல சங்கரனெதிர்த்துசாபம்
பிறவெனவேப்பான்தோட்டிக்குப் பெண்ணுகப் பிறந்தாள்வாணி

வசனம்.

அகோதேப்படியென்றால் சிவனுடைய முடியைக்காண அன்னபக்ஷியாய்ப்பறந்து சிவனுடையமுடியைக்காணுமல் தியங்கியிருக்கும்போது பிர்மதேவன் நாவில் சரஸ்வதியிருந்து சிவனுடையமுடியைக்கண்டதாய் பொய்சொன்னத்தின்பேரில்சிவனுக்குக்கோபம்பிறந்து சரஸ்வதியைவெப்பான்தோட்டிக்கு பெண்ணுகப்பிறக்க சாபமிட்டதினுலே சரஸ்வதிதோட்டிக்கி பெண்ணும்பிறந்து அவர்கள் ஆதியென்று பேரிட்டதின்பேரில் ஆதியம்மாள் சபைக்குவருகிறவிதங்காண்க.

ஆதியம்மாள்-வருகிற தரு

(௩-ம்) பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அழகில்மிகுந்தமதன் — ரதிக்குயர்ந்தஒய்யாரி
ஆதிநாயகிரும்வந்தாள் — அழகுடனே

அநுபல்லவி.

கழலணிசிலம்புகள் — கல்லுகல்லென்னவே
கன்னியாதிரும்மிவந்தாள்

சரணங்கள்.

கொஞ்சுங்கிளிமொழியாள் — சோலைக்குயிலிதழும்
வஞ்சிவடிவழகை — மானிலமெங்குப்புகழ (அழ)

வாழைப்பருவம்கல்ல — வயதுபனிரெண்டுடன்
வேசொத்தவிழிமாது — வெகுவாய்ப்புகழ்ந்துபன்ன (அழ)



சின்னஞ்சிரித்திடையாள் — திரேகஞ்சொர்ணமேனியாள்
அன்னநடைநடந்து — அவனிமீதில்தொடர்ந்து (அழ)

சித்திரசரிகைச்சேலை — செவியில்மின்னக்காதோலை
கொத்துசரப்பளியும் — கோர்வைமணியாரமாய் (அழ)

ஆதிநாயகி-விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி அருமையாயென்னைபெற்ற
மெய்யனேபோற்றிவெப்பான்தோட்டியேபோற்றிபோற்றி
ஐயமில்லாமலிப்போ ஆசீர்மந்திருந்தயென்னை
வையமேயழைத்ததென்று பரிவுடன்சொல்லுவீரே

வசனம்.

சேனும் யென்னைப்பெற்றதந்தையே என்னை அழைப்பித்த காரியம்தெரியச்சொல்லுமேனுந்தந்தையே.



வேம்பான் - தரு - ஆகிரி - அடதாளம்.

கண்ணிகள்

அம்மா ராஜனென்னை ஆளைவிட்டனுப்பினமே
ஆதியம்மா தெர்ப்பை
ஆயிரஞ்சுமைகொண்டு அரசன்வரச்சொன்னூரே
ஆதியம்மா

ஆள்விட்டசேதியை அறிந்துபேசேரியில்
ஆதியம்மா தப்பாமல்
அவரவர்வீட்டுக்கோர ஆள்வருவார்களே
ஆதியம்மா

எனக்குப்பிள்ளையிருந்தால் பிகூணம்அவருமே
ஆதியம்மா கூட
இட்டுக்கொண்டுபோயி யாவருங்வருவாரே
ஆதியம்மா

தலைக்கட்டுக்கோரான்போய் சேரியிலவரும்
ஆதியம்மா ராஜன்
தெர்ப்பைகள்எக்கிய சாலையில்போடச்சொன்னூர்
ஆதியம்மா
வீட்டுக்கோராளாக வேகமாவோடியே
ஆதியம்மா பொழுது
விடியாமுன்னமேதெர்ப்பையெல்விக்குபோடச்
சொன்னூர் ஆதியம்மா

காட்டுக்குப்போய்விறகு காளைருமைமுதல்
ஆதியம்மா ராஜன்
கடுக ஆயிரஞ்சுமை கட்டிவரச்சொன்னூரே
ஆதியம்மா

நமதுவீட்டுக்குஆள் நானல்லால்வேறுண்டோ
ஆதியம்மா எனக்கு
நடக்கச்சக்தியில்லை நானென்னசெய்குவேன்
ஆதியம்மா



வேம்பான் - விருத்தம்.

கலைகட்டுமாதர்மெச்சும் கன்மனியரசன்சொன்னூர்
தலைகட்டுக்கோராள்போயி சமித்துதர்ப்பைகளும்பில்லும்
இலைகட்டுசுமையாயிரம் இதுவெல்லாங்கொண்டுமாதர்
உலைகட்டுமுன்பதாக ஓடியேவரவேசொன்னூர்

வசனம்.

கேளும் ஆதியம்மா நம்முடைய ராஜன் சேரியில்தலைகட்டுக்கோராள்போய் காரைருமை கள்ளிமுளையான் ஆலை அரசஞ்சிருயிலை முதலானவைகளைகொண்டுவந்து எக்கியசாலையில் போட்டுவரச்சொன்னூர் நம்முடைய வீட்டுக்கு ஆள் நானல்லாமல் வேறில்லையே எனக்குத்தள்ளாது எப்படிபோய்வருவேன் அம்மா

ஆதியம்மாள் - விருத்தம்.

அப்பனேநானிருக்க அருமேமிதனையேனு
செப்பமாய்க்காட்டுக்கேகி இரங்கிகாவிவன்னி
ஒப்புடனொடித்துக்கட்டி ஊரார்க்குமுன்னேவாரேன்
இப்பவேஅனுப்புமையா இனையடிபோற்றிபோற்றி

வசனம்.

கேளும் என்னைப்பெற்றதந்தையே நானிருக்கஉனக்கு ஆண்பிள்ளையென்னத்திற்கு சேரியாருக்குமுன்னமே காட்டுக்குப்போய் சமித்து தெர்ப்பைகொண்டுவந்து யாகசாலையில் போட்டுவருகிறேன் எனக்குச்சிலவுதாருந்தந்தையே.

வேம்பான்தோட்டி - விருத்தம்.

பண்ணினதவமோசெய்த பாவமோஅறிகிலேநான்
பெண்ணேனெனக்குதித்து பெருங்கானகத்திற்சென்று
தின்னமாய்சமித்துதெர்ப்பை சுமைதலைமேலெடுத்து
கண்ணினுல்பார்க்கதாணுங் காரணம்வந்ததம்மா

வசனம்.

கேளும் ஆதியம்மா பெண்வயிற்றில் பெண்பிறந்து எடுத்து வளர்த்து செல்வமாய் வைத்திருந்து உன்தலைமேல் தொப்பைபை யையெடுக்க என்கண்ணிறல் எப்படிபார்ப்பேன் ஆதியம்மா

ஆதியம்மாள்-விருத்தம்.

அதுக்கென்னமபவாயில்லை ஆண்பிள்ளைபிள்ளைத்தாலே
உதிக்குநல்லபெண்ணுறைம் உதவியாய்தகப்பனுக்கு
பெதுக்கு யேபோகவேனும் யாதொருகுறைவராது
இதுக்குநீ யஞ்சவேண்டாம் இக்கணம் போய்நான்வாரேன்

வசனம்.

கேளும் என்தக்கப்பனே யுனக்கு ஆண்பிள்ளையில்லாதநிறை லே தகப்பனுக்குத்தன்னாலிட்டால் என்றும் உதவியாய்பெண் பிள்ளைவேலைசெய்தால் அதனாலே குறைவராது ஆகையால்நா ன்காட்டுக்குப்போய் காரைசூரை கள்ளிமுளையான் சமித்துதெ ர்ப்பை முதலானதுங் கொண்டுவருகிறேன் தகப்பனே.

வெப்பாண்டோட்டி-விருத்தம்

பாக்கியவதியே அம்மா பார்வனத்தன்னிலேநீ
போக்கியேசமித்துதெய்யல்லாம்கொடிக்குள்கொய்துசேர்த்து
சாக்கிறதையாகநீயும் சுமையதுகட்டித்தூக்கி
சிக்கிரமாயெடுத்துவக்கிய சாலையில்போட்டுவாய்

வசனம்.

கேளும் பாக்கியவதியாகிய ஆதியம்மா நீ காட்டுக்கு சேரி யாருடன்கூடப்போய் சமித்துதெர்ப்பை முதலானதும் பரித் துசுமைகட்டிக்கொண்டு சீக்கிரமாக வாருமம்மா தாயே.

ஆதிவனம்போகிற-தரு-ஆதிதாளம்

கண்ணிகள்.

| | |
|---|---|
| உல்லாசபாணதடையும் | ஒளிவுபாபொன்ன |
| வல்லமையுடனே | ஆதிவருகலுற்றாள் |
| கொருசங்கிலிமொழியும் | கோவைக்கனிபிதற்றும் |



| | |
|---|---|
| வஞ்சியாள்வனமே | பார்க்கபாதுவராள் |
| தாமரைச்சமலப்போலே | தன்னிடமுகத்தமுகும் |
| மாமயில்போலே | நடந்துமாதுவாரான் |
| பாதச்சிலம்புகொஞ்ச | பட்டுவர்லைச்சேலையிஞ்ச |
| மாதுநல்ல ஆதியம்மாள் | வனப்பார்க்கவாராள் |
| காரைசூரையும்பரித்து | கள்ளிமுளையானுந்து |
| வாரிபோரிடமே | சேர்த்துமாதுவாரான் |

வெள்ளிக்கேற்றதெர்ப்பையும் விறகுமுன்னைமுஞ்சியும்
தாழ்வில்லாமல்பறித்து சமித்துதெர்ப்பையும்
எருக்கன்முதல்அறுகானதும்னைக்கியத்துக்கானதெல்லாம்
முருக்கன்முதல்தர்ப்பையெல்லாம் முல்லைபறித்தாளாம்
பறித்ததர்ப்பைசமித்தெல்லாம் பலபலவல்துகளொடும்
பெருத்தசுமையாகக்கட்டி புறப்பட்டாளம்மை

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக கருவூர்பறை ச்சேரியில் தலைகட்டுக்கோரான் காட்டுக்குப்போய் எக்கித்துக் குசமித்துகொண்டுவந்துபோட்டபின்பு ஆதியம்மாள்சுமையெடு த்துவருகிறவிதங்காண்க.



ஆதியம்மாள்-விருத்தம்.

சுமையதனைமுடித்துக்கட்டி சிக்கிரமாகத்தானே
இமையவர்வனமுந்தாண்டி எப்பெருங்காடுந்தாண்டி
சமையமாய்கருவூர்தன்னில்சுமையதைதலையெடுத்துக்கொண்டு
விமலனூர்சொற்படிக்கு வேள்விக்குவருகின்றாளே

ஆதியம்மாள்-தரு-கலியாணி ஆடதாளம்.

பல்லவி.

சுமையெடுத்துக்கொண்டாளே — கருவூர்போக
சுருக்காய்நடக்கின்றாளே

சரணங்கள்.

சுமையெடுத்துக்கொண்டு — சுருக்காய்நடந்து
இமையவர்வனந்தாண்டி — எக்கியசாலைநாடந்து
(சுமையெடு)

பொழுதுபோகுமுன்னே — போய்சேரவேணுமென்று
தழலிசுமையதனை — தலைமேலெடுத்துசென்று
(சுமையெடுத்)

கருவூர்எக்கியசாலை — காதமிருக்குமென்று
அருணனும்படுபோது — அஸ்தமிக்குதென்று
(சுமையெடுத்)

இருட்டியுப்போச்சுது — எவருக்குமேனாயில்லை
மிரட்டுதுசுமையுமே — பெருங்காற்றடிக்கவிலை
(சுமையெடுத்)

மாத்தளவில்காற்றிலும் — சுமையினைத்தாங்கிக்கொண்டு
வேத்தருமுகப்பட்டு — வேள்விக்குசுமைகொண்டு
(சுமையெடுத்)

ஆதிவிருத்தம்.

காத்திலும்மழையில்மெத்தக் கருக்கிளில்வழிகாணமல்
சேத்திலுந்தண்ணிலுஞ்சதன் செழுமைமனங்கவும்பட்டு
வேத்தெராருமுசமும்பட்டு மெல்லியாள்விதநடந்து
சாத்திரன்சுமையையெக்கிய சாலையில்ஆதிதானே



வசனம்.

அக்கேயெதப்படியென்றால் கருவூர்சேரியரெல்லாம் காட்டுக்குப்போய் சமித்துசுமையிய பொழுதுயிருக்கச்சேதானே எக்கியசாலையில் கொண்டுபோய்போட்டு சேரிக்குப்போய்விட்டார்கள் ஆதியாகப்பட்டவள் தன்தப்பன் வேம்பான்தோட்டிக்கையில்சொல்லுவாங்கிக்கொண்டு வருகிறதற்குநாழிசென்று பொழுது எறிகாட்டுக்குப்போய் சமித்து பறித்துசுமைகட்டுவருகையில் பொழுதுபோய்மழைபிடித்து காத்திலும்சேத்திலும்தனிகனைத்து சுரவன்இராத்துடன்சுமையையக்கியசாலையில் கொண்டுவந்துவாலையில்சாத்திவிட்டுஇருட்டிலுருட்டத்தில்ஒதுங்கியிருந்தாள் அந்தச் சமயத்தில் பகவமுனிஎக்கியசாலையில் ஓயம்வளர்த்திரக்கிர காத்திசெய்ய நெய்பாண்டத்தை கையில் எடுத்துக்கொண்டு காண்டியில்நெய்வார்த்துக்கொண்டு வருகிறவிதங்காண்க.



பகவமுனியாகஞ்செய்கிறது-அடதாளம்.

பல்லவி.

யாகமிகவுஞ்செய்தாரே—பகவமுனி
யாகமிகவுஞ்செய்தாரே

அநுபல்லவி.

யாகமிகவுஞ்செய்தார் ஓமமனதவார்த்தி
யோகபகவர்கர்ப் பூமனைக்கொருத்தி

(யாகமிகவும்)

சரணங்கள்.

தன்னிடஜாதகம் தன்னதெழுதினதா
வன்னியிலெரிக்குமே மாலருதிசோபமல்

(யாகமிகவு)

காட்டுத்திசையிலுள்ள அஷ்டவசுக்களும்
திக்குவிஜயஞ்செய்து தெய்வபக்தியுடனே

(யாகமிகவு)

வடக்குகிழக்குதெற்குமேற்குத்திசைகளெல்லாம்
அபிக்காஜமம்வளர்த்தி அன்பாய்நெய்விளக்கேற்றி

(யாகமிகவு)

விருத்தம்.

கோதமுடமேவாதியர்த வேதியன்புலச்சிசாபம்
தீதமயோகுமென்று செய்தனர்சடங்குதனும்
ஜாதகம்விதிப்படிக்கு தவராமலைப்போதானே
ஆதியும்வேள்வியாக சாலையில்வீற்றிருந்தான்

வசனம்.

இந்தப்பிரகாரமாக பகவமுனி யாகசாலையில்இந்திராக்கினி யோமாதிருதிவருணவாயுகுபோசிக்கிடத்துக்கெல்லாம்ஓமம் வளர்த்தி சாஸ்னிய மூலையில் கலக்கிரகசக்திசெய்து ஓமம்வளர்த்தி பக்கெவா ஒர் பாத்திரத்தில் பார்த்துக்கொண்டு காசண டியால்மாருண்டத்துக்கு வார்த்துக்கொண்டு வரும்போதுசா



ன்னிய மூலையில் ஆதியாகப்பட்டவன் சாவன்திரத்துடன் கிடந்திருவதைப் பகவமுனியாகப பட்டவர் பார்த்து சொல்கிற விதங் காண்க.

பகவமுனி-வசனம்.

ஆ ஆ ஆ ! இவன்தெய்வகன்னியோ ஜவர்தேவியோ அமுதில்சந்திரவதியோ இந்திராணியோ பூமிதேவியோ பார்வதியோ அல்லது இந்தசக்கியத்தில் யென்காமவிடாய்தீர்க்கவந்த ரம்பணியோ ஆ ஆ ஆ !

பகவமுனி திரிபுடை-துருவதாளம்.

கண்ணிகள்.

மதியோவருநிதியோயருக் ஆதியோ விருநிதியோ மட
மாதோமதன் குதோயென்ன ஆதோயின்னயாதோ
மணியோபிர மணியோகண் மணியோகந்த மணியோ மலர்
மருவோவைத் தருவோயக்க வநுவோயிந்த திருவோ
மாதோமட மாதோகாம தேதோவந்த தேதோ
மாதுமையோவோப்பதியோஅப்பதமையோதிலோர்தமையோ
னைசோவமர் குபேரயெக்க கிரோதகயமோர
மாதியோவருந்ததியோ சுதிர்வதியோபதிவிரதையோ

பகவமுனி-சொச்சகம்.

பூமகளோபுவிமகளோ புண்மகளோபுலோமிசையோ
நாமகளோமேனகையோ ரதியோதிலோத்தமையோ
செம்மகளோமாதெய்வ குஞ்சரியோவிருந்தையர்கள்
மாமகளோமான்மகளோ பர்பமோன்றுமறியேனே

வசனம்.

ஆ ஆ நல்ல அதிரூபவதியாய் யென்னைதிரிவிக்கின்றவள் பூமிதேவியோ ஸ்ரீதேவியோ கங்காதேவியோ யிந்திராணியோ இரதியோ சரஸ்வதியோ பார்வதியோ தெய்வயானையோ அந்தர்வதியோ வித்தியாதரஸ்திரீயோ இராஜகன்னிகையோ இந்த யாகசாலையில்சாவன்திரத்துடனடியாயிருப்பதென்ன? ஆ ஆ

பகவமுனி-அதிசயக்கண்டுசொல-விருத்தம்

எங்கிருந்தின்னகைத்தாய் இப்பெருஞ்சத்திரந்தன்னில்
தங்கிருப்பனைபுயின்கீழ் தரித்தஆடையுங்கிநைந்து

பங்கமாயிருப்பதென்று பாவைமேவுந்தனக்கு
அங்கவஸ்திரமுந்தாரேன் அணிந்துக்கொள்மெய்யில்தானே

வசனம்.

கேளும் பெண்ணேஉன்னைப்பார்த்தால்மகாரூபவதியா யிருக்கிறாய் மனமுயிர்க்கினைக்குசாரவஸ்திரத்துடன் இத்தனைதகாத்தி ல்இல்லாமே ஒண்டியாயிருப்பதென்று இதோ இந்த யக்கியசாலைத்தி ண்ணையின்கீழ்ப்படுத்திருந்து பொழுது விடிந்தபிற்பாடு வீட்டுக்கு ப்போகலாம் அல்லது என் அங்கவஸ்திரத்தைத் தருகிறேன் நீ இதையுடுத்திக்கொண்டு அந்தசாரவஸ்திரத்தைப்பிழிந்து உலரப் போட்டு இதையுடுத்திக்கொள்ளும்பெண்ணே.

ஆதி-விருத்தம்.

நல்லதென்றுஆதியாளும் கலைக்குமெய்க்குளிரினாலே
வல்லவன்முனிவன்தந்த வஸ்திரந்தரித்துக்கொண்டு
மெல்லியாள்வாரமேலே விரித்துமேகாயப்போட்டு
திண்ணைமுன்பாகந்தன்னில் நித்திரைதான்செய்தாளே

வசனம்.

இந்தப்படியாக ஆதியாகப்பட்டவள் பிராமணன்கொடுத்த அங்கவஸ்திரத்தையுடுத்திக்கொண்டு தன்சாரவஸ்திரத்தைக்காய ப்போட்டு திண்ணையின் கீழே படுத்து நித்திரைசெய்தாள் பகவ முனி திண்ணையின்மேல் படுத்துக்கொண்டு காமம்பெருகி நித்தி ரையில்லாமல் சொல்கிறவிதங்காண்க.

பொது-தரு-ரூபகம்-நாடகமெட்டு.

கண்ணிகள்.

சங்கரனருள்படிக்கு ஜாதகவிதிதப்பாமல்
தங்கியேபுரண்டெழுந்து மைதயலாளருகில்சென்றார்
கொங்கைமீதில்கையைப்போட்டார் கொப்பெனவெழுந்தாளாதி
இங்கேயாரென்றுசொல்லி யெழுந்துபார்த்தாளாதியவள்
சங்கையாகதானெழுந்து தள்ளிவிட்டாள்பிராமணனை
செங்கையைப்பிடித்துக்கொண்டு சேர்வேனென்றுசொன்னார்
இங்கிதமாய்தானிருந்தான் எழுத்தின்விதிதப்பாமலே
பொங்கியேபுல்லித்துக்கொண்டு புணர்ந்தானன்றுபோகித்தாரே



பகவமுனி-விருத்தம்.

அணைந்துபின்காமத்தாலே அந்தணன்சேர்ந்தபின்பு
உனதிடகுலந்தானென்ன வூரென்னபேர்தானென்ன
மனதினில்அஞ்சாதேயும் வையாமல்விபரமாக
எனக்குநீசொல்லவேணும் யாதுக்குமஞ்சவேண்டாம்

பொது-வசனம்

அதேதெப்படியென்றால் பகவமுனி தகப்பன் யெழுதின ஜாதகம்பதினைருவயதில் ராத்திரிபதினைந்துநாழிகையில் பறைச் சியைப்புணர்ச்சி செய்வானென்றுஎழுதின விதிதப்பாமல் ஆதி யோடே சேர்ந்துவிட்டாரென்றறிக.

அப்படி பகவமுனிசேர்ந்துஅணைந்தபிற்பாடு அடி பெண்ணே என்சாமரசமே என்விரகவேதனையை தீர்த்தகண்ணேயிந்தஇரு ள்சூழ்ந்த ராத்திரியில் ஒண்டியாயிவடம்வந்தயென்ன உன் ஊர் எங்கே உன் ஜாதியென்ன உன்பேரென்னசொல்லும்பெண்ணே யென்றார்.

ஆதி விருத்தம்.

தெண்டப்பிராமணாயென் சேதியைச்சொல்வேன்கேளாய்
பண்டிதைகருவூர்சேரி யிருந்துநான் தர்ப்பைகொய்து
மண்டலத்தரசர்சொன்ன வாக்குமேதவறிடாமல்
கொண்டுதான்வந்தேனென்தன் குலமென்றுபுலச்சிதானே

வசனம்.

கேளும் பிராமணரே என்னூர் கருவூர்பறைச்சேரி வெட்டியா ன்தோட்டிமகள் யென்தாயார்பேர் வேதி யென்பேர் ஆதியென் றுஅழைப்பார்கள் பாண்டியராஜா சொல்படிக்கு சமித்துதெர் ப்பை சுமையெடுத்துக்கொண்டு யக்கியசாலையில்போட்டுவிட்டு சேரிக்குப்போகிறதற்குள்ளாக இருட்டுண்டாகி மழைவந்ததி னாலேஇந்தவேள்வியருகிலிருந்தேனையாபிராமணரே.

பிராமணன்-கொச்சகம்.

தோட்டிகுலமெனமாது சொன்னளவில்பிராமணனும்
ஆட்டிவிட்டபம்பரம்போல் அந்தணனாய்தரைவீழ்ந்து
ஏட்டிலயனெழுதினது இறங்காமல்கடந்ததென்று
வாட்டியிருகையாலே வயத்திலடித்துக்கொண்டானே

வசனம்.

இப்படியாக ஆதிபானவன் தோட்டிக்குமெனது சொன்னவுடனே தெய்வார்க்கு கரண்டியை ஆதியின்பேரில் வீசியெறிந்து பிராமணன் அட்டவிட்ட பாப்பாம்போன் தரையில் விழுந்து கடகடென்று புரண்டு அழுதுவயத்திலடித்துக்கொண்டு தேற்சசையடைந்து அப்பால் தெளிவுண்டு ஜாதகவிதி தப்பாமல் நடந்து போச்சுதேயென்று சொல்லுகிறதம் எப்படியென்றால்.

பகவமுனி-தரு-அடதாளம்

இந்தவிதிக்கிரான் பெண்ணெரயவென்காசி
விஸ்வநாதா தந்தத
ஏழுதினைஜாதகம் தப்பிப்போச்சுதே
விஸ்வநாதா
அந்தணர்குலத்தினில் அவமானடன்பிறந்தேனே
விஸ்வநாதா கண்டோர்
ஆகாத்தியஞ்செய்ய அவனியில்விதித்தாயோ
விஸ்வநாதா
பாப்பார்வலத்தினில் பாலனாய்ப்பிறந்தேனே
விஸ்வநாதா பொல்லா
பறச்சியைப்புணர்ந்திட பாரில்விதித்தாயோ
விஸ்வநாதா
சாப்பாத்தினைதாயார் சாபந்தலையே
விஸ்வநாதா வந்தேன்
காசிக்குப்போவென்றார் காரணமறியாமல்
விஸ்வநாதா
பண்ணினபுண்ணியம் மெல்லாம்பாழாச்சுதே
விஸ்வநாதா கரேனா
பலதிகாரமாகவே பறைச்சியைச்சேர்ந்தேனே
விஸ்வநாதா
என்னினையென்னமுன் தப்பாமல்போச்சுதே
விஸ்வநாதா மறையோர்
ஏளனமாகவே ஏசலாமாச்சுதே
விஸ்வநாதா



தேசாந்திரம்போய் விதிதீர்க்கனவந்தேனா
விஸ்வநாதா பரி
தேசியாகப்போக பழிவந்துசேர்ந்ததே
விஸ்வநாதா
காரியார்த்தமாய்போனேன் கட்டத்தலைக்கவந்தேன்
விஸ்வநாதா வருங்
காரணமறியாமல் கலிகாந்திருந்தேனே
விஸ்வநாதா

பகவமுனி-விருத்தம்.

அரகராவிஸ்வநாதா அறியாமல்செய்தபாவம்
பரிகரித்திட்டென்னை பறைச்சிபுணர்ந்ததைவிட்டு
பிரியவேசெய்வாயிப்போ பிராமணர் என்னைக்கண்டால்
தூரத்திலேயடித்துத்தள்ளி தூரவேபோவென்பாரே

வசனம்.

அரஹரா காசிவிஸ்வநாதா நான் அறியாமல் செய்தகுற்றம் பொறுத்துக்கொண்டு அந்தப்பறைச்சியென்னைவிட்டு அகலும்படி செய்யவேணும் அரஹரா விஸ்வநாதா அபயம் அபயம்.

பகவமுனி-விருத்தம்.

காசிவிஸ்வேசநாதா கடவுளே அபயமையா
போசமேசெய்துராஜன் முன்வேள்விசெய்யச்சொன்னார்
ஆசையாய்ப்பார்த்தசெப்பேதன் அக்கினியைத்துலையுமென்று
வீசியெறிந்தகாசி விதிவந்துநாசஞ்செய்தாய்

வசனம்.

அரஹரா மஹாதேவா ஆலகாலா நான்காசிக்குவந்து காசிமகாலிங்கத்தைப் பூசைபண்ணவேண்டியதாகிற யென்னை ராஜன் மடக்கி வேள்விசெய்யச்சொன்னதினாலே நாற்றுடையாலே ந்துலையுமென்று வேள்விசெய்ததில் பறைச்சியைச்சேரும்படி விதித்தாயோ காசிவிஸ்வநாதா.

பகவமுனி ஆதியைப்பார்த்துச்சொல்-விருத்தம்

வேதியனென்னனைக்குவிபரமாய்த்தெரிந்திருந்தும்
சாதிப்பேர்சொல்லாமல் நீ ஏழுதினமாகத்தனகில்

பாதகிபறைச்சியென்று பகர்ந்திடாதாலேயிப்போ
ஆதியேகாண்டியாலே அடித்தனன்தன்மேல்தானே

வசனம்.

அடியாதகி உன்னைநான் சேரும்போது நான் பறைச்சியென்று உன்சாதியை சொல்லாதினாலே சக்கியத்துக்கு செய்வார்க்குங்காண்டியால் இதோ உன்னை அடித்தேன் இந்த அடியோடே ஓடிப்போடி.

பொது-வசனம்.

அதோதெப்படியென்றால் அந்தகெய்க்காண்டி ஆதிநெற்றியில்பட்டுஉதிரம் வெள்ளமாய்ஓட அந்தஉதிரத்தை ஆதிமுந்தானியில் துடைத்துக்கொண்டு புலம்பிக் கொண்டிருக்கிற விதங்காண்க



ஆதிபுலம்பல்-தரு.

இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

ஐயோவென்றலே கதியோ பார்ப்பான் கையில்
அடிபடவும் விதியோ



அநுபல்லவி.

உய்யாவேஉதிரங்கள் வோடுதேஆறாக
உலகத்தோர்காகத்தென்னை பரிரங்கும்பேறாக(ஐயோ)

சரணங்கள்.

கன்னியைபதியென்னை கைபிடித்திழுத்தாரே
கறைபடுத்திதன்னை காண்டியாலடித்தாரே (ஐயோ
புலையன்தோட்டியர்க்கு பெண்ணாய்பிறந்தென்னை
பேர்கெடுத்தாளென்று புலையர்க்கெல்லாஞ்சன்னை(ஐயோ)
தந்தைவேப்பான்தோட்டி தானறிந்தால்சேதி
சண்டைபோட்டடிப்பாரோ தடைக்கஞ்சாபறைச்சாதி ()

பொது-விருத்தம்.

அடிபட்டுஆதி அலறிப்புலம்பிக்கொண்டு
இடர்செய்யும்பார்ப்பான்கையில் ஏனடிபட்டோமென்று
கடைக்கண்ணில்திருமெத்த கலங்கியேசொரியவேதான்
வடிவுடையாதியாளும் மவுனமாயின்றிருந்தாள்

வசனம்.

அதோதெப்படியென்றால் ஆதியாகப்பட்டவள்பார்ப்பான் கைகாண்டியாலேஅடிபட்டு அழுதுக்கொண்டிருக்கும்போது ப[illegible]சொல்கிறதைக்காண்க.

பசவமுனிவிருத்தம்.

ஆதிநீயேகேளாயுன்னை அடித்ததாயென்மேல்தப்பு
சாதிசொல்லாமலென்னைச் சேர்ந்ததுஉன்மேல்தப்பு
ஆதலால்காசிக்கேகாள் அடைவுடன்போறேனிந்த
சேதியெங்குஞ்சொல்லாமல் சேரிக்குநடக்கிடாயே

வசனம்.

கேளாய்பெண்ணேஆதி உன்னுசாதியை சொல்லாமல் என்னுடன்சேர்ந்ததுஉன்மேல்தப்பு உன்னைகாண்டியாலே நெற்றியின்மேல்அடித்ததுநான்மேல்தப்பு அதற்குஇதற்குஞ்சரியாய்ப்போச்சுது யார்மேலினும் பிழையில்லை ஆகையால்இந்தசேதி யாருடனுஞ்சொல்லாமல் நீயுன்தந்தைதாயுடன்சேரிக்குப்போய்சுகமாயிரும் நான்சூரியன் உதயமாகும் முன்னமே காசிக்குப்போய்ச் சேருகிறேன்பெண்ணேஆதி



ஆதி-தரு

இராகம்-ஆரபி-ஆதிதாளம்

பல்லவி

என்றன்னைமும்மென்னுறீர்—எந்தனைவிட்டு
ஏகயோசனை பண்ணுறீர்

அநுபல்லவி

இன்னவனுன்னையிங்கே சேர்த்ததனைந்துரைவிட்டு
தேசாந்திரம்போறேனென்றீர் சரியாமோஎன்னைவிட்டு

(என்று)

பகவமுனி-தரு

என்றுநான்செய்வேனடி—உன்னைவிட்டு
எங்குநான்போவேனடி.



அன்னியசாதியாச்சே அந்தணன்நானாச்சே
ஆருடனேசொல்வது அதுதெரியாமல்போச்சே

(என்றுநான்)

ஆதி-தரு

போடிநீயென்றால் போவேனோ சேரிக்கழைத்து
போகாமலுன்னை விடு வேனோ

கூடிமருவியென்னை கொஞ்சிகுலாவியிப்போ
கூடாதென்றென்னைதள்ளிக் குதிக்குறீர்கூவியிப்போ

(என்று)

பகவமுனிசொல்-தரு

கூவிடேன்னகையை வீசுறாய் வாராதிருந்துக்
கொள்ளாண்ணடி பேசுறாய்

பாவிபறைச்சேரிக்கு பாப்பானையழைத்தேதக
பார்க்குறுமென்னடி பலத்காரமுமாக

(கூவியேன்)

ஆதி-சொல்

[illegible] தெரியட்டும் யிந்தசங்கதி
வைரொக்குமே தியட்டும்

பறைச்சியைச்சேர்த்தனைந்து பாப்பானுமேயென்று
பண்ணைபர்வந்தலைய பாதேசப்போறேனென்று

(உறவானதும்)

பகவமுனிசொல்-தரு

அன்னமேசொல்லக் கேளாய் சேரிக்கென்னை
அழைக்கவைத்தனை நாளா

கன்னியெனைக்கெடுக்க காத்திருந்தாயோடி
கற்றகல்வியோதாதே கழிசாடைகாரியோடி

(அன்னமே)

ஆதிசொல்-தரு

வீட்டுவார்த்தைநக எடாதே கும்பாயெத்தன்மேல்
வீண்சண்டைகளும் போடாதே

வேப்பான் தோட்டியுங் கேட்டால் பெத்தரோஷமுமாக
வெட்டிப்போடுவண்டா வெறிகுவார் வீணாக

(வீம்புவார்த்தைக)

பகவமுனிசொல்-தரு

வெட்டிப்போட்டாலுஞ் சாகின்றேன் சும்மாவெந்தனை
விட்டுவிட்டாலும் போகின்றேன்
கட்டழகி நீயிப்போ கடாட்சம்வைத்தெனக்கு சொலிக்கி
ஒட்டிவாராதிருந்தால் ஓடிப்போறேன்காசிக்கு

(வெட்டிப்போட்டாலு)

பகவமுனிசொல்-விருத்தம்.

என்னதான் செய்வேன் பெண்ணே ஏழைநான் செய்தகுற்றம்
கன்னியேயுனைப்பெறத்தா காசிக்குப்போடாவென்றால்
உன்விட்டுருமத்தாலே ஓடிநான்போறேன்பெண்ணே
இன்னமிங்கிருந்தாலுன்னை என்றவன்வருவான்கண்டாய்

வசனம்

ஏனாய் பெண்ணே ஆதி நாமிருவரும்இப்படி வழக்கு காடிக்கொண்டிருந்தால் உன்தகப்பன் [illegible] வருவான் நாமிருப்பதைக் கண்டால் வீணை பழிவந்து சேரும் என்பேரில் தயவுவைத்து காசிக்குப்போடாவென்றால் நான்போகிறேன் சுகமாக சேரிக்குப்போய்ச்சேரும்பெண்ணே

ஆதி-விருத்தம்

சொல்லுவதென்னயிப்போ சூரியனுதயமானால்
செல்வமாயென்னைப்பெற்ற தோட்டியும்வரவேபோறார்
வல்லவன்வரவென்பானே வழக்கிட்டுப்போவென்பானே
எல்லையில் அர்த்தமட்டும் இருமையாய்பேசிப்போவாய்

வசனம்,

கேளும்பிராமணரே இதோ அருணோதயகாலமாச்சுதானால் தகப்பன் என்னைதேடிக்கொண்டுவருவார் அவர் உன்னை காசிக்குப்போவென்றால் சுகமாய்ப் போவீர் சும்மா தாமதப்படவேண்டாம்ஐயரே



இருவருக்கும்-தர்க்கம்

பகவமுனி-தரு-இராகம்-முகாரி-ஆதிதாளம்

தொடுவழக்கிடவேண்டாம் பெண்ணே ஆதி
சும்மா அனுப்பிவையடி.
கடுங்கோபத்தோட்டியுங் கண்டால்கொல்லப்போறான்
காணாமல் ஓடிப்போறேனடி பெண்ணே ஆதிநான்

(தொடுவழக்)

ஆதி-தரு

காணமல்போறேனென்று பிராமணாநீரும்
காலெடுத்துவையாதே
சாணுக்கயற்றிலென்னைத் தானுர்போட்டுவந்தன்
சாயமெடுக்கப்போறேன் பிராமணாவுந்தன்

(காணாமல்)

பகவமுனி-தரு

சரசங்களென்பேசுறாய் பெண்ணேவுனக்கு
தர்மமாய்ப்போகுதடி
[illegible] பிராமணருடன்சேர
போகவழிவிட்டிடி காசிக்குநானும் போகவழிவிட்டிடி.

(தொடுவழக்)

ஆதிசொல்-தரு

மனதாயனுப்புமென்கிறாய் வேதியாநீரும்
மரியாதைதபோடனக்கு
இனமென்குலமொன்றாக இருந்தால்நீயிப்படி
இகழ்ச்சியாய் பேசுவீரா பிராமணாநீரும்

(காணமல்)

ஆதிசொல்-விருத்தம்

ஓடியேபோறேனென்றீர் உன்னோநானிவிடத்திற்கு
தேடியேவந்தேனோவென் ஜாதியைச்சேழ்க்காமல்நீர்
கூடியேமருவியெந்தன் குலத்தினைகேட்டுயேனோ
வாடியேபுலம்பவேண்டாம் மறையவர்வம்சஞ்சொல்வேன்

வசனம்

கேளும் பிராமணரே காசிக்குஓடிப்போறேனென்றீரே உன்னைநான்தேடிவந்தது என்குலத்தைக்கேழ்க்காமல் வலியஎன்னைகூடிமருவி என் குலத்தைக்கேட்டு ஏனோ வருத்தப்படுகிறீர் என்ஜாதி உங்கள் ஜாதிக்காகிலும் அவ்வளவு தாழ்ந்த ஜாதியா எங்கள்ஜாதிவளப்பம் சொல்கிறேன் கேளும் பிராமணரே

ஆதிதரு-ஆதிதாளம்

முந்திபிறந்தவர்கள் நாங்களையா பூணூல்
முதல்முதல்தரித்தவர் நாங்களையா
சந்தியனுஷ்டானமும் எங்களுதையா
சாம்புவகோத்திரம் எங்களுதையா
வேதமும்சாஸ்திரமு மெங்களுதையா
வித்தைமுதல்சாதி யெங்களுதையா
சூஸ்திராக்கியசாலை யெங்களுதையா
சட்டபசுபாட்டுசாம்பல் எங்களுதையா
சாட்சாவதிஷ்டர்குலம் எங்களுதையா
தையலருக்ஞாதி எங்கள்பெண்ணையா
ஏதியறையுறது எங்களுதையா
உள்ளேமுழக்கிறது யெங்களுதையா
சாச்சிக்கடையுறதெங்களுதையா
கட்டிசெய்யாலது எங்களுதையா
அந்தணர்முக்திகள் சாதிதானையா
அதுதெரியாமலெங்கே போகிறீர்காணையா
முக்திசேருகரி நான்தானேயா
முஷ்டியெடுக்கநீ வேண்டாங்காணையா
வாரும்மென்சேரிக்கு பிராமணரேஐயா
மணமிருவர்க்குந்தக்கது செய்துவைப்பாரையா

பகவமுனி-விருத்தம்

ஓதியேயெனக்கு உணர்வுகள்சொல்லவந்த
ஆதியேகாணுமிப்போ அந்தணர்குலத்தில்வந்த
வேதியனாமாக்கே விருதுகபிலையென்ற
சாதியில்சேர்க்கலாமோ தர்மமாசொல்லும்பெண்ணே



வசனம்

கேளும்பெண்ணே ஆதி கற்றகல்வியெல்லாம் வோதுகிறாய் விப்பிரர் உயர்ந்தகுல பிராமணராச்சே நீ தாழ்ந்த புலைச்சி ஜாதியாச்சதே என்னைவிருதா புலையர்சாதியிலே சேர்க்க யோசனைசெய்கிறது தர்மமா ஆதி.

ஆதிவிருத்தம்.

ஆதியிலொருவன் ஸ்ரீயோடணைந்துமே ஆண்பெண்டிரண்டு
ஜாதியாய்வந்ததல்லால் தரணியில்வேறொன்றில்லை
பேதமேயில்லையிப்போ பிராமணாயென்னைச்சேர்ந்தால்
சேதமேயில்லைநாமும் சேரிக்குப்போகலாமே

வசனம்.

சேளும்பிராமணரே ஆதியிலேவீரசாம்புவனென்பவர் ஒருஸ்ரீயோடேசேர்ந்து அவர்களால்உற்பவித்த ஆண்ஜாதி பெண்ஜாதி இரண்டொழியவேறில்லை ஆகையால் நாமிருவரும் பறைச்சேரிக்குப்போய் விவாகஞ்செய்துக்கொண்டிருக்கலாம்வாரும் பேதமில்லைபிராமணரே.

பகவமுனி-விருத்தம்.

ஆதரவாகச்சொன்னாய் அவனியிலெடுக்காவார்த்தை
ஏதுக்குசொல்லவாறாய் இகழ்ச்சியாபெண்ணேயிப்போ
வேதியரறிந்துசேதி விபரமாய்க்கேட்டாலென்னை
சாதியில்சேரொட்டாமல் தெரித்தியேயடிப்பாரோடி.

வசனம்.

ஆதரவாளனுக்கு சொல்லவந்த ஆதியே இந்தசேதிஎங்கள் பிராமணாள்கேட்டால் ஜாதியிலென்னை சேர்க்கமாட்டார்களே என்னைபரியாசஞ்செய்யாதே ஆதி.

ஆதி-விருத்தம்.

தாசிக்குமைந்தனாகி சக்கிலிப்பெண்ணுமென்ற
மாசில்லாவருந்ததிக்கு வசிஷ்டனுமாலையிட்டு
ஆதிகூடந்தணர்க்கும் அரசர்க்குங்குருவுமாகி
எசிலாயிருக்கின்றாரே இதுவுமேஞாயந்தானே

வசனம்.

பாருங்கள்பிராமணரே தேவதாசி மைந்தனுகிய வசிஷ்டர் அருந்ததி யென்னும் சக்கிலிப்பெண்ணை விவாகஞ்செய்துக் கொண்டு வேதவேதியருக்கும் சூரியவம்சத்து ராஜர்களுக்கும் குருவாகயிருக்கின்றாரே மேலும் அருந்ததி எங்கள் ஜாதியல்லவா இதுவுங்களுக்கு சிரேஷ்டமாயிருக்க தான் என் ஆகாது பிரமணரே.



ஆதி-தரு-பட்டியதாளம்.

பல்லவி.

ஜாதிஏதையா — ஆதிலொரு
சைவமேதையா

அநுபல்லவி.

ஆதியினில் விரதாட்புவ — னென்போதும்
ஆண்பாகமேவயொரு — பெண்ணையணைந்து
மேதினியில் ஆணும் — பெண்ணுமான்று
விளங்கினசாதியே — வேறுபேதமில்லை (ஜாதியே)



சரணங்கள்.

பேதமேதுயிந்த — பிரபஞ்சமதனிலே
பெண்ணென்றும்ஆணென்றும் — பிறந்ததேயந்த
ஜாதியிரண்டே — வேறில்லையிந்த
தாரணியில்வேறு — பேதகமில்லை (ஜாதியே)

செம்புப்பாறும்மோரும் — தயிருங்குடித்து
நீருங்கட்டிப்பூசிக் கோமியங்குடித்து
கைபிலைவிபெருங் — காயத்தைத்தின்பவர்
காரியமிதுகாண் — வீரியம்பேசுதீர் (ஜாதியே)

ஆண்ணுமிடமாய் — இருவண்ணமலையில்
உண்ணுமலையம்மன் — தானிருக்க
விண்ணாம்பேசுதீர் — வண்ணாப்பெண்ணை
பெண்ணாளில்லையோ — பிராமணரே (ஜாதியே)

மச்சாவதாரஞ்செய் — மாயக்கிருஷ்ணன்துதுக்
கச்சிமையெச்சியே — உச்சிதமாய்
வைச்சிருக்கலையோ — அச்சமில்லாமலே
கிச்சயமிதுகாண் — பிரமணரே (ஜாதியே)

அக்கிமபுதாய் — குருவாகியவசிஷ்டர்
சக்கிலிப்பெண்ணை — மருந்ததியை
மிக்கமணஞ்செய்து — ஒக்கயிருந்தாரே
மிக்கென்னபிதிலே — பிராமணரே (ஜாதியே)

ஆதி-தரு-கொண்டிச்சிந்து.

தவஞ்செய்யும் ரிஷிகளுமே பிறந்த
ஜாதியைசொல்கிறேன் ஆதியுடன்
ஜெபத்தினிலே மிகுத்த ரிஷிகள்
சேதிபேசொல்கிறேன் நீதியுடன்
திசைமுகன் ஊர்வசியை சேர்ந்துமே
செல்வனு யுதித்தவொரு பெருந்தவசி
வசிஷ்டனும் அருந்ததியை மணஞ்செய்து
மகனுசான்றவிள்ளை ஜெகந்தனிலே
சாத்மீக ரிஷிபிறந்து புக்கனார்
சேரியில் புலச்சியை சேர்ந்தனைந்து

பாத்திரமாய் பிறந்த-பராசர்
பகுபாகபெற்ற மச்சகந்தி
வயற்றினிலேபிறந்த வியாசர்
வகுத்தனர் சாதிபேதம் மகுத்துவமே
நயத்துடனுமக்குரைப்பேன்-வெகுவித
நாணயம்பேசுகிறீர்-வீணாகவே
எங்கள்ஜாதியில் பிறந்து-யிவர்களெல்லாம்
எழில்பெற தவஞ்செய்து-அழிவில்லாமல்
உங்களுக்குகுருவானார் ஆகையாலே
ஓதுகிறேன்யேது-ஜாதிபேதம்
(தனத்தோம் தனதனனா)

ஆதி-விருத்தம்.

இப்படிரிஷிகளெல்லாம் என்குலத்தினில்பிறந்து
செப்பமாய்தவங்கள்செய்து சிவனிடமாதரவுண்டு
கோப்பெனவுங்களுக்கு குருவாகத்தோன்றிருக்க
செப்புறேன்பேதமில்லை சேரிக்குப்போவோம்வாரீர்

வசனம்.

கேளும்பிராமணரே சேற்றிலேபிறந்த செங்கழுநீர் புஷ்பம்போல பிர்மா கூத்திவயற்றில்பிறந்தவர் வதிஷ்டர் அந்த வதிஷ்டருக்கு சண்டாளச்சி வயற்றில்பிறந்தசாத்மீகர் அந்த சாத்மீகருக்கு புக்கஞர் தொன்ன மறவர்விட்டத்தில் பிறந்தபராசர் பராசருக்குபிறந்தமச்சகந்தி மச்சகந்திவயற்றில்பிறந்தவேதவியாசர் சருவூர்கரும்பறைச்சி வயற்றில்பிறந்தார் இப்படிக்கெல்லாம் எங்கள்குலத்தில் பிறந்தவர்கள் தவஞ்செய்து உங்களுக்கு குருவானார்கள் என் வீணாக யோசனைபண்ணுகிறீர் பறைச்சேரிக்கு வாரும் பிராமணரே.

பகவமுனி-விருத்தம்.

கெஞ்சியே கேட்டாலுன்னைக் காசிக்குப்போறேனென்று
கொஞ்சத்தில்வழிவிடாமல் கூடவேவாறேனென்றாய்
வஞ்சியேவழியிலுன்னை மறையவர் கண்டாராகில்
சஞ்சலப்படுவதாகசே தடசொன்னசெய்வேன்



வசனம்.

கேளும்பெண்ணே ஆதி பலவிதத்திலும் காசிக்குப்போக விலவுகொடுக்காமல் கூடவேவருவேனென்றாயே வழியிலேபிராமணாள்கண்டாராகில் வழிவிட்டுவிலகிப்போவாரே அப்போது உன்னுடன்கூட எப்படிவருவேன் பெண்ணே.



ஆதி-தரு-ஆதிதாளம்.

பல்லவி.

கொஞ்சத்திலுனைவிடுவேனோ-காசிக்குநானுங்
கூடவராமல்போவேனோ

அநுபல்லவி.

அஞ்சாமலேகற்    [illegible]
அந்தணனுமென்று    [illegible]சலபோவேனாயே
(கொஞ்சத்திலுனை)

படிபிடித்திழுத்துப்போய்    வேம்பண்தோட்டிக்குநேராய்
கடுகவுந்தனைத்தாவி    கட்டிடச்சொல்வேனபாரய்
(கொஞ்சத்திலுனை)

தாலிகான் கட்டச்சொல்லி சகலபேருமறிய
கோலப்பறைச்சேரிக்கு கொண்டுபோவேன்தெரிய

(கொஞ்சத்தினே)

பறைச்சேரிக்கழைத்துப்போய் பறையர்களுடனுன்னை
சரிசமானஞ்செய்து தலிகட்டுவேன்பின்னை

(கொஞ்சத்தினே)

காசிக்கழைத்துப்போக கடுகெனபோமென்னை
மோசம்வருமேகானே மூட்டுவேதியசொன்னேன்

(கொஞ்சத்தினே)

பகவமுனி-தரு-அடதாளம்

என்ன தடைசொன்னாலுங்—காசிக்குக்கூட
எருதேறினென்றுமே
பன்னுமறைவேதியர் பாட்டையில்வருவார்கள்
என்னுடன் நீவந்தால் இடைஞ்சிபபோவார்களே
இதற்கென்னசெய்வேனடி

சரணங்கள்

ஆதி-தரு

இடைஞ்சிப்போவாரென்றிருய—பாட்டையில்நம்மை
யாரறிவார்தன்னன்றாய்
உடந்தையாய்காப்பேசி ஒருமித்திருவர்வந்தால்
நடந்தனில்பார்ப்போர்கள் சந்தோஷப்படுவார்கள்

(இடைஞ்சிபோவா)

நான்போகும்மார்க்கமடி—வெகுதூரம்
நடந்துவருவாயோடி
மான்விழியாளேயுந்தன் மனுஷருடன்சேரும்
நான்போறேன்காசிக்கு நடக்கமாட்டாய்தூரம்

(நான்போ)

ஆதிசொல்-தரு

தூரமெவ்வளவெனும்—அஞ்சாமல்நான்
துருசாய்நடப்பேனானும்



காரளிகுழலார்க்கு கணவருடன்நடந்தால்
கால்கைகள்நோகுமோ களிப்பாருமேதொடர்ந்தால்

(தூரமெவ்வள)

பகவமுனிசொல் தரு

காசிவழிதூரம்—காட்டுவழி
காடுபுலிகள்சீறும்
மோசம்வந்துசேரும் முன்னுகநான்சொன்னேன்
விசிநடக்கவேனும் முன்னுகபோகவேனும்

(காசிவழி)

ஆதிசொல்-தரு

விசிநடந்துவாரேன்—காசிக்கினான்
வேகமாகவும்வாரேன்
கூசாமலென்னுடன் கொஞ்சிக்குலாவியே
காசிவிஸ்வநாதரைக் காணலாம்மேவியே

(விசிநடந்து)

பகவமுனிசொல்-விருத்தம்

மொண்டிபேசவேண்டாம் நாமிருவருஞ்சேர்ந்துபோனல்
கண்டபேரேசுவார்கள் கலக்கமாயெவர்க்குந்தோனும்
குண்டகாபுரத்தில்நீயுங் கொஞ்சநேரமுமிருந்தால்
கண்டுதான்காசிவிஸ்வ கடவுளைபோற்றிவாரேன்

வசனம்

கேளும் பெண்ணே ஆதி என்னுடன் கூட வந்தால் கண்டபேரேசுவார்கள் மேலும் நான் காசிகங்காநதியில் ஸ்நானஞ்செய்து காசிவிஸ்வநாதரை சேவித்து வரவேனும் நீ வந்தால் சேஷபானபடியினலேபாவம்வந்துநேரும் யிந்தகுண்டகாபுரத்தில் கொஞ்சநேரமிருந்தால் காசி விஸ்வநாதரை சேவித்து வருகிறேன்பெண்ணே ஆதி

ஆதி-தரு-அடதாளம்.

குண்டகாபுரந்தனில் ஒண்டியாயிருமென்றீர்
பெண்டையழைத்துபோனல் பேச்சென்னசொல்லும்

பகவமுனி-தரு

பேச்சென்னவென்றுயே போரவழிதனிலே
காசிப்பிராமணர்வந்தால் கருவறுப்பாரே

ஆதி-தரு

கருவறுப்பார்களோ கண்டபோதிலென்னை
பிரியம்பெண்சாதிகூட போறாளென்பாரே

பகவமுனி-தரு

பிரியம்பெரும்பறைச்சி பேசிவரக்கூடாது
குறியாய்போடிவந்தன் குலமுங்காட்டாதே

ஆதி-தரு

குலங்களென்னசெய்யும் கொழுத்துநாமிருந்தாக்கால்
உலகெங்குந்தெரியாதோ உன்றனேதானே

பகவமுனி-தரு

விலகிவாடியென்றால் மேலவிழுந்தவாராய்
கலகஞ்செய்யாதேபிணி கடிதினிபோடி

ஆதி-தரு

காட்டுபசுவைக்கட்டி ஆட்டியாகஞ்செய்யும்
திருக்குதுக்கப்போறேன் பாட்டையேபோங்காண்

பகவமுனி-தரு

பூட்டைவழிதனிலே பார்ப்பார்கள்வருவார்கள்
தோட்டிமகளே நீ சும்மாநீபோடி

ஆதி-தரு

தோட்டிமருமகனை சோசியர்வந்தாலென்ன
காட்டமாயெனக்கு வழிவிட்டுவிலகு

பகவமுனி-தரு

வாட்டமாயெனக்கு வழிவிட்டுப்போகவென்று
நீட்டுறாய்பறைச்சாதி கெறுவிலுதானே



ஆதி-தரு

நீட்டுஞ்சாதம்பசுவின் செப்புப்பாறுமங்கூட்டி
ஊட்டிவளர்ந்தவர்கள் உங்கள்சாதிதானே

பகவமுனி-தரு

ஊட்டிவளர்ந்தாலென்ன உங்கள்சாதிபேச்சில்
தோட்டிமகளென்று சொல்லமாட்டாரோ

ஆதி-தரு

சொல்லமாட்டாரையா தோட்டிபெண்ணென்றினி
நல்லசாதியென்று நாடுவாரையா

பகவமுனி-தரு

நாடுங்காசிதன்னில் காணும்பேருங்கூடி
தேடிச்சிவனைக்கண்டு தெரிசிக்கவாமோ

ஆதி-தரு

தெரிசிக்கமக்குள்ளே சிவனைகண்டுகொள்வார்
விரித்துநீபேசாதே வேதியாபோபோ

பகவமுனி-தரு

வீதியில்பாப்பார்கள் வேதகோஷமிட்டு
ஆதியேவருவார்கள் அகலவேபோடி

ஆதி-தரு

அகலவழிதனிலே ஆர்தம்மைகண்டபேர்கள்
சகலபேரும்போற தடமிதுதானே

பகவமுனி-தரு

தடந்தனிலேசவர் விடையேறிவருகுவார்
இடைஞ்சிவாடி நம்பா ஏறிக்கவேபோறார்

ஆதி-தரு

எரிக்கும்சிவனேயும் எருதுமேனதல்லவோ
பறையன்பெருந்தேவூறி பாமனுர்வருவார்

பகவமுனி-தரு

பாமனுரிய பலவகைசாதியே
தெரிவையிடையப்போ நீண்டாதென்பாரே

ஆதி-தரு

நீண்டாயாகத்திலே ஆண்டபசுவின்கரி
ஏண்டாமறைத்தாயென் றிடையடாவென்றார்



பகவமுனிக்கும்-ஆதிக்கும்-தர்க்கம்

ஆதி-விருத்தம்.

மதுரைப்பட்டணத்தைவிட்டு வந்தோமனேகதூரம்
கதிதருங்காசிகங்கைகலந்திடகைநாம்கோர்த்து
சதிபதியிருவாக ஸ்நானமேசெய்தோமானால்
அதிபலன்நமக்குண்டாகும் அநுஷ்டமுந்தொலைந்துபோகும்



வசனம்

கேளும் பிராமணரே மதுரைப்பட்டணத்தைவிட்டு வெகு தூரம்வந்துவிட்டோம் காசிகங்காநதியில் நாமிருவருங்கைகோர்த்துஸ்நானஞ்செய்தால் நம்மைப்பிடித்த அஞ்ஞானந்தொலைந்து போகும் ஆகையால் நாமிருவரும் ஸ்நானஞ்செய்யலாம் வாரும் பிராமணரே

தரு-அடதாளம்.

பகவமுனிசொல்-தரு

தேசத்தோர்புகழ்கங்கை தீர்த்தமாடிவோமென்றாய்
மோசம்புலைச்சிதொட்டால் முழுநலாகாதே

ஆதி-தரு

முழுநலாகாதென்று முனியேயுரைத்திட்டாலும்
பழுதொன்றுமாகாது பாருங்காண்சொன்னேன்

பகவமுனிசொல்-தரு

ஆதிபரமசிவன் அவரவர்க்கேற்றபடி
சாதிபேதம்வைத்தாரே சரியாபோபோடி.

ஆதி-தரு

சாதியென்பொழிய வேதில்லைநாரணியில்
பேதமேதாயிதில் பிழையென்றுமில்லை

பகவமுனிசொல்-தரு

தீண்டாதேயென்றேரே தெரியாதோதேசத்தில்
வேண்டாமென்றிட்டீ வரவேண்டாம்போடி.

ஆதி-தரு

தீண்டாதேயென்றுசேதி தெரியாதோவந்தனுக்கு
ஆண்டவன்சொன்னது அன்றோகேள்முனியே

ஆதி-விருத்தம்

தீண்டாதவாறுசொல்லேன் தேவர்கள்யாகஞ்செய்ய
வேண்டியபசுவுநப்பை விடிவித்துயதனில்கொஞ்சம்
தீண்டியேயெடுத்தாவீர சாம்புவன்மறைத்ததாலே
ஆண்டவனதையறிந்து அலப்போதீண்டாதென்றார்

வசனம்.

கேளும்பிராமணரே முன்னாலே தேவர்களெல்லாங்கூடியாகஞ்செய்கிறதற்கு காரம்பசுவைக்கொண்டு அநுசகம்பத்திலே கட்டி முப்பத்திரண்டு உருவுமெடுத்து யாகத்தில்போட்டு பலபலமந்திரஞ்சொல்லி அதில்போடுகிறபோது அதில்கொஞ்சம்உருவுமெடுத்து வீரசாம்புவன் மறைத்தபடியினாலே உருவுகுறைந்தது ஆண்டவன் வீரசாம்புவனைக்கேழ்க்க வீரசாம்புவன் மறைத்துவைத்தது அறிந்து அடாமறையா யென்றவர் அப்பாலே போடாவென்றார் அதுதான்குற்றம்பிராமணரே.

பகவமுனி-விருத்தம்

இடையவேவைத்தாரென்றாய் ஈசனார்கங்கைதன்னில்
தொடுவதுமுறைமையல்லா தோஷமேவந்துசேரும்
அடைவுடனுகயிந்த ஆலின்கீழிருந்தாயானால்
படபடென்றோடிமூழ்கி பாமனைத்துநித்துவாரேன்

வசனம்.

கேளும்பெண்ணே ஆதி அப்போது ஈசர் உம்மை யிடையவைத்தாரென்று சொன்னபடியினாலே நீ கங்காநதியிலும் ஸ்நானஞ்செய்யக்கூடாது கோவிலுக்குள்ளவும் வரக்கூடாது ஆகையால் காசிதென்னண்டை அக்கிரகத்துதெருவில் ஆலமரமிருக்கிறது அந்தநிழலில் சற்றுநேரமிருந்தாயானால் நான் காசி விஸ்வநாதரை சேவித்து நிமைக்குள்வந்து உன்னை இட்டுக்கொண்டு போகிறேன் பெண்ணே

ஆதி-விருத்தம்.

எப்படிபோவென் றன்னை யனுப்புவேன் வேள்விதன்னில்
கொப்பெனகூடியெந்தன் குலமதைகேட்டுபின்பு
தப்பிதமென்றுமென்னை தள்ளிவிட்டவரைநானும்
எப்படிநம்புவேனுன் யினிவாரேனென்றசொல்லை

வசனம்

கேளும்பிராமணரே அப்போது வேள்விசாலையின்கண்மேல் விழுந்து கூடி மருவி பிற்பாடு என்குலத்தைக்கேட்டு என்னை ஆகாதென்றுசொல்லி யிவ்வளவுதூரம்வந்தவர் பின்னாலேவந்த



வலையிந்தஅக்கிராரத்து ஆலின்கீழிருப்பான்வருகிறேனென்ற சொல்லை யெப்படிநம்புவேன் பிராமணரே

பகவமுனி-விருத்தம்

ஐயமேன்பூமியிந்த ஆகாசமறியத்தானே
கைபோட்டுதாரேன்காசி பிராமணன்மேதருவில்லீர்நானும்
பையவேகாசிவிஸ்வ பாமனைத்தொழுதுவாரேன்
தையலேயிதற்குமின்றி சத்தியம்வேணுமோதான்

வசனம்

வாராய்பெண்ணே ஆதி இந்தகாசி தென்னண்டை தெரு அக்கிராரத்தில் ஆலவிருக்ஷத்தின் கீழ்க்கொருத்திண்ணையின்மேல் சற்றுநேரமிரும் நான்போய் காசிவிஸ்வநாதரைசேவித்து வருகிறேன் இந்தபூமிதேவி ஆகாசவாணியறியச் சொல்கிறேன் யெனக்குச்சிலவுகெடும்பெண்ணே.

ஆதி-விருத்தம்

அடைவுடனேகபூமி ஆகாயமறியத்தானே
கடுகெனவாரேனென்று கைபோட்டுபோறதாலே
திடமுடன்வெவ்வேறென்னாம் செய்யாமல்நீருமிப்போ.
தடங்கதும்வேண்டாம்சத்திய படிக்கிறீருநீவாரும்.

வசனம்

வாரும்பிராமணரே இந்தஅக்கிராரத்து திண்ணையின்மேலிருக்கிறேன் நீர் சத்தியந்தப்பாமல் சீக்கிரமாய்வந்து என்னைக் கொண்டுபோம்பிராமணரே

பகவமுனி-ஆதியைவிட்டுப்போகிற-தரு-மட்டியம்

இதுநல்ல சமையமென்று
ஏகினானந்த பிராமணனும்
சதி செய்து ஆதியாளை
தானடந்தான் பிராமணரும்
ஓட்டம்பெருநடையாய்
ஓடிவந்தான் பிராமணனும்
சாட்டியதாய் கைவீசி
தானடந்தான் பிராமணனும்

சனியன் தொலைந்ததென்று
தானடக்கதன் பிராமணனும்
இனிமேல் பயமில்லையென்று
ஏகினார் பகவமுனி
[illegible]
பின்னைதிரும்பிப் பார்த்துக்கொண்டு
என்னசெய்யப் போகிறானும்
மீனிதிரும்பி வந்தானானும்
என்றுசொல்லி காசிவிசு
நாதர்சன்னிதியில் நுழைந்து
கீழ்க்கோபுரத் தானுழைந்து
மேல்கோபுரந் தான்கடந்து
தாழ்வில்லா அக்கிராரம்
தானுழைந்தான் வேதியனும்
அக்கிராரந்தனில் நுழைந்து
ஐயமார் தெருவிலே
பக்குவமாய் திண்ணையில்
படுத்துக்கொண்டு தானிருந்தான்
அந்தவீட்டு ஐயர்தானும்
அதிதிருவில்லைந்துநின்று
விசுவகர்த்தனுயர் தானும்
வெளியேயிறங்கிவந்து
ஆரையில்லா திண்ணையின்மேல்
ஆரையாவென்று கேட்டார்

பொது-விருத்தம்

அக்கிரமாகத்தானே ஆதியைவிட்டுஐயர்
பக்குவமாகத்தானே பரவசப்சொல்லிவிட்டு
திக்கெல்லோமக்காசி தெருவெல்லாஞ்சுத்திக்கொண்டு
அக்கிராரம்விசுவநாத ஐயர்வீட்டில் நுழைந்தாரே

வசனம்

அகோசித்தப்படி யென்றால் பகவமுனி ஆதிக்கு சத்தியஞ்செய்துக்கொடுத்து காசிக்குத்தென்னண்டை அக்கிராரம் ஆலவிருட்சத்தின் அருகேஐயர்தெருத்திண்ணையின்மேல்படுத்துவாசமி



ருக்கச்சொல்லி பகவமுனி மீனிதப்பித்துக்கொண்டேனென்று காசிவிசுவநாதர் சன்னிதி கீழ்கோபுரத்தில் நுழைந்துமேல்கோபுரத்திற்காயப்போய் விசுவநாதஐயர் திண்ணையின்மேல் உட்கார்ந்து இளைப்பாற்றிக்கொண்டிருந்தார்



பொது-விருத்தம்.

விசுவநாதையர்தானும் வீதியில்வந்துநின்று
தேசிகாமோகிக்கத் திண்ணைமேல்படுத்திருக்கும்
வசிகராயமாமித்த மனையவன்பிள்ளையாரென்று
உகிதமாய்க்கேக்க ஆற்றுன் உனமாதிருக்கிறவதாக

வசனம்

ஆதிகாணுக்கு தருத்திண்ணையின்மேல் ஒண்டியாய்படுத்திருக்கிறர்மேலும்பிராமணப்பிள்ளையைப்போல்தோற்றப்படுகிறதுகிறார்

னும் ஐயப்பிராமணா வென்று அந்தவீட்டு விஸ்வநாதஐயர் கேழ்க்கிறதுக்காண்க

விசுவநாதஐயர்-விருத்தம்

சிறுவயனதயரேயெந்த தேசமோநீர்தான்சாமி
தெருத்திண்ணைமீதில்வந்து திரோமுகமேவர்த்துகானில்
ஒருவராயாருமில்லா துட்கார்ந்துயிருப்பதென்று
தெரியவேயுரைப்பீரையா சீக்கிரமாகத்தானே

வசனம்.

ஆர்காணும்பிராமணப்பிள்ளையாயிருக்கிறப் எந்தவூர்ஒண்டியாயிந்த தெருத்திண்ணையின்மேல் உட்கார்ந்துயிருப்பதென்று தெரியச்சொல் ஐயப்பிராமணரே.

பகவமுனி-விருத்தம்

தென்தேசத்தனிலேழுந்து சிவஸ்தலமெங்குஞ்சுற்றி
வந்துறன்காசியாத்திரை மனுஷாளு மில்லையெனக்கு
இந்தத்திண்ணைமேலே இராப்பாறிப்போவேனென்று
குந்தினேன்பிதுதான்சேதி குறையொன்றுமில்லைதானே

வசனம்

நமஸ்காரமையா விஸ்வநாதஐயங்காரே யெங்களது தென்தேசம் சிவஸ்தலமெல்லாம் சுற்றி காசியாத்திரைவந்தேன் எனக்குமனுஷாள்யாருமில்லை இதவெய்யலுக்கு இந்ததிண்ணையின்மேல் உட்கார்ந்துஇருக்கிறேன் பிராமணரே

விசுவநாதஐயர்-விருத்தம்

ஆருமேயில்லையென்றாய் ஆதலால்யெந்தன்ஆத்தில்
வாருமேயெந்தனுக்கு மைந்தனுமில்லாதாலே
தாரமுஞ்செய்துவைப்பேன் சன்னதிபூசைவேலை
பாருமேயிருந்துயெந்தன் பங்கெலாமுமதுதானே

வசனம்

வாரும்பிராமணப்பிள்ளாய்உனக்கு ஆருமேயில்லையென்று சொல்கிறாய் எனக்கோபிள்ளையில்லை விசுவநாதசுவாமிசன்னிபூசைசெய்யப்பட்டவர்கள் ஆயிரத்திஐந்நூறு தலைசட்டுபங்குகாரில்காண்பத்துபங்குகாரனம்மிடத்தில்பிள்ளையாயிருந்துசன்ன



திபூசைசெய்துக்கொண்டிருந்தால் நம்முடைய ஆஸ்தியெல்லாம் உமதே பிராமணரே மேலும் உமக்குவிவாகமும் நடத்திவைக்கிறேன் ஐயரே,

பகவமுனி-விருத்தம்.

அப்படியானாலுங்கள் ஆத்தினிலநானிருந்து
சொற்படிகேட்டிருந்து சன்னதிமுறைதப்பாமல்
தற்பரன்பூசைதன்னை தப்பாமல்நடத்திவாரேன்
நற்படிவிவாகஞ்செய்து நடத்திவைப்பீரையா

வசனம்

வாரும் விஸ்வநாதஐயரே நமஸ்காரம் யெனக்கோ ஆருமில்லை தேவரீர் தெய்வம்போல்வந்து காட்சிகொடுத்தாப்போல் தங்களிஷ்டப்பிரகாரம் உங்களுக்குபிள்ளையாயிருந்து தங்கள்பணிவிடைசெய்துக்கொண்டு சன்னதிபூசை நடத்திவருகிறேன் விவாகம் நடத்திவைக்கவேணும் விஸ்வநாதஐயரே

விஸ்வநாதஐயர்-வசனம்

அப்படியே நடத்திவைக்கிறேன் நமது ஆத்திலேதானேயிரும்

பகவமுனி-வசனம்

அப்படியேயிருக்கிறேன் சுவாமி

பொது-விருத்தம்.

இத்திடத்தினிலேநீயும் இருநான்போய் வாரேனென்று
சத்தியஞ்செய்துபோயி தாமிதஞ்செய்வதேனோ
மெத்தவும்பொழுதுபோச்சே வேதியன்வரவுங்காணோன்
எத்தனைநேரமட்டா யிருப்பேனொண்டியாக

வசனம்

அரகரா விஸ்வநாதா காசிவிஸ்வநாதர் சன்னதிக்குப்போய் வாரேனென்று சத்தியஞ்செய்து கை போட்டுப் போனபிராமணன் யின்னம்வரக்காணோன் யெத்தனைநேரமாகயிந்ததெருத்திண்ணையின்மேல் ஒண்டியா யிருப்பேன் காசி விஸ்வநாதா அரஹரா அரஹரா



ஆதியம்மா-தரு-அடதாளம்

பல்லவி.

நம்பிமோசம்போனேனே—இனி
நானென்றுசெய்வேனே

அநுபல்லவி

அப்புனிஆகாயம் அரியப்போய்சொல்லவில்லே
ஆகத்தியம்வாரேனென்று அந்தணன்சொன்னசொல்லே
(நம்பிமோ)

சரணங்கள்.

சத்தியமாய்சொல்கிறே னரியாதவளுமாச்சே
சதிசெய்துபோகேனென்று தயவாகசொன்னபேச்சே
(நம்பிமோ)

காசிவிஸ்வநாதனைக் கண்டுமோகானின்று
கடுகவருவேனென்று கைபோட்டுத்தந்தானன்று
(நம்பிமோ)



இலவங்காத்தகிளிபோல் என்னெதிரினில்காணு
இன்பமாய்வைத்திருந்து ஏங்கிதவித்தாவீணு
(நம்பியோ)

ஆதி-விருத்தம்.

எண்ணாறகற்றுகன்றாய் எழுத்தறவாசித்தாலும்
பெண்புத்திபுறத்திலென்று பெரியோர்கள்சொல்வாரந்த
வண்ணமதாகஅந்த மறையவன்தன்னைவிட்டு
என்னைவிட்டேங்குகின்றேன் இனியென்றுசெய்குவேனே

வசனம்

அரஹரா காசிவிஸ்வநாதா மதுரைப் பட்டணத்திலிருந்து காசிவரைக்கும் இடைவிடாமல் தொடர்ந்துவந்தும் எண்ணாறகற்றுஎழுத்தறவாசித்தாலும் பெண்புத்தி புறத்திலென்று சொல்வார்களே அவ்வாறுபோலே கொஞ்சத்திலே பெண்புத்தி பயங்கிபகவமுனிவகைசேரவிட்டு நானொண்டியாய் பாப்பான்வீட்டுத் தெருத்திண்ணையின்மேல் யென்னைவிட்டுயிருக்கும்படி விதித்தாய்கர்த்தனே.

ஆதி-தரு-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயோநானென்னசெய்வேன் அனியாயமாகயிங்கே
ஐயரும்விட்டுப்போன ஆகாத்தியமென்றுசொல்வேன்
(ஐயோநா)

சரணங்கள்

மெய்யென்றெண்ணியேநானும்வேதியன்சொன்னபேச்சை
வீணாகநம்பிநானும் வீதியில்தவிக்கலாச்சே
(ஐயோநா)

ஆசைகொண்டுமேயானும் ஐயர்பின்னாகவந்து
மோசம்வந்துநேர்ந்ததே முழித்திடவேநொந்து
(ஐயோநா)

காசிவிசுவநாதனைக் கண்டுபணிந்தயானுங்
கடுகவருவேனென்று கைப்போட்டுப்போனாரே
(ஐயோநா)

ஆதி-விருத்தம்.

மாசிலாமணியேகையில் மான்மழுவேந்துகின்ற
காசிவிஸ்வேசநாதா கர்த்தனேபாப்பானென்னை
மோசமேசெய்துபோனர் மெல்லியாட்காருமில்லை
ஏசிலாமணியேசுவாமி யென்றனைக்காத்திடீரே

வசனம்.

ஆஹா காசிவிஸ்வநாதா கையில் மான்மழுதரித்த கடவுளே நம்பிவந்தபகவமுனி மோசஞ்செய்து நடுத்தெருவில்விட்டுப் போனார் நானென்னசெய்வேன் யென்னைக்காக்கவேணும்.

ஆதி-தரு-அடதாளம்

கண்ணிகள்

இந்தவிதிப்பட்ட யெந்தனைவிதித்தாய் காசி
விஸ்வநாதா
ஏழைபாப்பான்வீட்டு பிறப்பில் தவிக்கலானேன்
விஸ்வநாதா
வந்தவிடத்திலென்னை மறையோன்மோசஞ்செய்தான் கொஞ்சம்
விஸ்வநாதா
மயங்கியென்புத்தியும் வகைமோசப்வந்ததே
விஸ்வநாதா
ஐயோயிக்காசியில் ஆதரவாரெனக்கு தெருவில்
விஸ்வநாதா
அலையவிட்டெந்தனை அந்தணர்போனாரே
விஸ்வநாதா
மெய்யாகாசிவிஸ்வ நாதரைசேவித்து பாப்பான்
விஸ்வநாதா
விரைவில்வாரேனென்று விட்டுபோனாரையோ
விஸ்வநாதா

பொது-விருத்தம்.

கோவெனவின் வாழம்பெண் குரல்கேட்டந்த
குடியில்வாழ் பிராமணன்றுரி யோடிவந்து
தாவித்தெருதிண்ணையின்மேல் ஒருவரில்லா



தனியாக குந்தியிருக்க சங்கைவிட்டு
ஓவெனவே வாய்திறந்து அழுவதென்ன
வுனதென்ன பேரென்ன உண்மையிப்போ
மேவியிங்கே யழைத்துவந்து விட்டதாரோ
மெய்யாசொல் மனதில்லான்றும் வையாதென்றான்

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக பகவமுனி ஆதியை காசித்தெருவுத்தெரு வண்டை சோமசுந்தர குருக்கள் தெருத்திண்ணையின்மேல் உட்காரவைத்து விட்டு பகவமுனிவடவண்டை விஸ்வநாதஐயர் அக்கிராரம் முன்னூற்றைங்காதவழி யிருக்கிறபடியால் விவரத்தாரம் தேடிகம்மை வாரமாட்டானென்று விஸ்வநாத ஐயர்வீட்டில் கின்றுவிட்டார் ஆதியாகப்பட்டவள் பகவமுனிவரவில்லையென்று அழுதுக்கொண்டிருக்கும்போது அப்போது சோமசுந்தரகுருக்கள்பத்தினி ஆதிலக்ஷுமியம்மாள்வந்து ஆரடியம்மா நீ எந்தவூர் நீ தனித்துவந்து இங்கே அழவேண்டியகாரணமென்னவென்றுகேழ்க்கிற விதங்காண்க

சோமசுந்திரகுருக்கள்மனைவி ஆதிலக்ஷுமியம்மாள்-விருத்தம்

ஆரடியம்மாயெந்த ஊர்த்தனிக்கழுதாக
சீருடன்கட்டிருக்கும் தெருத்திண்ணைமீதில்வந்து
விரிட்டுஅழுகின்றாயே மெல்லியேயிருக்கும்
உன்பேர்தானென்ன உரைத்திடாய்உண்மையாக

வசனம்

ஆரடியம்மா எங்களாத்திற்கு நாலுபேர் சேமமுள்ள வந்து உட்காரும்படி அழகாகக்கட்டிவைத்திருக்கும் தெருத்திண்ணையின்மீதில் ஒருத்தியாய் உட்கார்ந்து அழுதுக்கொண்டு விரிட்டு அழுகிறாயே நீ எங்கிருந்து வந்தாய்சொல்லுயம்பெண்ணே

ஆதி-விருத்தம்

எந்தஊர்பாப்பானுந்தான் இட்டுமேவந்துநன்றாய்
இந்ததோர்திண்ணைமீதில் இருகான்சன்னதிக்குச்சென்று
அந்தகாசிவிஸ்வ நாதனைதெரிசித்திங்கே
வந்துனையழைத்துப்போவேன் மெல்லியிங்கிருவென்றாரே

வசனம்

கேளுமம்மா தாயே என்னை ஒருபிராமணன் யிட்டுக்கொண்டுவந்து யிந்ததிருத்தின்னைமீதில் உட்காரவைத்து காசிவிஸ்வநாதர் சன்னதிக்குப்போய் சுவாமியைத்தரிசித்து வருகிறேனென்றுபோன பிராமணன் இன்னம் வரக்காணேன் நானென்ன செய்வேனம்மா தாயே



ஆதிலெக்ஷுமியம்மாள் - விருத்தம்

தாயுந்தந்தையுஞ்சேர்ந்து தாம்பூலமர்த்தெல்லோர்க்கும்
காயமாவுனக்குத்தாலி கட்டினகணவன் தானோ
நீயுமேவிரகங்கொண்டு தேசமாய்வந்தானோதான்
வாயினால்பொய்சொல்லாமல் யாவுந்தான் சொல்வாயம்மா



வசனம்

கேளடியம்மா உன்தாய் தந்தையர் உறவின்முறையாருக்கும் தாம்பூலமர்த்தி உனக்கு தாலிகட்டின கணவனோ அல்லது உன்மேல்மோகித்து யிட்டுக்கொண்டுவந்து இங்கேவிட்டுவிட்டுபோனவன் கள்ளபுருஷனோ சொந்தபுருஷனோ சொல்லும் பெண்ணே.

ஆதி - தரு - ஆதிதாளம்

என்னென்றுசொல்வேனிப்போ எந்தன்தலைவிதியை
ஏதென்றுசொல்லுவேனான் யினிதாகவே
தென்பாண்டியதேசத்தில் சேர்ந்தகரூர் தன்னில்
சிராயந்தனர்க்குநான் பெண்பிறந்தேனே
தன்னந்தனியாக கூடப்பிறந்தோரில்லை
தான்தனியாகவே நான்பிறந்தேன்
அன்னைதந்தையரென்னை அன்புடனேவளர்த்து
ஆதியென்றேயெனக்குப் பேருமிட்டார்
சின்னஞ்சிறியவளென்னை தெளிவானபாப்பானுக்கு
சீராக்கலியாணஞ்செய்ய வைத்திருந்தார்
மன்னன்பாண்டியராஜன் மகிதலமெங்குமோங்க
மகிழ்வுயதாகயாகஞ் செய்யவேண்டி
பன்னுமறைவேதியன் பகவமுனியைராஜன்
பாங்காயழைத்துயவர் யாகஞ்செய்தார்
உன்னிதயாகமென்று பார்க்கப்பிராமணாளுகள்
ஊருங்கூடவென்தாதனும்வந்தேன்
தன்னையாகஞ்செய் பகவமுனி
நான்வருவழிதன்னைக் காத்திருந்து
கன்னியென்தனைக்கூடி காமவிரகந்தீர்ந்து
காசியைநோக்கியவர் தானடந்தார்
என்னைவிட்டுநீரும் எங்கேபோறீரென்று
இனிதாகநானுங்கூட காசிவந்தேன்
பின்றலையத்தாயிந்த பிராமணதெருவில்விட்டு
போய்பார்த்துசன்னிதியை வாரேனென்றார்
கன்னியேநான்போய வில்வாரா தவரைக்கண்டு

கடுகவேவாரேனென்று அவர்போனார்
சொன்னசொல்லைப்பதரெண்ணு தருக்காய்போய்வாவென்றேன்
சூரியன்மறைந்தும் அவர் வரக்காணேன்
இன்னம்வரவுங்காணேன் பின்னென்னுசொல்வேனம்மா
இனிமேல் அதினாலெனக்கு தீதானே
அன்னையேயெனக்கினி ஆருமேயதினாலில்லை
ஆதரிக்கவேணும் அம்மாநீயே

ஆதிலட்சுமம்மா-விருத்தம்

ஆதியே உன்னையிங்கு அழைத்துவைத்துவிட்டுப்போன
வேதியன்வராமற்போனால் வேறொருபாப்பானுக்கு
தீதறக்கொடுத்து உன்னை திருக்கலியாணஞ்செய்து
ஜாதியில்சேர்த்துக்கொள்வோம்சந்தேகப்படநீவேண்டாம்

வசனம்

வாரும்பெண்ணே ஆதி உன்னை அழைத்துக்கொண்டுவந்த பிராமணன் வந்து அழைத்துக்கொண்டு போனால் போகட்டும் இல்லாவிட்டால் நான் ஆதிவிருக்கப்பட்ட வேலையைசெய்துக் கொண்டிருந்தால் உன்னை ஒரு பிராமணனுக்குக்கொடுத்து கலியாணஞ்செய்துவைக்கிறோம் உனக்குத் தாயார் நீ இதுவென்று ஞானளிக்கொள் ஆதி

ஆதி-விருத்தம்

தாலிகட்டினவனல்லர் தனிவழிவிட்டுவந்த
வாலிபன்வந்தாலாச்சு வருகாமல்போனாலினி
மேலெனக்கொருவரில்லை வேறொருபாப்பானுக்கு
தாலிகட்டிவைத்தால் தாயாரும்நீதானம்மா

வசனம்

கேளும் ஆதிலட்சுமம்மா தாயே என்னை அழைத்துவந்த பிராமணன் தாலிகட்டினவனல்ல ஆதலால் அந்த பிராமணன் வந்து அழைத்துக்கொண்டுபோனால் போகிறேன் அப்படிவாரா விட்டால் வேறொருபிராமணனுக்குக் கொடுத்து விவாகஞ்செய் துவைத்தால் நீயேயென்னைப்பெற்றதாயாரம்மா ஆதிலட்சுமம்மா தாயே.



ஆதிலட்சுமம்மா-விருத்தம்

நல்லதுமகளே அந்த நாயகன்வேணுமென்றால்
எல்லைகளெங்குந்தேடி யிருப்பிடங்காணச்செய்கும்
இல்லையென்றுவருந்தானால் இசைந்தவனையுனக்கு
கல்யாணஞ்செய்துவைப்பேன் கன்னியேயஞ்சாதம்மா

வசனம்

கேளும்பெண்ணே ஆதி உன்னை அழைத்துக்கொண்டு வந்த பிராமணன் இக்காசியில் இருந்தால் எப்படியாகிலும் வந்து அழைத்துக்கொண்டுபோவான் அப்படி அவன் வராவிட்டால் வேறொருபிராமணனுக்கு கொடுத்து விவாகம் நடத்திவைக்கிறோம் நீ சம்சய ஆத்திலேதானிருமம்மா ஆதி

பொது-விருத்தம்

அப்படியாகுமென்று ஆதியம்மனமிசைந்து
ஒப்பியேபோனபின்பு ஒருநாள்கோலம்போக்கி
இப்படியிருக்கக்காசி யினில்வாழும்பிராமணர்கள்
கொப்பெனவிஸ்வநாதர் கோவிலிற்கும்புசேர்ந்தார்

வசனம்

அதேதெப்படியென்றால் மிக்கப்பிரகாசமாக காசிதென்னண்டை பிராமணர் அக்கிராரத்தில் சோமசுந்தரகுருக்கள் ஆத்தில் ஆதிஇரண்டுகாலமாக இருக்கும்போது காசிவிஸ்வநாதர் சன்னிதியில் பூசைசெய்யும் ஆயிரத்தெட்டுபிராமணர்கள் சன்னதிகளைக்கு வழக்குபார்க்க கும்புகூடிவருகிற விதங்காண்க

காசிபிராமணர்-வருகிற-தரு-அடதாளம்

பல்லவி

நம்பிராமணர்வந்தாரே—காசிகோவில்
நம்பிராமணர்வந்தாரே

சரணங்கள்

நம்பிராமணர்கள் குப்புராய்க்கூடியே
தெப்பாகவேதய ராமனைப்பாடியே (நம்பி)
கப்பிசோமன் அன்னையில் கசக்கிவைத்துக்கட்டி
செப்புகளெய்திவே சொய்குடுமிகட்டி (நம்பி)

பங்குபாகந்தீர்க்க பணமொத்தமாகசேர்க்க
தங்குமிகுவைப்பணம் சாஸ்திகணக்குப்பார்க்க ()
ஆயிரத்திலக்கட்டு அக்கிராரம்பிராமணுள்
நாயங்கள்பேசியே கன்றுகவராரர்கள் (நம்பி)

(பொது-விருத்தம்)

வந்திதோர்பார்ப்பார்கோவில் மண்டபத்தனிலிறங்கி
இந்தநேரத்தேரவில்லொக்கம்காவாண்டையிருந்தாலுந்தரும்
தந்திடவேணுமிப்போ சாஸ்திபத்தின்பணத்தை
வந்தவர்க்கெல்லாமீந்தால் வழக்கெனுமில்லைதானே

வசனம்

அதேசொன்னபடியேயென்றால் விசுவநாதர்சன்னிதியில் வரும்படி பணம் உச்சவத்திற்காக மீதிபணம் எவரிட்டத்திலிருக்கிறதோ அதையெல்லாம் ஆயிரத்தினுற்றுநாற்று அறுபது பங்குகாரருக்கு சோடுவன்செலவுதல்லாம்கணக்குபார்த்து அவரவருக்கு கோவில் ஸ்தானிகர்சேர்த்துவிட்டு இன்னம் சிலது ஞாயங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பகவமுனிசேர்ந்து யிருக்கிற விசுவநாதஐயர் சொல்கிறவிதம் எப்படியென்றால்

பகவமுனியிருக்கிறவிசுவநாதஐயர்-விருத்தம்

என்னகாண்பெருங்காரத்தில் இருக்கிறேனோர்பிள்ளைவந்து
வர்ண்ணமும்மதிகமாகும் வயதுமேபதினாறாக
பெண்ணுதானொன்றுவேண்டும் போகவுங்கங்காளேனும்
பெண்ணொன்றுதேடிவைத்தால் புண்ணியசகாயமாமே

வசனம்

கேளுங்காணும் சோமசுந்தரகுருக்களே நம்பிடத்தில் ஒருபிராமணப்பிள்ளை வந்திருக்கிறான் பதினாறுவயதுள்ள வாலிபன் அவன் அழகில் மன்மதனென்றுஞ் சொல்லலாம் கல்வியில் நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் அறுபத்துநான்கு கலைக்கியானமும் தொன்னூற்றாறுதத்துவமும் தெரிந்தவனாயிருக்கிறான் அவனுக்கு ஒரு பெண்தேடி விவாகங்கட்டிவைத்தால்புண்ணியமுண்டு உங்கள்போகடியில் எங்கேயாவது ஒரு பெண்அகப்படுமோ சொல்லும் சோமசுந்தரகுருக்களே இது மெத்த சகாயமாகுங்காணும் ஐயரே



ஆதியிருக்கும்-சோமசுந்தரகுருக்கள்-விருத்தம்

சகாயமும்மென்னகாணும் தன்கையில்பணமிருந்து
அகாமிதமதகபொன்னை ஆயிரந்தந்தால்பெண்ணை
தகாதயில்லாமலேதான் தருகிறேன்கொண்டுபோயி
விகாதமேசெய்யாமல்நீ விவாகமேசெய்துவையும்

வசனம்

கேளுங்காணும் விசுநாதஐயரே நம்பிடத்தில் ஒருபிராமணப்பெண் வந்திருக்கிறாள் சத்தியவாக்கில் சந்திரமதியென்றுஞ்சொல்லலாம் பொறுமையில் பூமிதேவியென்றுஞ்சொல்லலாம் அழகில் தமயந்தியென்றுஞ்சொல்லலாம் பதிவிரதையில் அருந்ததியென்றுஞ்சொல்லலாம் புத்தியில் சரஸ்வதியென்றுஞ்சொல்லலாம் அப்பேர்க்கொத்தப் பெண் நம்மிட ஆத்திலிருக்கிறாள் அவளுக்கு ஆயிரம்பொன் பரியந்தந்தால் அட்டியில்லாமல் தருகிறேன் சுகமாய்க்கொண்டுபோய் விவாகம்நடத்தும் விசுவநாதஐயரே

விசுவநாதஐயர்-விருத்தம்

அப்படியாலேங்கே அவ்வளவர் வந்திருக்கிறார்கள்
ஒப்பிநாயகச்சொல்லி மன்னவர்முகூர்த்தமாவைத்து
தப்பிதமில்லாமல்தான் தாம்பூலமாற்றிக்கொண்டு
கொப்பெனவிவாகஞ்செய்ய கொடுமையாய்பெண்ணைத்தாரேன்

வசனம்

வாருங்காணும் சோமசுந்தரஐயரே அந்தப்பெண் கொடுக்கிறதானால் கோவிலுக்குள்நாலு பத்துஜனம் குருக்கள்மார் அனேகம்வந்திருக்கிறார்கள் எல்லவருக்குஞ்சொல்லி தாம்பூலம் மாற்றிவிடும் பஞ்சாங்கப்பட்டரும் பக்கத்தில்வந்திருக்கிறார் முகூர்த்தநாள்பார்த்து சொல்லுமென்றுகேழ்க்க பஞ்சாங்கபட்டர் சொல்கிறவிதங்காணக.

பஞ்சாங்கபட்டர்-விருத்தம்

ஒன்றுநீசெய்வாய்பார்ப்போம் உற்றதுசொல்வேன்கேளிர்
கன்றதுசோமவாரம் நற்திரயோதசியகத்தில்
வென்றியாதின்தாரம் ஒன்பதிலுச்சமேட்டில்
இன்றதுதோஷமில்லை எழில்மணஞ்செய்யலாமே

வசனம்

கேளுங்காணும் விசுவநாதஐயரே வையாசிமீ ௳ சோமவாரம் திரயோதசி நாழிகை-௨௰ அனுஷநக்ஷத்திரம்-௰௫ சூரிதனுவிசம் சுபநாமயோகம்-௫௰ஐந்து – கவுலவாகரணம் – உதயாதி பகல் ௰௫ நாழிகைக்குமேல் தியாச்சியம் ராகுகாலம் ௦ லக்கினத்தில் சுக்கிரன்நிற்க-௪-மிடத்தில் குருநிற்க ௬-மிடத்தில்புதனிற்க இப்படி சுபகிரகங்கள் நிற்க பாபகிரகங்களாகிய இராகு கேது சனி செவ்வாய் இவர்கள் மூன்றாமிடத்தில்பாபகிரகங்கள் நிற்க இப்படிபகைநீச்சமில்லாமலுச்சத்தில்நிற்க எட்டாமிடம் சுத்தமாயிருக்க இச்சுபதினத்தில் நான் பார்த்திருக்கிறேன் சுபமாக விவாகம் நடத்தும் விசுவநாதஐயரே.

விசுவநாதஐயர்-வசனம்

வாருங்கள்குருக்கள்மார்களேஐயமார்களேபெரியோர்களேபஞ்சாங்கப்பட்டரே பந்துஜனங்களே பிராமணர்களே பஞ்சாங்கப்பட்டர் சொன்ன நாள்பிரகாரம் விசுவநாதசுவாமி சன்னிதிக்கெதிரே பதினாறுகால்மண்டபத்தில் பகவமுனிஐயருக்கும் ஆதியம்மாளுக்கும் முகூர்த்தம் நடக்கிறபடியால் ஷெ முகூர்த்தநாளுக்கு ஏழுமணிக்குள் பதினாறுகால் மண்டபத்தில் வந்துசேர வேண்டியது உறவின்முறையார் பந்துஜனங்களே

ஆதியம்மாளிடகலியாணத்திற்கு
பிராமணாள்வருகிற-தரு-அடதாளம்.

கண்ணிகள்

ஆதியாளிட கலியாணத்திற்கு
அல்லோரும்வாங்காணும்போய்வருவோம்
அப்பையப்பட்டரே சுப்பையப்பட்டரே
அல்லோரும்வாங்காணும் போய்வருவோம்
முப்பழஞ்சர்க்கரை நெய்புடன்புசிக்கலாம்
இப்பவேவாங்காணும் போய்வருவோம்
சாதியான வேதியரெல்லாம்
சட்டமாய்வாங்காணும் போய்வருவோம்
காதுசெவிடுகுருடு கால்மொண்டியாப்பாரே
காலையெழுந்துநீ போங்காணும்



என்னேரமானாலும் மூன்றுவேளைநான்போய்
இடம்பார்த்துக்கொள்ளவேணும்
பின்னாலேவந்தாக்காலும் பிரயோசனமில்லை
புறப்படுவாங்காணும்
அண்டாவில்செய்யும் அலகுபருப்புகள்
அளவிடப்போகாதுகாண்
பெண்டாட்டிபிள்ளைகள் குஞ்சிகுழந்தைகள்
புறப்படுவாங்காணும் போய்வருவோம்
அச்சமில்லாமலே பச்சரிசிசாதம்
அகப்படும்வாங்காணும் போய்வருவோம்
பக்ஷிணியாளுடன் மருமகளுங்கூட
வாச்சொல்லிவாங்காணும் போய்வருவோம்
கொச்சியமஞ்சளும் உச்சிதசந்தனம்
கூட்டிகொடுப்பார்காண் போய்வருவோம்
மெச்சியேபூசியே வேடிக்கையாகவே
வீதியிலேநடந்து போய்வருவோம்
அப்பளம்வடைதோசை அதிரசம்பாயாசம்
ஆருக்குண்டாகுங்காண் போய்வருவோம்
நிப்பவேசாப்பிட்டு எப்பமுங்கொள்ளலாம்
எழுந்துநடக்காண் போய்வருவோம்
வாழைப்பழமும் பலாப்பழமாம்பழம்
வாட்டமாய்ப்பசிக்குங்காண் போய்வருவோம்
ஜாழைப்பரிதேசிகள் எல்லோரும்வந்தாக்கால்
எடுத்துக்கொடுப்பார்காண் போய்வருவோம்
பார்ப்பாரதெருவினில் பெண்பிள்ளைகளெல்லாம்
பரிஜனம்வாங்காணும் போய்வருவோம்
ஆயிரக்கலைக்கட்டு அக்கிராரப்பார்ப்பார்கள்
அனைவரும்வாங்காணும் போய்வருவோம்
பாயாசமவில்பெறும் பாமாலன்றாறுபோல்
பசிப்போய்வாருங்காண் போய்வருவோம்
வாயினுற்சொல்ல வசமல்லபலகாரம்
வடைதோசைக்கொடுப்பார்கள் போய்வருவோம்
அந்தப்படியாளுங் கூத்தியாருங்கூட
அழைத்துவாருங்காணும் போய்வருவோம்

ஆத்தினிலேயேத்து வந்தோர்க்கு
அழைத்துவாருங்காணும் போய்வருவோம்
கூத்துகெல்லுஆத்தில் குத்துவைத்தவனைக்
கூட்டிவருங்காணும் போய்வருவோம்
என்றெனராமனுமும் முன்னாலேவான்போய்
இடம்பார்த்துக்கொள்ளவேணும்

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக காசிவிசுவநாதர் சந்நிதி பதினறுகால் மண்டபத்தின் அருகில் பந்தல்போட்டிருக்கிறவிடத்தில் பிராமணர் பந்துத்துவம் எல்லாருஞ்சேர்ந்து பசவுமுனிக்கு மஆதியம்பாளுக்கும் முகூர்த்தம் நடப்பிக்கிறவிதங்காண்க



அகவல்.

காசிமாநகரில் கற்றுளர் அந்தணர்
பாசமாயுவப்பிராமணர் கூடி
பேசியேமுகூர்த்தம் பிலமாய்நடத்தி
ஆசையாய்பந்துத்துவம் அனைவரும்வந்து



காம்பீரியமாகவே கண்டவர்புகழ
சாம்பசதாசிவன் சன்னதிக்கெதிரே
ஓங்கவேயபந்தல் ஒளிபெறபோட்டு
பாக்காயமர்த்தி பந்தலுக்கெல்லாம்
பன்னக்குலையும் பகருஞ்செங்கரும்பும்
தென்னங்குலையுந் திருடன்கட்டி
மாவிலைதோரணம் வகையாய்க்கட்டி
தாழ்விலாகுளைப்பும் தகைப்புடனேற்றி
திருமணவேதிகை சிறப்புடனமர்த்தி
அருமைசேர்பாலிகை யழகாய்வைத்து
அரசாணிகாலும் அடைவுடனட்டி
மரக்காலினையும் பண்பாயமர்த்தி
கொடிவிளக்கேற்றி கொத்துவிளக்கும்
அடைவுடன்வைத்து அம்மியும்பொருந்தி
மற்றுமுண்டான வகையெல்லாஞ்செய்து
வித்தகவேதியர் விருப்புடன்கூடி
இருவகைபத்திகை இயல்பாயிருக்க
அரிவைமாரெவரும் அழகாககூடி
பெண்ணும்பிள்ளையும் பெருமணவறையில்
வண்ணமாயிருத்தி வரிசையாய்நகைக்கு
மகிழுடனிட்டு மஞ்சள்நீராட்டி
புகழ்பெறவஸ்திரம் பொற்பணியிட்டு
வேதவிதிப்படி விளக்கமதாக
வேதியரெவரும் வேதமுமோத
ஓமசடங்கை உவப்பாய்செய்து
சாமவாத்தியந் தகைவாய்முழங்க
அருமறையோர்கள் ஆசீர்வதித்து
திருமங்கிலியத்தை சிறப்பாயெடுத்து
ஆதியின்கழுத்தில் அழிவிலாதாலி
வேதியன்தரித்தான் வெகுபெரிய
பெண்ணின்கரத்தைப் பிள்ளையும்பிடித்து
வண்ணமாஅக்கினி வலமாய்வந்து
நெற்பொரிசொரிந்து நேயமாய்வணங்கி

பொற்புடனைப்பியும் புகழாய்பிறிந்து
அருந்ததிகாட்டி ஆனபின்னமுகர
திருந்தலேபனிவி செங்கரம்பிடித்து
அங்கோரறையில் அமர்ந்தேபால்பழம்
சங்கையில்லாமல் தாமுண்ணும்போது
ஆதியின்முகத்தை அன்புடன்பார்த்து
ஏதுடிநெற்றியில் யிதுவடுவென்று
ஆதிருனல்லவோ அவ்வேளவிதன்னில்
மோதியேகரண்டியால் எறிந்தவடுகல்லோ
என்றவள் ஆதியும் அந்தனைக்கேட்டு
அன்றமேகமக்கு அருளினபடியே
தந்தைசொல்ஜாதகம் சரியாச்சதென்று
சிந்தையுங்கலங்கி செப்பலுற்றனனே

பகவமுனி-விருத்தம்.

இத்தனையதுமாக எனக்குமேவாமுவந்த
பத்தினிசொல்லக்கேளாய் பசும்பொன்மெய்நிறமதான
நெற்றியில்வடுவென்று நிசமாயெனக்கு
பத்தியாயுரைப்பாயெந்தன் பிராணநாயகியேமெய்யா

வசனம்

கேளும்என்தனதுசக்குந்த பிராணநாயகி பசும்பொன்னிறமதான உன்மேனி அழகுசொல்லிமுடியாது அப்படி அழகுமிகுந்தஉன்நெற்றியில் வடுவொன்றிருக்கிறதே அதுஎன்ன வடு விபரமா எனக்குச்சொல்லும்பெண்ணே

ஆதி-விருத்தம்.

ஏதுடிவடுவென்றுப்பீ எங்கியசாலையினிலெந்தன்
மீதினில்கரண்டியிட்ட வடுவதுதெரியாதோதான்
ஆதிநானல்லவோகாண் அதுதெரியாமல்நீரும்
ஏதுடிவடுவென்றுப்பீ பிறந்தானும்வெறுமனேதான்

வசனம்

கேளும் என் பிராணநாயகர் பாண்டியன் பட்டணத்தில் யாகசாலையில் என் மேலில்மோதிக்கு கூடிமறுவின பின்புயோ சென்றுயென்னைக்கேழ்க்க காண்பறைச்சிமுக்கி யென்பேர் ஆதி



யென்றுசொன்னவுடனே காண் யாக்கோதி அடித்தீரே அந்தவடு அல்லவோ தெரியாதோவெ நமெனயிரும் பிராமணா

பகவமுனி-விருத்தம்.

விதிதனைவெல்லக விவ்வேசர் தன்னக்கண்டு
மதியினால்விதியைவெல்ல வருமதாய்காசிக்கென்று
பதிதனைவிட்டுவந்தும் பறைச்சியைத்தாலிகட்ட
விதித்தாயோபிர்மதேவா விதிப்படிநடக்கத்தானே

வசனம்

விதியைவெல்லுதற்கு என் மதியினால் வெகுபாடுபட்டும் விதிப்படியேநடந்து பறைச்சியை பாப்பான்தாலிகட்டஆச்சுதே தெய்வமே அறுநூராகாசிவில்வநாதா.

பகவமுனி-தரு-ஆதிதாளம்

கண்ணிகள்.

தெய்வமேதந்தை ஜாதகப்படி
சரியாய்முடிந்ததே தெய்வமே
தையலாதியாள் சொன்னசபதமும்
தான்முடித்தாளே தெய்வமே
ஜாதகத்தை தடுக்ககாசி
ஸ்தலமும்வந்தேனே தெய்வமே
ஆதியாளென்று அறியாமல்மெத்த
அகமகிழ்ந்தேனே தெய்வமே
வேதவேதியர் வெகுபேர்கூடியே
விவாகஞ்செய்தாரே தெய்வமே
பண்ணபாவக் குலையநான்வெகு
பாடுபட்டேனே தெய்வமே
புண்ணியபாவம் போக்கிபுலைச்சியை
புணர்ந்தேனே தெய்வமே
எண்ணஞ்சூது வாதுகளெல்லாம்
எனக்கேவாய்த்ததே தெய்வமே
மண்ணில்பாப்பானாய் பிறந்துபறைச்சியை
மாலையிட்டேனே தெய்வமே
கூப்பிகைதொழுதேத்தி காசிநாதர்

கோவில்வச்சேனே தெய்வமே
பாப்பான்வயிற்றினில் பிறந்துபறைச்சேரி
பெண்ணைக்கொண்டேனே தெய்வமே
ஆதியென்றறியாமல் தாலியை
அழுத்திக்கட்டினேன் தெய்வமே
ஜாதிபாப்பார்கள் கண்டாலிந்தனை
தள்ளிவைப்பாரே தெய்வமே
ஐயையோவயிந்த அவனிதன்னிலே
ஆர்தானென்னைப்போல் தெய்வமோ
செய்யாதபாவம் செய்துசேரியில்
பெண்ணைக்கொண்டார்கள் தெய்வமே

பகவமுனி-விருத்தம்.

அரஹராவிஸ்வநாதா அனியாயமாயெனக்கு
வரும்விதிநூலைக்காசி வந்துமுன்செபனுக்தானே
திரிபுரமெரித்தசிவனின் சன்னதிச்செதிரில்நின்று
பறைச்சியைதாலிகட்ட பாப்பானுய்விதித்தாயீசா

வசனம்.

அரஹரா காலகண்டதிரிநேத்திர முடையயீசா திரிபுராந்தகனே யென்னுடைய அக்கியானத்தாலேயக் காசிஸ்தலம் வந்தேன் ஜாதகத்தப்பாமல் உன்சன்னதிக்கெதிரில் நின்று பறைச்சியைக் தாலிகட்டபாப்பானுய் யென்னைஜெனிமித்தாயீ காசிவிஸ்வநாதா அரஹரா.

பகவமுனி-தரு-நாடகமெட்டு-ரூபகதாளம்

என்னசெய்வேன், ஆதிபெண்ணே
என்னிடகுலத்தார் கண்டால்
கொன்றுதான் சுறிக்கிடுவார்
கோழிகூவ முன்னெழுந்து
வர்ணாசி தன்னைவிட்டு
மறுதேசம் போவோம்வாடி
இன்னமொரு நாழிருந்தால்
இருவரையும் பிடித்துக்கட்டி
கொல்லுவார் பிராமணர்கள்



கொப்பென வெழுந்துவாடி
சொல்லவென்றால் பலகீனமு
தோணுதடி யெந்தனுக்கு
இந்தயெல்லை கடந்துபோனால்
எவருநம்மைக் கேளாரடி
சூரியன் உதயமாக
துலங்குதடி கீழ்திசையில்
காரியக்காரியானால் கடுகநீயெழுந்துவாடி
வாறதில்லையென்றால் சொல்லும்
மறுதேசம் போறேன்யானும்

பகவமுனி-விருத்தம்.

என்செய்வேன் ஆதிபெண்ணே என்னிடகுலத்தார்கண்டால்
கொன்றுதான் எறிவார்கோழி கூவுமுன்னெழுந்திருந்து
வர்ணமாங்காசிவிட்டு மறுதேசம்போவோம்வாடி.
இன்னொருநாழிகையிருந்தால்யிருவரைப்பிடித்துக்கொள்வார்

வசனம்

வாரும்பெண்ணே முன்னேஎன்பின்னலேவந்த ஆதியென்றறியாமல் உன்னைத்தொட்டு சூரியசந்திராதியதாலிகட்டினேன் இனிமேல் நானுன்னைவிடுகிறதில்லை நாமிருவரும் இந்தக்காசிப்பட்டணத்திலிருந்தால் உன்னுடையஜாதியை எப்படியாகிலுங்கண்டுகொள்வார்கள் ஆகையால் நாமிருவரும் கோழிக்கூவுமுன்னமேயெழுந்து மறுதேசம்போய்பிழைக்கலாம் வருகிறதானால் வாரும் இல்லாவிட்டால் நீ இவிடத்திலிருந்தானே நில்லும் நான் அரைக்ஷணம் இவிடத்திலிற்கமாட்டேன் யெனக்குச்சிலவுதாரும் பெண்ணே நான்போய்வாரேன்

ஆதிக்கும்பகவமுனிக்கும்-தர்க்கம்.

தரு-அடதாளம்

ஆதி — போறேன்போறே னென்றாய்பிராமணா — என்னை
தாரமாக்கிக் கொண்டபிராமணா

பகவமுனி-தாரமாக்கிக்கொண்ட தாகையாலுன்னை
தவிக்கவிடுவது மேல்லா

ஆதி கோரானகாரியஞ் சொல்லுகிறேனிந்த
போரானகாசியில் வாழ்குவோம்
பகவமுனி-காசியிலிருந்துமேநாம்வாழ்ந்தால்யென்ன
கண்டுபிடிப்பார்கள் பிரமீமணுன்
ஆதி வேதியராத்தினில் வெகுநாளாய்
மெச்சியிருந்தோமே வெகுநாளாய்
பகவமுனி-ஜாதியாயிருந்தது மெய்தாண்டினெனக்கு
தாரமாகியேயும் வாழ்க்கையா
ஆதி வாழ்ந்ததில்லையென்று வேதியானென்னை
வைத்திவிடுவது நீதியோ.
பகவமுனி-நீதியாயிசனறியவேயடங்கினை
போசஞ்செய்ய தில்லைதெரிலைவயே
ஆதி தெருவிலென்னைவிட்டு முன்னை நீர்
போன சேதியறியாயோ பிராமணா
பகவமுனி-இல்லையென்றுசொல்ல வில்லையேயுன்னை
கல்யாணஞ்செய்யவும் வல்லேயோ
ஆதி வல்லக்காசியிசரறியவே யெனக்கு
வலக்கைபோட்டுதந்தால் வருகிறேன்

பகவமுனி-விருத்தம்.

வருகிறேனென்றுசொன்ன பயிலேனாளியுனக்கு
பிரியமாயிருக்கநாளும் பரவசமாகச்சொல்வேன்
உறுதியாய்மனதில்வைத்து உடனேவேந்தயானுமை
மறுதேசஞ்சென்றுநாளும் மருவியேவாழ்கலாமே

வசனம்

வாருப்பெண்ணே என்பிராணநாயகி ஆதியில் நான்செய்த குற்றத்தை மனதில் வைக்கவேண்டாம் இப்போது பூமிதேவி ஆகாசவாணி அறிய சொல்கிறேன் உன்னை கைசேர விடுகிறதில்லை நாமிருவரும் மறுதேசம்போய் வாழலாம்வாருப்பெண்ணே

ஆதி-விருத்தம்.

கண்டிதமாகயிந்த காசிவிஸ்வேசர்கட்டில்
அண்டராகாசவாணி அறியவேசொன்னுரென்னை



கொண்டவன்பின்னேயானுங் கூடவேபோரேனென்னை
விண்டுநீர்போய்விட்டாலும் விசாரிக்கதெய்வந்தானே.

வசனம்

ஆநநா காசிவிஸ்வேசுரகாலகண்ட திருக்ஷேத்திரமுடைய பிரா ஆகாசவாணி பூமிதேவி அறிய என்புருஷன் அவித்தியகாலம்வரைக்கும் என்னை விட்டுப்பிரிவதில்லை என்று சொன்னவாக்கை தப்பிநடந்தால் தேவர்களை விசாரிக்கவேண்டியது அவா? வாரும்மறுதேசம்போவோம் பிராமணா



ராகு—அடதாளம்,

ஆதி வாரும்வாருங்காணும் பிராமணாரும்
வர்ணக்காசிவிட்டு வனம்போவோம்
பகவமுனி-போவோம்போவோம்வாடி யிருவரும்பொழுது
விடியுமுன்னே தாழ்வனம்
ஆதி தாழ்யபுதருக்குள்ளே யிருவரும்நாம்
தனித்துயிருக்கலாம் வேதியா
பகவமுனி-இருக்கவிதிமக்கு யிருவர்க்கும்கர்த்தன்

எழுதியனுப்பினனே என்செய்வோம்

ஆதி — என்னகாணும்பிராண நாயகாயின்னம்
எங்கேயிருக்குது தாழுவனம்

பகவமுனி-தாருவனம்போக யிருவிரும்இன்னம்
தபசியர்கள்வனம் தாண்டலே

ஆதி — தாண்டினும்வனத்தில் ரிஷிகள்பேரை
சற்றுசொல்லுங்காணும் பிராமணா

பகவமுனி-பகல்போலேகாணுது பார்பெண்ணே
நல்லபாதர்கஷிக வனமிது

ஆதி — இத்தனையெல்லாந் தாண்டினேமினி
எங்கேயிருக்குது தாருவனம்

பகவமுனி-கண்டோமிதோபாரும் தாழுவனம்
காற்று குளிர்ச்சியாய் வருகுதுபார்பெண்ணே

ஆதி-விருத்தம்,

வனமெலாங்கடந்தோமும் வெகுதூரம்வந்தோமுங்கள்
இனமில்லையிவ்விடத்தில் யிருட்டியும்போச்சுதையா
மனதுசந்தோஷமாக மருவியிங்கிருந்துநாளை
தினத்தில்காமெழுந்துவேறோர் தேசமேசேரலாமே

வசனம்.

கேளும் என் பிராணநாயகா நாம் வனங்களெல்லாந்தாண்டி வெகுதூரம் வந்துவிட்டோம் தாழைவனம் நல்லசவுக்கியமாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கிறபடியால் [illegible] ந்தக்கப்பட்ட இடமாகவும் இல்லை உங்கள் இனத்தாரும் இங்கே நடமாட்டமாட்டார்கள் ஆகையால் நாமிருவரும் மனதுக்கிசைந்தபடி காமக்கிரீடைலீலைசெய்து மருவி விளையாடி நாளையதினம் மறுதேசம்போவோம் வாரும் என் பிராணநாயகா! நீர்என் இன்னம் சந்தேகப்படுகிறீர்?

பகவமுனி-விருத்தம்,

சந்தேகமென்னவென்றாய் மாதயேசொல்லக்கேளாய்
உந்தனைச்சேர்ந்தேனானால் உதித்திடும்சிசுகள்தன்னை
அந்நிடத்தினிலேதானே அப்பிள்ளைதன்னைப்போட்டு
என்தனோடினிதாய்வந்தால் யிருவருஞ்சேரலாமே



வசனம்.

கேளும்பெண்ணே ஆதி நான் எவ்வளவு தூரந் சொன்னபோதிலும் கேளாமல் என்னுடன்சேரவேணுமென்று சொல்லுகிறாய் உன்னிஷ்டப்படியே நான்சேருகிறேன் சேர்ந்தவுடனே சிசு உற்பத்தியாகும் பிறந்த சிசுவின்பேரில் இச்சையில்லாமல் அந்த சிசுவை அந்நிடத்திலேதானே எறிந்துவிட்டு என்னுடன் கூடத்தானே எழுந்துநீ வருகிறதானால் உன்னுடன்நான் சேருகின்றதிலொருதடங்கலுமில்லை பெண்ணே ஆதி.

ஆதி-விருத்தம்

அப்படிசெய்வேனையா ஆண்டவன்சாட்சியாக
ஒப்பினாய்சேரும்போது உடன்வருந்திசவுதன்னை
தப்பாமலெறிவேனையா தகப்பனுக்கில்லாசேதம்
மெய்ப்புடன்பெற்றதாய்க்கு வேண்டியதென்னசாமி

வசனம்

கேளும் என்பிராணநாதா நாமிருவரும்வாதிப்பமாகையால் காமன்விடுக்கணையினால் மனமுருகுது நாமிருவருங் கூடினமாத்திரத்திலே ரிஷிபண்டம் சேரத் தங்காதாகையினால் பிறந்தசிசுவின்பேரில் இச்சையில்லாமல் எறிந்துவிட்டுவருகிறேன் நாமிருவருங் கூடலாம் வா சாமி.

தரு-அடதாளம்

தனதத்தம் தனதத்தம் தனனா-னதி
தனதத்தம் தனதத்தம் தனனா
இருவரும்ஒருமனதாகி-அநேக
இருந்திடும்தனைவிட்டு பரதேசியாகி
திரிந்தெங்கும் பிச்சைகள்வாங்கி-தெரிந்து
தேசங்களெல்லாம சிவஸ்தலம்சுற்றி
மலைகளெங்காமும்பார்த்து-ராம
பட்டணம்ஜெகநாத பட்டணந்தாண்டி
தொண்டமா நாட்டினில்வந்து-இருவர்
சேர்ந்துவிளையாடி நீர்த்தவுடனே
தெரிவையாள்கருப்பமிழு-சிதை
தெண்டகாவனத்தினில் பிண்டமுண்டாகி

எப்படிஎன்செய்வேனென்று-ஆதி
சன்றனள் ஔவைதனைஇன்பமதாக (தனதத்)

பொது-வசனம்

அதேதெப்படி என்றால் பகவமுனியும் ஆதியும் சேர்ந்தவு டனே ஔவை என்னும் பெண்பிறந்தாள் பிறந்தசிசுவை நீக்கி பகவமுனியுடன்கூடப்போகமனமில்லாமல் பிரலாபிக்கிற விதங் காண்க.

இ-ம்-ஆதி-அதிதாளம்.

எப்படிநான் விட்டுப்போவேன்
இந்தநேர் குழந்தைதனை
செப்புமிந்த மண்டபத்தில்
சேயைவிட்டு நான்பிரிய
சிந்தையுங் கலங்குதையோ
சிவனேயிது உன்செயலோ
எந்தவித மாகிப்போ
என்மனம் துணியுமோதான்
சித்திரம்போல் வந்துதித்த
செல்வியைநான் விட்டுப்போக
சற்றுமேதான் தன்குடனும்
சேருமேதான் னென்றுசெய்வேன்

பொது-வசனம்.

அதேதெப்படியென்றால் ஆதியானவள் குழந்தையைப் பார்த் துப்பிரலாபிக்கையில் அந்தக் குழந்தை சொல்லுகிறவிதங்காண்க.

ஆதியைப்பார்த்து-ஔவையென்னுங்குழந்தைசொல்

வெண்பா.

இட்டமுடனென்தலையி லின்னபடியென்றெழுதி
விட்டசிவனுஞ்செத்து விட்டானோ-முட்டமுட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

வசனம்.

இவ்விதமாகச்சொல்ல ஆதியானவள்கேட்டுமனந்துணிந்து அந்தக்குழந்தையை அந்தமண்டபத்திலேயேவிட்டுவிட்டுப் பகவ



னுடன்கூடப்போயினள். அப்பால் அக்குழந்தை அவ்வூர்சேரியிலு ள்ள பாணர்களால் எடுத்துவளர்க்கப்பட்டுவந்தது.

அப்பால்பகவமுனியம்-ஆதியும்போகிற

தரு-அடதாளம்.

அந்தவனங்கடந்து அப்புறமேபோகலுற்றார்
சந்தனச்சோலைதாண்டி தவசிகள்வனந்தாண்டி
தங்கினார்பகவமுனி தயவாகஅந்தவிடத்தில்
இங்கிதமாயிருக்கும்போது ஏதுசொல்வாளாதியவள்

ஆதி-கந்தார்த்தம்

அருமையிங்கேயில்லை அனதாலெனக்கோர்முத்தம்
தாருமேபிராமணரேர் தையலாளாசைதீர
சேருமேயிந்தவேளை சிந்தையுமகிழ்வதாக
வாருமென்மையல்தீர மதன்ரதிபோர்லேகாரும்

மருகலாம்வாரும்---யெந்தனையிப்போ
பிரியமாய்சேரும்

அரினவயெனைவாவென் நழைந்துச்சரசமாடி
இருவருமொன்றாக இன்பமாகக்கூடி

(மருகலாம்)

பகவமுனி-கந்தார்த்தம்.

ஆதியேயுன்னைச்சேர்ந்தால் அனிஷ்டமும்வருமென்றெண்ணி
மேதினில்கூடாதென்று வெகுநாளாய்த்திரிந்ததந்தை
ஜாதகப்படியெனக்கு சரியாகமுடிந்துபோச்சி
ஆதலாலினிமே உன்னைச்சேர

அட்டியென்னடிசொல்லடி---இனிமேலுன்னை
கட்டியணையவில்லடி.

சட்டமாகாயிச் செடிகனிறோமே
கட்டியணைகுவேன் கம்செனவாருமே

(அட்டியென்னடிசொல்லடி)

பொது-வசனம்.

இந்தப் பிரகாரமாக ஆதியும்பகவமுனியும்பனஞ்சோலையில் சேர்ந்து அனேந்தவுடனே உருவை பிறந்தாள் அக்குழந்தை

யைவிட்டுப்பிரியமனமில்லாமல் தாயாகிய ஆதி புலம்புகிறவிதங் காண்க.

இ-ப்-சண்டை-ஆதிதாளம்,

கண்ணிகள்.

கண்மணிகுழந்தையை பொன்னமாயான்விடுவேன்
தெய்வமே ஓ தெய்வமே
வண்ணமுகம்பார்க்க வயறுகுலங்குதே
தெய்வமே ஓ தெய்வமே
சந்திரனொளிபோலே தானுங்குலங்குதே
தெய்வமே ஓ தெய்வமே
எவ்விதம்மனைக் தேடிவிட்டுப்போவேன்
தெய்வமே ஓ தெய்வமே

பொது-வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக ஆதி யானவள் பிரலாபிப்பதைக்கண்ட உருவையென்னுங் குழந்தை தாய்முகமேநோக்கிச் சொல்லுகிறவிதங்காண்க

வெண்பா.

சண்டைப்பைக்குள்ளுயிர்கள் தாயருந்தத்தானருந்தும்
அண்டத்துயிர்பிழைப்ப தாச்சரியம்—மண்டி
அலைகின்றவன்றோ யானுடையவுண்மை
நிலைகண்டு நீயறிந்து [illegible]

பொது-வசனம்.

இத்தப்படி உருவை யாகிய பெண்குழந்தைசொல்ல ஆதியாகப்பட்டவள் அக்குழந்தையை பனஞ்சோலையில் வளர்த்திவிட்டு பகவமுனியுடன்போய்விட்டாள் அப்பால் சானார் அவ்வழியேவந்து அக்குழந்தையை யெடுத்து வளர்த்துக்கொண்டார் அவள்தான் ( பத்திரகாளியம்மன் )

பகவமுனியும் ஆதியும் மறுதேசம்போகிற.

தரு-அடதாளம்.

குன்றுக்கெல்லாம் பெரியகுன்று-அங்கே
குகைவாசர் அருமுகவேவின்றெடுத்தகுன்று



வனத்துக்கெல்லாம் பெரியவனமாம்-பொல்லா
வன்பிணிகள் துன்பங்கள் தீரயறுக்கும்வனமாம்
மலைகட்கெல்லாம்பெரிய மலையாம்-அங்கே
மலைநாதர்களிருக்கும் வெள்ளிமாமலையாம்
அவ்விடந்தனில்போகின்றார்கள்-அப்போ
ஆதியும்மையல்கொண்டு ஏதொன்று சொல்வாள் (த)

ஆதி-கந்தார்த்தம்.

இருவருமொன்றாய்ச்சேர இடக்குகள்செய்யாமல்நீர்
ஒருமனதாயிருந்து உள்ளமுமகிழ்வதாக
சரசமும்செய்துமெத்த சையோகமாகத்தானே
மருவியேசுகமுந்திர மறைவாகநீ
வருகுவீர்சாமி—எனக்கோர்முத்தந்
தருகுவீர்சாமி
அரிவையாளென்னிட ஆசையுந்தீரவே
இருந்நீர்சொல்லாமல் சீக்கிரமாசேரவே
(வருகுவீர்சாமி)

பகவமுனி-கந்தார்த்தம்.

தேனார்மொழிமாதேயுனது சிந்தையுங்கலங்கி
ஏனோயிப்படியுருகிறாய் எங்மேலின்பமதாக
கானேமிகமயலாகினேன் மன்மதன்கணையிலேலே
மானேமயிலேகுயிலே நாமிருவரும்
மருமையலாக—நாமிருவரும்
ஒருமையதாக
உருகிமதஜலமும் ஓடிஆறாய்பாய
இருவரும்போகிப்போம் இன்பமதாய்வோய
(அருமையதாகநாமிருவரும்)

பொது-வசனம்

இந்தப் பிரகாரமாக ஆதியும்பகவமுனியும் வெள்ளிமாமலையினருகே சேர்ந்தவுடனே வள்ளியம்மன்பிறந்தாள் அப்போது அக்குழந்தையை உதிரத்துடனேவனத்தில்விட்டுப்போகமனமில்லாமல் ஆதி புலம்புகிறவிதங்காண்க

ஆதி-தரு-சங்கராபரணம்-மிசிர தாளம்.

தங்கமுகமதனிலேகண்டு கண்ணே விட
தாலிவிலேயேமனம் கண்ணே
பூர்ணசந்திரன்போல் கண்ணே எனக்கு
பெண்ணாய்ப்பிறந்தாயே கண்ணே
விட்டுப்பிரிந்திருக்கு கண்ணே மனம்
இல்லையேஎன்செய்வேன் கண்ணே
இந்தமலைச்சாரலில் கண்ணே மிருகம்
இருக்குமிடமாச்சே கண்ணே
பெற்றவருக்குமது கண்ணே விட்டு
போகமனம்வல்லையே கண்ணே

பொது-வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக ஆதியானவள் பிரலாபிக்கின்றதைக்கண்ட குழந்தையானது தாயின்முகம்நோக்கிச் சொல்லுகிறவிதங்காண்க

வள்ளியம்மை-வெண்பா.

அன்னைவயிற்றி லிருந்திலவர்த்தவன்றான்
இன்னும்வளர்க்கானோ வெந்தாயே-மின்னாவலஞ்
சூடும்பெருமான் சுடுகாட்டில்நின்றாடும்
பாடும்பெருமானவன்

பொது-வசனம்

இவ்விதமாகக் குழந்தைசொல்லக்கேட்ட ஆதியானவள்மனந்தெளிந்து பகவனோடேகூடப்போயினள். பின்பு அக்குழந்தையை அந்தமலைச்சாரலிலிருந்த குறவர்கள் எடுத்து வளர்த்துவந்தனர்.

ஆதியும்பகவமுனியும் மதுரைசம்போகிற-தரு-அட தாளம்.

நன்றாக கன்றாக காண்மனதுமேயார்ப்பிகவாழ்க
பட்டணமாம்பட்டணமாம் காவிரிப்பூம்பட்டணமாம்
இஷ்டமுடன்எல்லோரும் இருக்குமந்தப்பட்டணமாம்
அட்சயமாயன்றாட்டில் ஆதியவள்போய்ச்சேர்ந்தாள்
பகவமுனிபக்கத்திலே பாங்குடனேபோய்ச்சேர்ந்தாள்



ஆதி-விருத்தம்.

திட்டமதாகவிந்த சீர்தருங்காவிரிப்பூம்
பட்டணந்தன்னில்வந்தோம் பரிவுடனேகந்தானே
அட்டியில்லாமலிப்போ அகமகிழ்வாகத்தானே
கட்டியேயணைகுவோம்காமக் கலியுமேதீரத்தானே

வசனம்.

வாரும் என்பிராணநாயகா நாம் காவிரிப்பூம்பட[illegible]ருகாமை வந்துசேர்ந்தோம் ஆகையால் எனக்கு காமவேதனை பொறுக்கமுடியவில்லை ஆகையால் நாமிருவரும் சேர்ந்து மருவுவோம் வாரும் என் பிராணநாதா

பகவமுனி-விருத்தம்.

வடிவழகாளேநாமும் மருவியேயிருப்பதற்கு
தடையென்றுதிருக்குதிங்கே தையலே சொல்லக்கேளாய்
படிமீதிலுனைமேல்நானும் பக்ஷமாயிருந்தேனானும்
அடைவுடனணைவதற்கு அட்டியுமில்லைத்தானே

வசனம்.

வாரும்பெண்ணே ஆதி யினி மேல்உன்னைச்சேர்ந்து அணைவதற்கு தடை ஏது அப்படியே மருவுவோம்வாரும்பெண்ணே.

பொது-வசனம்.

இந்தப்படிக்கி ஆதியும்பகவமுனியுஞ்சேர்ந்து அணைந்தவுடனே ஔவையென்னும் பெண்பிறந்தாள் அந்தசிசுவைப் பெற்ற தாயாகிய ஆதி விட்டுப்பிரிய மனமில்லாமல் விசனப்படுகையில்

ஔவைசொல்-வெண்பா.

உளிக்கசையாகல்லுக் குள்ளிருக்கும் தேரைக்கும்
அள்ளி யமுதளிக்கும் ஐயன்—மெள்ளமெள்ள
எடுத்தெடுத்து ஊட்டானோ எந்தனுக்கு மீசன்
அடுத்தடுத் தழாதேயம் மா

பொது-வசனம்

இந்தப்படி ஔவை சொன்னதைக் கேட்ட ஆதியானவள் மனந்தெளிந்துபகவமுனியோடேகூடப்போய்விட்டாள். அப்பால்

வைத்துக்காட்டினுர் அந்தக் குழந்தையை எடுத்து வளர்த்துக்கொண்டார்கள்

(அவள்தான் மாரியம்மன்)

அப்பால்பகவமுனியும்-ஆதியும்போகிற-தரு

கொண்டிச்சிந்து.

ஆதியும்பகவமுனியுடன் கூட
அன்னநடையதாக உல்லிதமாக
பாதைவழியைக்கண்டு திங்காரமாய்
பட்டணம்போகக்கடந்தார் தீவிரமாக
தெண்டனிட்டுக்கண்டுகொண்டார் தியாகனை
தெரிசித்து யிருவரும் பரிசுத்தராய்
கண்டோர்களித்திடவே யிருவரும்
கலந்தனைவோமென்று நலமுடனே

தனத்தோம் தனதனெ





ஆதி-கந்தார்த்தம்.

அந்தணரனேகம்பேர்க ளரியகம்பிருவருக்கும்
விந்தைசேர்தாலிதன்னில் விவாகமேசெய்ததாலே
எந்தனைபக்ஷமாக இருந்துபோகஞ்செய்ய
சந்தேகமென்னவேண்டாம் சரசமாயென்னைச்சேர

சந்தோஷமாகவாருமே—கட்டியணைந்து
தழுவியெந்தனைச்சேருமே
சிந்தை[illegible]ழ்ந்துசேர்ந்து , வாயிதழ்கடித்திட
பந்தெனுமிருக்கொங்கையை பார்த்துப்பிடித்திட

சந்தோஷமாகவாருமே

பகவமுனி-கந்தார்த்தம்.

இருவருமாகயிங்கே யிஷ்டமாயிருப்பதற்கு
பரவசமாகக்கேட்ட பாவைபேசொல்லக்கேளாய்
திருகொன்றுசொல்லுவேனே சீக்கிரமாகத்தானே
வருகுவாயிக்ஷணத்தில் மதன்ரதிபோலேகாமம்

மருவிசுகமதாகவே—மையலைத்தீர்த்து
மகிழ்ந்திருவோருமாகவே

உருகிமதஜலம் ஒடுவதாகவே
இருவருமொருமன தாகவுமாகவே

மருவிசுகமதாகவே

பொது-வசனம்.

இப்படியாக ஆதியும் பகவமுனியும் சேர்ந்தவுடனே இருவரொருவர் பிறந்தார் பிறந்தசிசுவை விட்டுப்பிரிய மனமில்லாமல் தாயாகிய ஆதி பிரலாபிக்கையிம் அக்குழந்தைசொல்வது.

வெண்பா.

எவ்வுயிருக்காக்கவொரு வீசனுண்டோயில்லையோ
அவ்வுயிரில்யாமொருவ னல்லவோ—வவ்வி
அருகுவதுகொண்டிங் கழிவதேனன்னே
வருகுவதுதானே வரும்.

பொது-வசனம்.

இப்படி அப்பிள்ளை சொன்னவுடனே ஆதி போய்விட்டாள் அப்பால் சென்னை மயிலாப்பூர் காரர்கள் எடுத்து வளர்த்துக் கொண்டார்கள்.

ஆதியும்-பகவமுனியும் மறுதேசம்போகிற

தரு-அடதாளம்.

ஆதியேசர்க்குண மாலையே-பாராய்
ஜோதியாள்தொரு சோலையே
அற்புதமாகிய சொமருகள்-கல்ல
கற்பூமாமுற் பாங்குகள்-ஆ ஆ
தீர்த்தபுர மென்றது-இதோ
க்கமுடனேபாரும் இன்றது
சோமனுலாவுதுபாராய்-வெகு
சொருசுடனேயும் கொய்
காமன்கணையாலேவாடுறேன் உன்னை
கலந்தணையப்போ தேடுறேன்
தாமிதமசெய்யாமல் வாடிநீ-கன்றாய்
தழுவியணையலாங்கூடினி

பகவமுனி கொச்சகம்.

மானேமரகதமே மடமயிலே வாறாதலே
தேனேமதனசரத்தால் திரேகங்களைக்குதடி
நானேயினிதானேன் கற்கிளியேதெவியரே
மீனேவிழியணங்கே மதன் வேதனையைதீராயோ

வசனம்

அடிபெண்ணே ஆதி எந்தனுக்கு விரகசேதனை பொறுக்க முடியவில்லை ஆகையால் நாமிருவரும் கூடியணையலாம் ஆதி!

ஆதி-தரு-அடதாளம்

பல்லவி.

என்பிராணநாதா—மனதுக்
கிசைந்தவிநோதா



அநுபல்லவி.

அன்பாளனாட்னைக்கு இன்பசுகந்தந்து
தென்பாகவேயிருந்து புருஷனுகவமர்ந்த (என்)
தலையில்மலர்சூடி தழுவிவிளையாடி
முலைமேல்தொட்டுமுத்தாடி போகத்திறவேகூடும் (என்)
மன்மதன் கணையினால் மையலாகுதுபாரும்
என்னுடமோசமிக்க இந்தவேளையில்லாரும் (என்)
செங்கைக்குடம்பிடித்து கோவையிதழ்கடித்து
சங்கையில்லாமல்கூடி சரசங்களேயாடும் (என்)

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக சரசலீலை விநோதங்கள் செய்து ஆதியும் பகவமுனியும் கூடியவேளைக்ஷமாத்திரத்தில் அதிகமாமென்கிற ஆண்பிள்ளை பிறந்தது பிறந்தபிள்ளையை விட்டுப்போக மனமில்லாமல் ஆதி புலம்புகிறவிதங்காண்க

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்

எப்படிவிட்டுப்போவேன்-மகனே நான்
எப்படிவிட்டுப்போவேன்

ஒப்பியப்பாவுனை உயிரோடேநான் தோற்று
தப்பிதமாயிந்த மண்டபந்தனில்போட்டு (எப்ப)
கூவாகூவாவென்று குழந்தையழக்கண்டும்
பாவிநானெப்படி பாலன்தனைமறந்து (எப்ப)
அந்தணரிதையறிந்தால் அதிககோபங்கொள்வார்
உந்தனைவிட்டுமே எங்கேப்பாரே (எப்ப)
பாலுண்ணுங்குழந்தையை பரிதவிப்போல்விட்டு
காலையேயான்போக சஞ்சலப்படுகுதே (எப்)

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக ஆதியானவள் பிலாபிப்பதைக்கண்டு குழந்தை தாய்முகம்நோக்கிச் சொல்லும்விதங்காண்க

ஆதிமான்சொல்-வெண்பா.

கருப்பைக்குள் முட்டைக்குங் கல்லினுட்டேரைக்கும்
விருப்புற்றமு தளிக்கும் மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டிவளர்க்காதோ முகெடுவாயன்னேகேள்
வாட்டமுனக்கேன் மகிழ்

பொது-வசனம்.

இந்தப்படிக்கி ஆதிகமான்சொன்னவுடனே ஆதிமுனக்குழவி க்குப் பகவனோடேபோய்விட்டாள். பிறகு அக்குழந்தையை அவ்வூரிலுள்ள ஓர் பிராமணனெடுத்து வளர்த்துக்கொண்டான்

அப்பால் பகவமுனி-ஆதிக்குச்சொல்-கொச்சகம்

மின்னமேமைபக்கிளியே அமுதமே செந்தேனே
அன்னமேலுமின்னமேயென் கருத்தின்படிக்கிசைந்த
பொன்னகராந்திருவாரூர் பிறப்பட்டுப்போவதற்கு
இன்னமிங்குஞாலமென்று எழுந்துநடமாமயிலே

வசனம்.

வாரும்பெண்ணே ஆதி இன்னம் இவ்விடத்தில் ஜாலமேன் செய்துக்கொண்டிருக்கிறாய் எழுந்திரும்பெண்ணே.

பகவமுனி-தரு-அடதாளம்.

பல்லவி.

நடந்துவாராய்—ஆதிநாயகம்
நடந்துவாராய்

அநுபல்லவி

நடந்துவாதாமுழு அடர்ந்தகானகத்தை
கடந்துபிரதிஷ்டை யடைந்துவரநாமும்

(நடந்துவாராய்)

சரணங்கள்.

எழில்மடமானே—தெகிட்டாத
இனியசெந்தேனே



மெர்ழியுஞ்செங்கமல முகவஜீகமுமே
விழியழகியுன்னை விட்டுப்பிரியேனே

(நடந்துவாராய்)

மாதர்கள்மேட்டு—சுந்தர
மன்மதகிரீட்டி
ஆதிநாயகியென் அணியச்சடை காட்டி
காதல்கொண்டாய்கட்டி கலந்திடுத்தவளோட்டி

(நடந்துவாராய்)

முத்தமீதாராய்—உன்மேல்கொண்ட
மோகமறுத்திராய்
சித்தஜனல்மனக் கியதீனயாளாய்
எதிரியனைத்துந்தன் பிதமுன்னவேநோய்

(நடந்துவாராய்)

ஆதி-விருத்தம்

பேதமில்லாதஎந்தன் பிராணநாயகனேகேளாய்
தோதமாகமெத்த தூரமேவந்துவிட்டோம்
காதலுங்கொண்டுநிப்போ-கலந்தணையனைவதற்கு
ஆதலாலென்னைச்சேரும் அட்டி நீசொல்லவேண்டாம்

வசனம்.

கேளும் என்பிராணநாயகா நாம்வெகுதூரம்வந்துவிட்டோம் இவ்விடத்தில் சோலைகள் சூழ்ந்துகுளிர்ச்சியாயிருக்கிறபடியால் நாமிருவரும் இவ்விடத்தில் கலந்தணைவோம் என் பிராணநாதா, அட்டியில்லாமல் சீக்கிரமாய் வாரும் பிராமணா!

பகவமுனி-விருத்தம்

அட்டியுமொன்றுமில்லை அரிவையேயுன்னைச்சேர
இஷ்டமதாகநாமும் யிவ்விடந்தனிலேதானே
கட்டியேயணைவோம்காமக் கவியுமேதீர்ப்பதற்கு
சட்டமாய்வாரும்நாமும் சேர்ந்துமேயணையலாமே

பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக இருவரும் ஒரே மனதாய் சரசலீலாவினோதத்துடனே கூடிமருவும் விதங்காண்க.

பகவமுனி-தரு

பல்லவி

சந்திரவதனநீ—சுந்தன்மோககந்திர வாகாம்

சேர்ந்தனைக்திடுவீரற்கு அடி ஓ (சந்திர)

அநுபல்லவி

உனக் கொந்தவிதம் வேறுமே யெழிலாக மோக
இன்பசுகந்தாரும் அன்புவைத்துமேனுங்
பண்பதாகவே அடி (சந்திரவதனு)

சந்திரமே
அந்தமிருக்தவோ
ஆசையாருதே
அனைக்திடவேயிருவருமே
நேசமாகவே பாசமாகவா அடி (சந்திர)

ரதிதேவியே
மதுரசமொழியேயுயும்
மருவியிருக்கலாம்
மயைப்போலே
வேதனைதீரய்
மாதரவதாய்
காதலுங்கொண்டேன் அடி (சந்திரவதனு)

சேதிகைக்கேள்
மாதர்கட்கிரீட்டியேவே
வந்தனைகுவாய்
மாரன்பீதியோளய்புருவா
இந்தவேளையில்
தொந்தமாகவே
ஒக்கதுபகிழுவே அடி (சந்திரவதனு)

பொது-விருத்தம்

காமனும்ரதியும்போலே கமழும்பூங்காவனத்தில்
மாமயிலார்தியாளை மறையவனனைத்தபோது
தாமதமில்லாமற்றான் சந்திரனுதயம்போல
பூமியில்கபிலர்தாமும் பிறந்தனர்பிரபல்யமாக

பொது-வசனம்

இந்தப்பிரகாரமாக காமனும்ரதியுபோல் பகவமுனியும் ஆதியும்சரசலீலை விநோதத்துடனே கூடி மருவினவுடனே சந்திரனுதயம்போல மகாசுந்தரத்துடன் கபிலர்பிறந்தார் ஆதியானவள் இவ்வளவு அழகுமிருந்த ஆண்பிள்ளையை எப்படி விட்டுப்போகிறதென்று மனங்கலங்கிநின்றபோது

கபிலர்சொல்-வெண்பா

கண்ணுணழுயாக் காட்டிற் கருக்கற் றவளைக்கும்
உண்ணும்படியமைந்து வைட்டுமேவர்—தண்ணும்



நமக்கும்படியளப்பார் வெரியார்பாதர்
தமக்குத்தெரழிலென்ன தன்

பொது-வசனம்

இந்தப்பிரகாரமாய் கபிலர்சொன்னதின்பேரில் பகவமுனிக்கு சாபநீங்கி பூர்வரூபமாய் ஆதியைப்பார்த்து சொல்கிறவிதங்காண்க

பகவமுனி-விருத்தம்

இருவருமொன்றாய்ச்சேர்ந்து எழுபிள்ளைகளைப் பெற்றோம்
விரகவேதனையுந்தீர்த்தோம் வித்தகனருளினாலே
காமத்தையொழித்திட்டேமுந் ஞானத்தோடிருந்திப்போது
பாமனை நீக்கித்தவிர்ம லோகத்திற்சேருவோமே

வசனம்

கேளும்பெண்ணே ஆதி நாமிருவரும்சேர்ந்து எழுபிள்ளைகளைப்பெற்றோம் நான்சொன்னபிரகாரம் இந்த எழுபிள்ளைகளையும் பிறந்தவிடத்திலேயே போட்டுவிட்டு என்னுடன் கூடவேவந்துவிட்டாய் இனிமேல் நமக்குவேண்டியது ஒன்றுமில்லை இன்றோடே நமதுசாபமும் விலகிப்போச்சுது ஆகையினால் நாம் பரமசிவத்தை தியானித்துத்தபஞ்செய்து பிரமலோகம்போகலாம் வாரும் பெண்ணே.)

ஆதிசொல்-வசனம்

அப்படியேஉமதிஷ்டம்போல்பரமசிவத்தைநாடிதபஞ்செய்து நமது இருப்பிடமாகிய பிரமலோகத்திற் சேருவோம் பிராணநாதா

பொது-விருத்தம்

போராழிமுனிவன் வயற்றினில்பிரமன்
பிள்ளைய தாயுதித்து
புலசனைய சேசென்று சாபமேவந்ததால்
புவியீதி லேதிரிந்தார்
சீரானசரஸ்வதி பிரமன்சா வதிவிருந்
தன்னுடையோர் போதசாபம்
சிவனருளடைந்துபின் சேரிவாழுதியோன
சீர்பகவனையுமனைந்து

பேராகவேளழு பாலனாயுமின்றலைவயை
பார்தனில் விடுத்தேகவும்
பிரமன்வசனிக்கவும பரபஞ்சரனித்திட்ட
சாபமுந் தானெய்தியவே
சேர்விலாதென்றாரும் பிர்மலோகந்தனிற்
சோதியமாகவேதான்
சொற்பெரிய சிருஷ்டிப்பெய்போதுஞ்செய்தனர்
கும்பிவிப்பிலைகுவோரே

வசனம்

அகோதேப்படியென்றும் பிர்மாவுக்கும் சாஸ்வதிக்கும் விஷ்ணுவினால் பொய்சொன்ன தின்பேரில் இவனிட்ட சிக்ஷைத்தால் பிர்மா போராழிமுனிவயற்றில் பிள்ளையாயப்பிறந்துபிறகு பூவுலகத்தில் புலைச்சியைச்சேரும்படியாகவும் சாஸ்வதி பிர்யா காளிலிருந்து பொய்சொல்லவைத்ததின்பேரில் சாஸ்வதி கருவூர்சேரியில்வேம்பான்தோட்டிக்கு பெண்ணாய்ப்பிறந்து ஆதி யென்று சேரியாரழைக்க அப்பால் அந்த பிர்மதேவனென்கிற போராழிமுனி குமாரன் பகவமுனி ஆதியோடேசேர்ந்து எழுபிள்ளைகளைப்பெற்றும் அவைகளைப்பிறந்தவிடத்திலேதானேபோட்டுவிட்டு பிற்பாடு பாசிவனை நோக்கித் தபஞ்செய்து சாபம்நீங்கி அப்போதும்போல பிர்மா பிர்மலோகம்போய் ஜீவஜெந்துக்களை சிருஷ்டிப்புசெய்துக்கொண்டிருந்தார் பிற்பாடு கபிலர் திருவாரூரில்சாஸ்திர பிராமணனிடத்தில்வளர்ந்து நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் அறுபத்துநாலு கலைக்கியானமும் தொண்ணூற்றாறுதத்துவமும் கற்று வல்லவராக வருகிற விதங்காண்க

கபிலமுனி வருகிற – தரு: ஆதிதாளம்

பல்லவி

வந்தானேகபிலமுனி——வையகந்தனிலே
வந்தானே கபிலமுனி

அநுபல்லவி

வந்தான் கபிலமுனி வாருடனிலகுதனில்
விந்தசேர்சோழன்நாட்டினில் அந்தமாகநடந்து (வந்

சரணங்கள்

அண்டர்முனிவுசென்வர்ம கண்டுமனமகிழ



பண்டுசெய்தபாவங்கள் விண்டுபோகவென்று
(வந்தானே)

வேதசாஸ்திரங்களை விஸ்தாரமாகவறிந்து
சாதியிரண்டொழிய வேறில்லையென்றுரைத்து
(வந்தானே)

அரசன்சோழராஜன் கண்டு அருமுனியென்றிருக்கும்
வருகிறீராவென்றுகேட்க மனமுவந்துபதிலளித்து
(வந்தானே)



பொருது-வசனம்.

அதென்தெப்படியென்றால் கபிலமுனியானவர் தேசஞ்சாரஞ்செய்துக்கொண்டு சோழதேசத்திற்கு வந்தமையால் அவ்வூரை பரிபாலனஞ்செய்யும் சோழராஜன் அவரைநோக்கி நீரொன்று கேழ்க்கிறவிதங்காண்க

சோழராஜன்-விருத்தம்

வந்தநோர்கபிலர்தன்னை மன்னவன்வந்துபார்த்து
எந்தவூரெந்தநாடு எங்கிருந்திங்குவந்தீர்
தொந்தமாயெந்தனுக்கு சொல்லுங்கள்... சேழ்க்க
அந்தமாய்க்கபிலர்தானும் அரசருக்கேதுரைப்பார்

கபிலர்சொல்-வெண்பா

எந்தவூரென்றிருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர்ச்செய்தி யறிவீரோ—வந்தவூர்
முப்பாழும்பாழாய் முடிவிலொருவியமாய்
அப்பாலப்பாலென் றறி

சோழராஜன்-விருத்தம்.

வையகமதிலிப்போது மாவேகமாகத்தானே
ஐகளைவீக்கவென்ன காரணமாகத்தானே
மெய்யபயிலேபோறதானோ பிறப்பட்டுவெருவியாக
ஐயமேசொல்லிப்போவீர் அவசியமாகத்தானே

கபிலர்-விருத்தம்

ஐயனென்றுரைத்தீர்காதே கடுங்குமேவாருவிலேனைப்
பொய்யொடு களவுமற்றுப் புலன்களை யொடுக்கிக்கொண்டு
உய்யவே புலன்களைந்து முயற்பெற வெளியுள்ளாக்கி
வெய்யவன்மதியும்போல விரவுவரையராவர்

சோழராஜன்-விருத்தம்.

வானவர்மகிழ்வதாக வல்லவராகநீரும்
மாலிலந்தன்னில்மெத்த மறைநாலுவேதமோதி
ஞானமுக்தேதிக்குயெல்லாங் கடந்துமேயிருக்குமல்ல
ஞானவாதீனதான்சொல்லீர் நல்முட்டினனக்குத்தானே



கபிலர்-விருத்தம்.

ஞானவானென்றுசொன்னீர் நாதவிந்துங்கடந்து
கானலைமையுங்கட்டுக் கடுவெளியமானந்தக்
தானெனுமமையைவிரண்டுந் தவிர்ந்துதன்வசமுங்கெட்டு
மோனமுங்கடந்தேயப்பால் முடிந்தவர்ஞானியாவார்

சோழராஜன்-விருத்தம்.

வேதபாரக்க... அறிந்த விப்பாவர்குலமுந்தானே
நீதியாயசாஸ்திரத்... வசீசமோயெந்தனுக்கு
ஏதொ... தெய்வமில்லை இன்றொரன்றுவுந்தன்
... சொல்லுமையா சமுசயம்விட்டுப்போமே

கபிலர்-விருத்தம்

சாதியிலேதொன்னூற்றாறென்பதாஞ்சாதி
சமயத்திற் பதின்மூன்றுஞ் சமயமாகும்
நீதியிலேசிவனுடைய நீதியாகும்
நிலைமையிலேவே... நிலைமையாகும்
ஆதியிலே... கருவூராகும்
அந்தத்திற்போயடைவோம் பேருந்தன்னிற்
சோதியிலேபரஞ்சோதி கூட்டமாகும்
சொல்லுதற்குமெங்கள்குலஞ் சக்கிலமாமே

சோழராஜன்-விருத்தம்.

எல்லையில்லீரோதான் எத்தீசமோவுமுனு
இல்லாமலெந்தவூரோ எங்கிருந்திங்குவந்தீர்
சொல்லியேபோமையாநீர் சருக்காகஎன்றுபோமீர்
தில்லுமில்லையாநீரும் நேசமாபேசிப்போவீர்

கபிலர்-விருத்தம்

தில்லுமில்லென்றுசொன்னீர் நேசபாசங்களைத்தாம்
புல்லறிவோர்வாக்குப் புலைசொல்களைவுமற்று
சொல்லுதற்கரியஞான சுழிமுனைமுடியின்மீதில்
எல்லையுங்கடந்தேயப்பா லேகமானவர்களிற்பார்

சோழராஜன்-விருத்தம்

வருமவினைபயனைநீக்கும் மாதவமுனிவனேநீர்
தருமமுந்தானஞ்செய்யும் தயாளபட்சகரேநீரும்

பிரியமதாகநீரும் பேசியபோதிலேயே
இரும்பிருப்ஐயரேநீர்தான் பிசுமுத்தியாய் பேசவேண்டாம்

கபிலர்-விருத்தம்

இரும்பிருமென்றுசொன்னீர் இருமோர்வஞ்சமேயற்கு
தருபொருளுணர்க்கு மனசவ சகல முமெனக் குறம்நீக்கி
மருட்டுவிளையும் நீக்கி மசி [illegible] வுண்மைஞானம்
பொருந்தினநிரும்பார்யின்பு பெற்று தவத்திருக்கார் தாமே

சோழராஜன்-விருத்தம்

ஆதிசஞ்சாரஞ்செய்யும் புண்ணியவானுங்களைப்போல்
தேசமும்மன்னனென்று சேதிகேட்டிருந்[illegible]டோம்
காமமுந்தெரிந்துக்கொள்ள நான்கேட்டேன் கோபம்வேண்
போம்போமையா நீர்தான் பிறப்பட்டுப் போமிடத்தை

கபிலர்-விருத்தம்

போமெனவுரைத்திரென்[illegible] பொரியொடுபுலன்களைக் து
ஆமெனும்பச்சையோடு மகிழ்தனைமதித்துக்கொண்டு
ஏமமும்சாமமற்றே இரவொடுபகலுமற்று
சோமனுர்பதியைவிட்டுத் துறந்தவர்போவாரன்றோ

சோழராஜன்-விருத்தம்

[illegible]னமையா சகலமுந்தெரிந்தின்முன்
மறுமொழி சொல்வதற்கு வகையில்லாமனிதன்யானும்
இருசொல்லாமலுன்தன் சேதியைப்புத்தனுக்கு
பிரியமாய்ச்சொல்வேனும் பேதகனவதாக

கபிலர்-விருத்தம்

அன்னையாரென்றுகேட்டா யிராஜனேசொல்லக்கேளாய்
கன்னியாளவளோயின்று காட்டினிலெறிந்துபோனான்
வர்ணமாபெயெடுத்து வளர்த்தனர்பிராமணனும்
இன்னிலத்தனிலென்சேதி இதுவேதான்வேறொன்றில்லை

சோழராஜன்-விருத்தம்

ஊர்பேருஞ்சொல்லாமல்நீர் உத்தாறும்பெண்ணுஞ்சேர்
ஆரோதானென்னைப்பெற்று அடவியில்போட்டாரென்றாய்



பேசினவனுந்தானெனைப் பெற்றதாய்தந்தையாரோ
பிருடன்பெயருமக்கு தெரிந்தியம்புவாய்செய்வாயே

கபிலர்-விருத்தம்

பகவனென்னும் ஆதியுடன் பரிவுடன்சேர்ந்தேதாம்
பரதேசம் சென்றார்கள்
பெண்பாலர்நால்வரோடு ஆண்பாலர்மூவரும்
பாலரைவிட்டுப்பிரிந்தே
வண்கையாம் உப்பையை நத்துக்காடதில்வண்ணார்
வளர்த்தார்கள் மாரியென்று
நானமாம் உறுவையை கூடிவாழ்ந்தேசிசாணர்
வளர்த்தார்கள் காளியென்று
சகம்பெரும்வள்ளியை பிசக்குறவர்
அப்பிராமணியர்க்களித்தார்
சொற்பெரும்வவ்வையை வாதவூர்பாட்டகர்
சொருசாக வேவளர்த்தார்
அருமையினும் வள்ளுவர் [illegible] நயரிடத்தினும்
அதிகமான் அரசர்களிடத்தினும்வளர்த்தார்
அவ்வாசுகியோடு நான் திருவாரூர் தன்னிலே
அந்தணரிடம் வளர்ந்தேன்

வசனம்

கேளும் சோழமகாராஜனே என் தகப்பன் பகவன் என்
தாயார்பேர் ஆதியம்மாள் இவர்களிரண்டுபேரும் காமப்பெரும்
சேர்ந்தபோதில் கிறிசின்டாகையால் தங்காமல் அப்போதே
பெற்றபிள்ளைகள் பெண்பால் நால்வர் ஆண்பால் மூவர்
நாங்கள் ஆயதகப்பன் தேசசஞ்சாரஞ்செய்கிறவர்களாகையால்
அவர்கள் எந்தவிடத்தில் சேருகிறார்களோ அந்தவிடத்தில் பிறந்
தசிசுவைப்போட்டுவிட்டுப்போனார்கள் முதலில் அவர்கள் சேரும்
போது ஔவை பிறந்தாள் அந்தசிசுவை வாதவூர் பாட்டகர்
வளர்த்துவந்தார்கள், பிறகு உப்பை பிறந்தாள் அந்த சிசுவை
நத்தக்காட்டு வண்ணார் எடுத்து வளர்த்துக்கொண்டார்கள்
அவள்தான் (மாரியம்மன்) அதன்பிறகு அவர்கள்சேரும்போது
கூடிவாழ்ந்தேசிசாணருவை பிறந்தாள் அந்த சிசுவை கூடிவாழ்

சேரி சாணூர் எடுத்துவளர்த்துக்கொண்டார்கள் அந்த உருவை தான் (காளியம்மன்) மறுபடியும் கொஞ்சி சாலையில் வள்ளியம் மன்பிறந்தாள் அந்தசிசுவை குறவர் எடுத்துவளர்த்து சுப்பிரம ணியருக்குக் கலியாணஞ்செய்துவைத்தார் அதன்பிறகு திருவள் ளுவர்பிறந்தார் அந்தசிசுவை செங்கல்மயிலாப்பூர் பறையர்கள் எடு த்துவளர்த்துக்கொண்டார்கள் அதின்பிறகு அதமான்பிறந்தார் அந்தசிசுவை சோழதேசத்தரசர் வளர்த்தார் [illegible] அப்பி ல் யான்பிறந்து திருவாரூர்பிராமணரால் வளர்க்கப்பட்டு அவா ளிடத்திலேயே நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்து நான்கு கலைக்கியானமுங் கற்று தெளிவுபிறந்து தேச சஞ்சாரஞ்செய்ய வந்தேனென்பேர் கபிலமுனி இப்படியென்றுடன் [illegible] னர் ஆறுபேர் ஆகஎன்னுடன்சேர்த்து ஏழுபேரையாசோழமகா ராசனே.

சோழராஜன்-வசனம்.

சேரும் கபிலமாமுனிவே நாலுவேதமும் ஆறுசாஸ்திரமும் அறுபத்திநான்கு கலைக்கியானமுங் கற்று தேச சஞ்சாரஞ்செய் துவந்திரே அந்தந்த தேசத்திலுண்டான அதிசயமென்ன அங்கு நடக்கிறவிதமென்ன தெரியச்சொல்லும்முனிவே.

கபிலர்-வசனம்

ஆகாசம், பூமி, இரண்டு. சூரியன், சந்திரன், இரண்டு. தா யும், தகப்பன், இரண்டு. பாவம், புண்ணியம், இரண்டு. சத்தியம் அசத்தியம், இரண்டு. நன்மை, தீமை, இரண்டு. பிறப்பது பிறப் பது, இரண்டு. ஆண்சாதி, பெண்சாதி, இரண்டு இப்படியெல்லா ம் இரண்டேயொழிய வேறில்லை இந்த ஆண்சாதிபெண்சாதியில் புரியாகப்பட்டவள் எந்தசாதிபுருஷனுடன் இச்சைபட்டு சேரு கிறளோ அதுவேதான் அவளுக்குபுருஷனையா ராஜனே.

சோழராஜன்-வசனம்.

அப்படி யாருக்கடைத்திருக்கின்றது சொல்லுஞ்சுவாமி.

கபிலமுனி-தரு-அடதாளம்

கண்ணிகள்

திருஷ்டிக்குப்பிரமாவுக்கு தேவியென்றோர்தேவதாசி அவள்வயிற்றில்வசிஷ்டருமே அம்பாதலேதான்பிறந்தார்



பிறந்தவசிஷ்டருக்கு பெண்வெந்தசாருந்ததி அருந்ததிதன்வயற்றில் அமர்ந்திருந்தசாத்மீகருக்கு புங்கனூர்மசலஞ்சிபெண்டாகவேசுந்தவேயா பறைச்சிவயற்றில்பிறந்தபராசமுனிக்கிவொரு பெண்டார்த்தாளம்பீன்வலைச்சியிற்பிறந்தாள்வியாசமுனி நாலுவேதம்பிரமகுலம் நாங்களென்றுபெருமைகொல்லி அந்தணர்க்கும் அதருக்கும் அமர்ந்தகுருவாக.

(நன்றாக நன்றாக)

கபிலர்-வசனம்.

சேத்திலேபிறந்த செங்கழுனீர்போல சீராகத்திவட்டில் பிறந்தவசிஷ்டருக்கு சண்டாளச்சிவயிற்றில் பிறந்த சாத்மீகர் சாத்மீகருக்கு புங்கனூர் தொள்ளமள்ளிடத்தில் பிறந்த பராச ருக்கு மச்சகந்தி மச்சகந்தி வயிற்றில் பிறந்த வேதவியாசர் அரு ந்ததிகரும்பறைச்சிவயற்றில்பிறந்த கபிலமாமுனிநானே இவர்கள் நாலுபேரும் பிரமகுலம் நாங்களென்று அந்தணர்க்கும் அரசர் க்கும் குருவாகவிளங்குகிறுரையா ராஜனே

மங்களம்.

இ-ம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம்
மங்களம் மங்களம்

ஜெயமங்கள

அநுபல்லவி,

மங்களம்சித்தி கணேசர்க்கும் வல்லமை
சரவணபவர்க்கும் சண்முகர்வள்ளிக்கும்

(மங்களம்)

சரணங்கள்.

சங்கரன்மாதுக்கும் சதுர்முகதேவனுக்கும்
மங்கையர்தர்க்கும் மார்வதிதேவிக்கும்

(மங்களம்)

ஆதியும்பகவர்க்கும் அருளபாலரெழுவர்க்கும்
நீதியாமெண்மருக்கும் நிதிகளுக்கும்

(மங்களம்)

ஆதிநாடகந்தன்னை அன்பாய்ப்படிப்பவர்க்கும்
சோதியாமவர்க்குஞ் சித்தப்பூர்களுக்கும்

(மங்களம்)

வாழி-விருத்தம்.

அரனயன்வாழி ஆதியும்வாழி அமரர்வாழி
கருஞ்சித்தர்வாழி தபசெலாம்வாழி ரவிமதியும்வாழி
வரமதாம்புத்தவர் பெருவரும்வாழி வாணிவீச்சம்வாழி
குருபரம்வாழி இந்ஞாலப்புவியில் குறைவின்றி வாழிவாழி

—(௧)—

ஆதிநாடகம்.

முற்றிற்று.